PRM
பொதிகை
Phothihai
உங்களுக்குத் தேவையான இலங்கை இந்திய உணவுப் பொருட்களை நியாயமான விலையிலும், தரமான சேவையுடனும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்!
Contact : 015 1259 8115
394/396 Prescot road, Liverpool L13 3DA

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்
ORU PAPER

FREE

PAPER - 07 ◆ ISSUE - 134 ◆ 15 FRIDAY OCTOBER 2010

RAJA & CO SOLICITORS
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
➤ Criminal Cases
➤ Civil Litigation
➤ Family
➤ Immigration
TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900
COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




SRINIVASANS SOLICITORS

சகல விதமான சட்டப் பிரச்சனைகளிற்கும் நிபுணத்துவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் சட்ட ஆலோசனை வழங்கும் நிறுவனம். தற்போது பின்வரும் பிரச்சனைகளுக்கு ஆரம்ப இலவச சட்ட ஆலோசனையை தமிழ் மொழியில் வழங்கி வருகின்றோம்.

- 5ம் திகதி மார்ச் மாதம் 2007 ஆண்டுக்கு முன்னர் அகதி தஞ்ச விண்ணப்பம் கோரி இன்னமும் நிரந்தர விதிவித உரிமை கிடைக்கவில்லையா?
- அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட பின்னர், Fresh Application அல்லது மேலதிக விண்ணப்பம் - Home Officeக்கு செய்தும் 12 மாதகாலமாக அல்லது அதற்கு மேலாகியும் எந்தவித பதிலும் கிடைக்கவில்லையா?
- சரியான முறையில் Legacy விண்ணப்பம் செய்தும் இன்னும் உங்களிற்கு எந்தவித பதிலும் கிடைக்கவில்லையா?
- 9ம் திகதி September 2010ல் வந்த புதிய சட்ட கொள்கைப்படி வேலை செய்வதற்கான உரிமை கோரும் விண்ணப்பம் செய்தீர்களா?

Head Office
2nd Floor, 7A High Street,
Wanstead London E11 2AA

மேலதிக சட்ட ஆலோசனைகளிற்கு அழையுங்கள்:
Mr.ஸ்ரீனிவாசன் அல்லது Mr. கலாதரன்
Call : 020 8989 2956 / 07827 452 683

Ersan & Co
SOLICITORS

Ersans has a wealth of experience in providing specialist help and advice for Personal Injury claims. We offer a free assessment of your claim and a "No Win No Fee" package to ensure that no deductions are made from any compensation to which you may be entitled.

"We will make sure that you will receive 100% of your compensation and our service will not cost you a penny"

தனியாருக்கு ஏற்படும் காயங்களுக்கு நட்டஈடு பெறுவதற்கு உதவிசெய்வதில், 'எர்சன்ஸ்' (Ersans) சிறந்த அநுபவம் உடையவர்கள். உங்களுடைய விண்ணப்பத்தை இலவசமாகப் பரிசீலனை செய்து, 'வெற்றியில்லையேல் கட்டணம் இல்லை' என்ற அடிப்படையில் எவ்விதக் கழிவும் இன்றி உங்களுக்குரிய நட்டஈட்டுத் தொகை கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளோம்.

உங்களுடைய நட்டஈட்டுத்தொகை 100 சதவீதம் உங்களுக்குக் கிடைக்கவும், எமது சேவைக்காக உங்களுக்கு எவ்வித செலவும் இல்லாதிருக்கவும் உறுதிசெய்வோம்.

ERSAN & CO
SOLICITORS







7 Willoughby Road, Turnpike Lane, London N8 0HR
Tel: 0208 342 7070
Fax: 0208 342 7071 Mobile: 07816 646345
E-mail: info@ersans.co.uk

SAME DAY UK VISA SERVICES
Indefinite Leave to Remain(ILR)
One Day Visa Service From: £299
OISC Registered Immigration Advisor
K. KANDEL
Contact Us for more information
TEL: 0208 572 6386
MOB: 07772 641 180
www.ukvisaexpert.com
NO WIN NO FEE
KAMAL KANDEL OISC N:F200700150
www.ukvisaexpert.com
4 Hazel House, Pownall Road, TW3 1YN

1 stop shop for all your party needs
saree, lengha, salwar ...
stage decor, manavarai, catering, photo, video, make up, chocolate fountain, DJ, chair covers ...
Amani
Bridal Boutique Wedding Planners Event coordinators
294 London Road, Croydon, CR0 2TG
Tel: 020 8684 3195 www.amani.co.uk

வாழ்க்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



# SRI KANTH & CO SOLICITORS

**We practice in the following areas of law:**

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW || www.srikanthsolicitors.co.uk

**Tel: 020 8795 0648 Mob: 07831 195 979**

**Fax: 020 8795 0649**




**FREE 3 YEARS WARRNTY & BARCODE PRINTER**

# Spicy Village

## Indian & Srilankan Cuisine

*We cater all indian and sri lankan food*

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

- 3 Mutton Roll or 3 Veg Rolls .......... £ 1.20
- 3 Fish Cutlet .......... £ 1
- 3 Paties .......... £ 1
- 3 Masala Vadai .......... £ 1
- Chicken Briyani .......... £ 2.99

Take away ONLY

100 இடியப்பம், சொதி, சம்பல், உருளைக் கிழங்கு மற்றும் பருப்பு கறி **£ 9.99 Only** Takeaway Only

அப்பம், தோசை என்பனவற்றை தரமாகவும் சுவையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**FREE DELIVERY ON MINIMUM**
ORDER £10 WITHIN 3 MILES RADIUS.
OVER £40 WITHIN 5 MILES RADIUS
OVER £150 WITHIN 10 MILES RADIUS



உங்கள் திருமணம், பிறந்தநாள், அரங்கேற்றம் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளுக்கான அனைத்து வகையான இலங்கை, இந்திய உணவு வகைகளை தரமாகவும் நிறைந்த சுவையுடனும் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

(பிற நகரங்களுக்கும் விநியோகம் செய்யப்படும்.)

86 Brighton Road, Purley CR8 4DA

**TP: 020 8660 0956**

## ஒரு குறிப்பிட்ட அல்லது நீண்டகாலமான தோல்வியாதிகளால் அவதியுறுகின்றீர்களா?

பின்வரும் தோல் வியாதிகளிற்கு மூலிகை வைத்தியத்தின் மூலம் எம்மிடம் உங்களுக்கான சிகிச்சை உண்டு.

உங்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் இங்கே தீர்வு உண்டு.

we may have herbal solutions for your Skin Problem

Eczema, Vitiligo, Psoriasis, Allergy, Itching, Blemishes, Acne, Pimples, Boils, Urticaria, Discolouration, Melasma etc.



**10 Park Avenue, Southall, Middx UB1 3AQ**

herbalaid@hotmail.co.uk

Tel : 02088430330 Mobile : 07546651898

herbalAid




*Arumbukal Marriage Brokers*

Tel : 02086821057 | 020 3318 8848

Mob: 07889 930 130 Fax : 02086821057

E.Mail : info.arumbukal@gmail.com




### பிரேமச்சந்திரன் வோக் போகலாம்

தமிழ் தேசியக் கூட்டணி எம்பிமார் அடிக்கடி தாங்கள் அகிம்சை முறையிலை போராடப் போவதாக சவுண்ட் விடுகிறார்கள். லண்டன் வந்திருக்கும் சுரெஸ் பிரேமச் சந்திரனும் இவ்வாறு கூறியதாக இணையதளம் ஒன்றில் போட்டிருக்கிறார்கள். இது பொய் என்பது அவர்களுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும். ஆனால் இவர்கள் உண்ணாவிரதம், பாதயாத்திரை என்று ஏதாவது செய்தார்கள் என்றால் அவர்களது உடல் நலத்திற்கு நல்லது. சென்னைக்கு போய் வைத்தியசாலையில் படுக்கத் தேவையில்லை. எனது சின்ன அட்வைஸ் அவ்வளவுதான்.

*- மங்கயர்க்கரசி*

### கிழக்கில் உதித்த தேசியச் சுடர்

மாணவப் பராயத்திலேயே போராடப் புறப்படடவர் லெப்ரினன்ற் பரமதேவா. அவரைப் பற்றிய நினைவுக் குறிப்பினை பிரசுரித்தமைக்காக ஒரு பேப்பர் க்கு நன்றி செலுத்துகின்றேன். இதுபோல் மற்றய மாவீரர்கள் பற்றியும் எழுதிப் பிரசுரியுங்கள்.

*- சிவபிரான்*

### சைவப் பெரியார்கள் பற்றி ஏன் எழுதக் கூடாது?

ஒரு பேப்பர் ரில் எல்லாவற்றையும் எழுதுகிறீர்கள். எமது சைவப் பெரியார்களைப் பற்றி ஏன் எழுதுகிறீர்கள் இல்லை. நல்லைநகர் ஆறுமுக நாவலர், யோகர் சுவாமிகள், விபுலானந்த அடிகள் போன்றோரைப் பற்றி வருங்கால சந்ததி அறிகிற விதத்தில் தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைகளை எழுதி அனுப்பினால் பிரசுரிப்பீர்களா?

*- சிவயோகம்*

### கூழ் யாழ்ப்பாணத்திலாம்..

யாழ்ப்பாண மக்களின் பழக்க வழக்கங்கள் பற்றி பலான கதைகள் எழுதிய ரத்தினஜீவன் கூல் யாழ்ப்பாணத்திற்கு சென்று, யாழ் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக முயற்சிக்கிறாராம். இவருக்கு தேசம்நெற் காரர் சப்போர்ட் தேடுகிறார்களாம். யாழ்ப்பாணத்தை அழிக்கிற தெண்டேட முடிவெடுத்திட்டாங்கள். என்ன செய்யிறது இப்ப இவங்களின்ரை காலம்.

*- தர்மா*

### தாடியை காப்பாற்றிய வித்தி

டக்கிளஸ்தேவானந்தாவோடைதான் நல்ல உறவு வைத்திருந்ததாயும், அவரைப் பற்றிய தகவல்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்காமல் தான் அவரது உயிரை காப்பாற்றியதாக கூறியிருக்கிறார் முன்னாள் ஊடகவியலாளரும் தற்போதைய அரசியல்வாதியுமான வித்தியாதரன். இதில் அவர் சொல்லாத ஒரு செய்தியும் இருக்கும். இப்படியெல்லாம் செய்த எனக்கு முதலமைச்சர் பதவியை ஏன் விட்டுக் கொடுக்கக் கூடாது தோலர்?

*- சரவணசிவா*

### நடந்தது என்ன?

உண்மையில் நடந்த சம்பவங்களை, கற்பனையுடன் கலந்து உலக நடப்பு என்ற அட்டவணையின் கீழ், தகவல் களஞ்சியத்தில் அடக்கியுள்ளேன். இதனை வாசிப்பவர்கள், எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதே எனது நோக்கமாகும். வாசகர்களின் கருத்தக்கள் வரவேற்கப்படுகின்றன.

*- உமா மகாலிங்கம்.*

### சினிமா பாகம் தேவைதானா?

நல்ல விசய தானங்களாகத் தருகின்ற ஒரு பேப்பர் இல் ஒன்றுக்கும் உதவாத சினிமாப் பக்கங்கள் தேவைதானா? ஒரு அவல கதிக்கு எமது அரசியல் வாழ்வு வந்துவிட்ட நிலையில் அது பற்றிய விமர்சனங்களைத் தருவதுதானே ஒரு பேப்பர் ருக்கு அழகு. சரி சினிமாவை விரும்புகிறவர்களும் ஒரு பேப்பர் வாசிப்பார்கள் என்றால் சினிமா தொடர்பான தரமான தகவல்களைத் தரலாமே..! ஒவ்வொரு பக்கத்துக்கும் பெறுமதி உண்டு. பெறுமதி குறையாது ஒரு பேப்பர் ரை பார்த்துக் கொள்ளுங்கள்.

*- திவாகரன்.*

### பாமரன் பாமரன்தான்.

ராஜராஜசோழன் பற்றி பாமரன் எழுதியது என்றும் எனக்கு உடன்பானதல்ல. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆண்ட ஒரு மன்னன் அவர். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இப்போதுள்ள முற்போக்கு சிந்தனைகள் இருக்கும் என்று சொல்ல முடியாது. அப்போது உலகெங்கும் உள்ள முடி மன்னர்கள் எவ்வாறு இருந்தார்களோ அவ்வாறே ராஜராஜ சோழனும் இருந்திருக்கலாம். அப்படி இருந்தும் குடவோலை முறை மூலம் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் ஜனநாயக முறையையும் கொண்டு வந்தவர். இது ஒரு முற்போக்கு சிந்தனைதான். ராஜராஜசோழனைப் போற்ற பல காரணங்கள் உண்டு. இகழ இருக்கும் காரணங்கள் ஒரு சிலவே.

*- தவசீலன்.*

### ஊரின் வாசனை போதாது.

ஊரின் வாசம் எழுதும் ஜெயபாலன் ஊருக்கு எங்களைக் கூட்டிச் செல்கிறார் என்பது உண்மை, ஆனால் நடுவழியில் விட்டுவிட்டு வந்து விடுகிறார். 'புரட்டாதிச்சனி' பற்றி எழுதினாலும் புரட்டாதிச் சனியில் தன் அனுபவம் பற்றியும் கொஞ்சமாவது எழுத வேண்டும். அதை விட்டுவிட்டு புரட்டாதிச் சனியை கொண்டாட வேண்டுமா என்கிற மாதிரி எங்களுக்கு அட்வைஸ் தருகிறார். அட்வைஸ் கேட்டு அலுத்துப் போய்விட்டது. தனது அனுபவங்களை எங்களுடன் பகிரட்டுமே..!

*- ராமநாதன்*

### மீண்டுமொரு அமிர்தலிங்கங்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பிக்கள் ஒருவரும் ஊரில் இல்லைபோல் தெரிகிறது. சம்பரதர் இந்தியாவில். சுரேஸ் பிரேமச்சந்திரன் ஐரோப்பாவில். ஒருவர் மாறி ஒருவர் உலகச் சுற்றுப் பயணம் செல்கிறார்கள். இதற்காகவா வாக்குகள் வழங்கி தமிழ் மக்கள் இவர்களைத் தங்கள் பிரதிநிதிகள் என தெரிவு செய்தனர்? தமிழ் மக்களின் எதிரியான டக்ளசே தமிழ் மக்களுடன் நெருங்கி இருக்கிறான். தமிழ் மக்களின் பிரச்சினைகளை அங்கிருந்து கொண்டே ஏன் இவர்களால் குரல் கொடுக்க முடியாதிருக்கிறது? அகிம்சை முறையிலாவது போராடலாமே. அங்குள்ள பிரச்சினைகளை ஐரோப்பாவுக்கு வந்து சொல்லி என்ன பிரயோசனம்? மீண்டுமொரு அமிர்தலிங்கங்கள் தான் இவர்கள்.

*- அழகு*

### தம்பி எண்ணும் பொன்சேகா

சில வருடங்களுக்கு முன்பு பொன்சேகா தமிழர்களைப் பார்த்து 'தமிழர்கள் இங்கு சிறிலங்காவில் இருக்கலாம். ஆனால் உரிமை கேட்கக் கூடாது. நாங்கள் சிங்களவர்கள் தாறதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்' கேட்டார். இப்பொழுது பொன்சேகா, மகிந்தா வழங்கும் சிறை உணவினை உண்டு அழுது, விரக்தியுடன் வாழ்கிறார்.

*- கந்தப்பு (யாழில்)*

> ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ள முடியும்.
>
> பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கான இலக்கம் 020 7043 4314.
>
> ஆ—ர்

## எனது அன்பான தமிழர்களுக்கு!

நீங்கள் நண்பர்களின் கலியாணச்சடங்கு சாமத்தியச்சடங்கு என்று போனால், சடங்கு முடியுதோ இல்லையோ சாப்பாடு தயார் என்றதும் நல்ல பிடி ஒன்று பிடிக்கவேண்டும். ஆனால் காசோலை பரிசாக கொடுக்கும் போது பெரிய தொகையாகப் போட்டுவிட்டு மறந்து போன மாதிரி கையெழுத்தை போடாமல் விட்டுவிட வேண்டும். திரும்பி வீடு வரும் போது அவர்களின் சாப்பாடு சரியில்லை என்று குறை சொல்லவும் மறக்க வேண்டாம்.

நீங்கள் குடியிருக்கும் தெருவில் வேறு தமிழர்கள் யாராவது குடிவந்துவிட்டால், அவர்களைப் பார்க்கும் போது அருவருப்போடு பாருங்கோ. அத்தோடும் விட்டுவிடாது, நண்பர்கள் உறவினர்களுக்கும் சொல்லுங்கோ எங்களுடைய தெருவில் வேறும் சில எங்கடை சனியனுகள் குடி வந்திருக்குதுகள் என்று.

நீங்கள் நடைபாதையில் நடக்கும் போது எதிரே வேற்று இனத்தவர் யாராவது வந்தால், அவர்களை விலத்தும் போது கொஞ்சம் ஒதுங்கி மெதுவாக முகம் மலர்ந்து நீங்களே நன்றியும் சொல்லி விலத்தி விடுங்கோ, ஆனால் அதே மாதிரி தமிழர்கள் யாராவது வருவார்களானால் விறைத்துப் பார்த்தபடி விலத்தி இடங் கொடுக்காது திமிராக நடந்து போங்கோ.

நீங்கள் தெருவில் நடந்து போகும் போது இருமல் வந்தால், நன்றாய் இருமி காறித் துப்புங்கோ. தும்மல் வந்தால், கையொன்றும் மூடாமல் நல்லாய் மேலே வளைந்து ஆவென்று தும்மிவிட்டு, கடடை விரலையும் ஆள்காட்டி விரலையும் மூக்கில் இருபக்கமும் அணைத்துப் பிடித்து சீறி எறிய வேண்டும். திரும்பவும் ஒரு பக்க மூக்கை மூடி மறுபக்கம் சீற வேண்டும். இப்படி மாறி மாறி நடந்து நடந்தே செய்யுங்கோ. ஆனால் வேறு யாராவது தமிழர்கள் இதை செய்யும் போது கண்டுவிட்டால் சனியனுகள் மானத்தை வேண்டுதுகள் என்று பேசுங்கோ.

நீங்கள் சாப்பாட்டு நேரமாகப் பார்த்து கோவில் கும்பிடப் போங்கோ. அங்கு போனவுடன் ஒரு பவுண் கொடுத்து ஒரு பற்றச் சீட்டை வேண்டி அர்ச்சனை செய்துவிட்டு நேரே சாப்பாடு இருக்குமிடம் போங்கோ. அங்கே சாப்பாடு எவ்வளவு இருக்கின்றது, ஆட்கள் எவ்வளவு பேர் நிற்கின்றார்கள் என்று கணக்கெடுத்து விட்டு கோப்பையில் நிறையப் போட்டு மூக்கு முட்ட சாப்பிட்டு விட்டு அதிலிருக்கும் கடதாசிக் கோப்பையில் சாப்பாட்டை போட்டு இன்னுமொரு கோப்பையால் பக்கவமாக மூடி வீட்டிலிருந்து கொண்டு போன பையில் எடுத்து சாப்பாட்டை வைத்து பக்குவ்மாக நெஞ்சோடு அணைத்தபடி வீட்டுக்குப் போக வேண்டும்.

உங்கள் பிள்ளைகள் படிப்பில் நன்றாக இருந்தாலும் காணாது, போதாது என்று அவற்றை பிள்ளை படிக்குது, அண்ணன் பிள்ளை, தங்கை பிள்ளை படிக்குது உனக்கு ஏன் முடியவில்லை என்று பிள்ளையின் பெயரை சொல்லாது நாய், பேய், வாடா, போடாவென்று தாறுமாறாக பேசுங்கோ.

நீங்கள் நண்பர்கள், அல்லது தெரிந்தவர்களோடு வெளியில் சென்று ஏதாவது சாப்பிடவோ அல்லது பங்கிடும் படியாக ஏதாவது வேண்டினால், மற்றவர் பணத்தை எடுக்கும் வரைக்கும் நீங்களும் பணத்தை எடுப்பதுபோல் காற்சட்டை பையில் கையை விட்டு துளாவியபடி இருங்கோ. மற்றவரும் கொஞ்சம் சுணங்கினால் நீங்களும் தொடர்ந்து கையை விட்டு துளாவுங்கோ. பணத்தை வெளியே எடுக்கவே கூடாது. மற்றவர் ஒருவர் இனி தாங்காது என்று நினைத்து பணத்ந்த எடுத்து கடைக்காரரின் கையில் வைக்கும் போதுதான், நீங்கள் பணத்தை எடுத்து நான் கொடுக்கிறேன், நான் கொடுக்கிறேன் என்று நடியுங்கோ.

நீங்கள் வாகனம் ஓட்டும் போது ஆயிரம் பிழை விடுங்கோ. எதிரே வருபவர்களும் ஆயிரம் பிழைகள் விடட்டும் கண்டும் காணாது இருங்கோ, ஆனால் எதிரே வருபவர் தமிழராயும் இருந்து ஒரு சிறிய பிழையும் விட்டு விட்டால் துர்வசனத்தால் பேச மறக்காதையுங்கோ.

*- வ. கணேஷ்*

### பருத்தித்துறை நெடுஞ்சாலை அபிவிருத்தி

ஏற்கனவே கட்டி அமைக்க பட்டு இருக்கும் மக்களின் வாழ்வாதாரங்களிலை இருந்து வலுக்கட்டாயமாக அகற்றி அவற்றை இடிச்சு அழித்து பிச்சை காறர் ஆக்கிறதுக்கு பெயர் அபிவிருத்தி இல்லை..! மக்களின் விருப்பை கேட்டு, நட்ட வீடுகள் வழங்கி போதுமான கால அவகாசம் வழங்கி அவர்களை வேறு நிலையெடுப்புக்கள் செய்ய வசதி செய்து கொடுக்க பட வேண்டும் எண்டது மேற்கத்திய நாடுகளின் நடை முறை...

*- தயா (யாழில்)*




ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, OCTOBER 15, 2010, ISSUE 134

## நிராகரிக்கப்பட வேண்டிய விசாரணைக் குழு

சிறிலங்கா அரசாங்கம் ஒரு இனப்படுகொலையை தொடர்ந்து வருகிறது என்ற விடயத்தினை ஏற்க மறுப்பவர்கள் கூட, அது புரிந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி வருகிறார்கள். இதில் அறம் சார்ந்து செயற் படும் எவருக்கும் மாற்றுக் கருத்திருக்காது. இருப்பினும், நடந்த அவலங்களை மறந்துவிட்டு, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்தும் சில தரப்புகளால் முன்வைக்கப்படுகின்றன.

இவ்விரு தரப்பினரையும் திருப்திப்படுத்தும் வகையில், தாம் உள்ளக விசாரணைகளை மேற்கொள்ளுவதாக, 'கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு' என்ற பெயரிலான ஒரு விசாரணைக் குழு வினை சிறிலங்கா அரசாங்கம் அமைத்துள்ளது. கண்துடைப்பிற்காக உருவாக்கப் பட்ட இவ்விசாரணைக்குழுவின் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை பரப்பரப் பாக வெளியிட்டுவரும் தமிழ் ஊடகங்கள், தெரிந்தோ தெரியாமலோ சிறிலங்கா அரசாங்கத்தின் பரப்புரைக்கு உதவி வருகின்றன.

இந்நிலையில் மேற்படி ஆணைக்குழு முன் தோன்றி சாட்சியமளிக்க வருமாறு சிறிலங்கா அரசாங்கம் விடுத்த அழைப்பினை சர்வதேச மனிதவுரிமை அமைப்பு கள் நிராகரித்துள்ளன. பாகுபாடற்ற முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வரும் இவ்வமைப்புகள் சிறிலங்காவின் விசாரணைக் குழுவினை அவ்வாறானதொன்றாக கருதவில்லை.

அறம்சார்ந்த வெளிவிவகாரக் கொள்கைகளை கடைப்பிடிக்க முனையும் எந்தவொரு நாடும் சிறிலங்கா விடயத்தில் மெத்தனம் காட்ட முடியாது. இருப்பினும் அவ்வப்போது வெளிநாட்டு இராசதந்திரிகளால் வெளியிடப்படும் கருத்துகளும், அவர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் அவர்களது வெளியுறவுக் கொள்கைகளை கேள்விக்குரியதாக்குவதாக அமைந்து விடுகின்றன.

புதுடில்லியில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளை யாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் வைபவத்திற்கு மகிந்த இராஜபக்ச அழைக்கப் பட்டிருப்பது சர்ச்சையைக் கிளப்பியுள்ளதாக 'த கார்டியன்' ஏடு கருத்து வெளியிட் டுள்ளது. தவிரவும் பொதுநலவாய அமைப்பு, தமது உறுப்புரிமை நாடுகளில் மனிதவுரிமைகள் மீறப்படும் விடயத்தினை கண்டு கொள்ளாமல் இருப்பதாக மேற்படி பத்திரிகை குற்றம் சாட்டியிருந்தது.

கடந்த அறுபது வருடகால வரலாற்றில் சிறிலங்கா அரசினால் ஏற்படுத்தப்பட்ட எந்த வொரு விசாரணைக் குழுவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவில்லை, மாறாக அவற்றில் இனவழிப்பை நியாயப்படுத்தும் பரப்புரைகளே மேற்கொள்ளப்பட்டன.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*கடந்த பேப்பர்களில் ஆசிரியர் குழுவில் உள்ளவையளே ஒண்டுக் கொண்டு முரண்பாடான கருத்துகளை தங்கடை கட்டுரைகளிலை வெளியிட்டிருக்கிறதாகவும், அதாலை தாங்கள் குழம்பிப்போயிருக்கிறதாகவும் பலர் எங்களிட்டை முறைப்பட்டிருக்கினம். வெளியிலை நிலமை குழப்பமாய் இருக்கிறதாலை நாங்களும் குழம்பிப் போயிருக்கிறதாகச் சொல்லி நாங்கள் தப்பிக் கொள்ளேல்லை. **ஒரு பேப்பர்** குழு தனது நிலைப்பாட்டிலை தெளிவாகவே இருக்குது. இருந்தாலும் நடைமுறையிலை சில விடயங்கள் தொடர்பில் மாறுபாடான கருத்துகள் உலாவுவதை பதிவு செய்ய விரும்பிறம். இதிலை எங்கை நியாயம் இருக்குது எண்டு தீர்மானிக்கப் போவது நீங்கள்தான்.*

*தமிழ் ஊடகங்களிலை அநாமதேயங்கள் நிரம்பி வழியிறதாலையும், அடிக்கடி முகமில்லாத மனிதர்கள் ஊடகங்களில் கருத்துச் சொல்லப் புறப்பட்டிருக்கிறதாலையும், **ஒரு பேப்பர்** ரில் எழுதுபவர்களை அவர்களது சொந்தப் பெயரிலை எழுதுமாறு கேட்கிறம். அதுக்காக புனைபெயரிலை எழுதினால் போடமாட்டம் எண்டில்லை.*

*உங்களது ஆக்கங்களை வாய்மொழி மூலமாக பதிவு செய்ய விரும்பிகிறவை, பூராயம் பகுதிக்கென வழங்கப்பட்டிருக்கிறவை 020 7043 4314 எண்ட போன் நம்பரிலை தொடர்பு கொண்டு. குரல் அஞ்சலில் பதிவு செய்யலாம். தெளிவான வாசிப்பு அவசியம். இல்லை எண்டால் நீங்கள் என்னவோ சொல்லி வைக்க, பானுவும், மயூரனும் என்னத்தையோ ரைப் பண்ணி வைப்பினம். மறக்காமல் உங்கடை தொடர்பு விபரங்களையும் சொல்லுங்கோ. ஏனென்டா உங்கடை குரலைக் கொண்டு ஆள் இன்னாராளாத்தான் இருக்கும் எண்டு எங்களாலை ஊகிக்க ஏலாது.*

*லண்டனில் உள்ள தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் உங்களுக்கு **ஒரு பேப்பர்** பிரதிகள் தேவைப்பட்டால் எங்களுக்கு அறிவியுங்கோ. உங்களுக்கு கிரமமாக விநியோகம் செய்யப்படுகிறதை நாங்கள் உறுதி செய்கிறோம். இன்னொன்டை யும் செய்யுங்கோ, உங்கடை பள்ளிக்கூடங்களில் படிக்கிற பிள்ளையளை எழுதுமாறு ஊக்கப்படுத்துங்கோ. பேஸ்புக்கில் எழுதிற மாதிரி இருந்தாலும் பரவாயில்லை சொல்லவாற விசயம் மற்றாக்களுக்கு விளங்கினால் போதும்.*

*விடுமுறையில் வெளிநாட்டுக்கு சென்றிருந்த மட்டைக்கிளப்பான் திரும்ப வந்துவிட்டார், அவரது வெளிநாட்டு அனுபவங்களுடன் அலசுவாரம் அடுத்த பேப்பரிலிருந்து தொடரும்.*

*நொவெம்பர் மாதத்தில் வெளிவரவிருக்கிற இரண்டு பேப்பரிகளிலும். மாவீரர்கள் தொடர்பான விசயங்களை பிரசுரிக்க விரும்புகிறம். ஆகவே கதை, கட்டுரை, கவிதை எழுதிற ஆக்கள் நேரத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளிறம்.*

*வேறை என்ன..,*

*அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

# Claims of tourism boom in Sri Lanka is hollow as the diaspora returning home after so many years.

## Diaspora Tamils contributing towards tourism boom in Sri Lanka



It is not only the Tamil diaspora who are returning home on foreign passports to Sri Lanka, boosting the tourism figures. There are also the the Sinhalese, Muslims and Burgher diaspora who have settled down mainly in Australia, New Zealand, Canada, USA, UK and EU are also visiting Sri Lanka by the thousands after the war ended in May 2009. There are an estimated 25,000 Chinese working in several projects in Sri Lanka. They too creep into Sri Lanka as tourist boosting the Tourist Board figures.

Then we also have the Indians visiting Sri Lanka for various reasons including pilgrimage to Kataragama, Nallur and Trincomalee. An interesting portion also could be the members of the LET and other Indian terrorist also visiting Sri Lanka to meet their Pakistani handlers as well.

This is a dangerous trend in Sri Lanka where the former President of Pakistan who now lives in self imposed exile in London confirmed to the German magazine Der Spigel that the Pakistani government trained and supported militants in Kashmir and other parts of India.

Many in the Tamil diaspora are upset with the TGTE, GTF, CTC and BTF who call for the boycott of garments and under garments from Sri Lanka but refuse to call for the boycott of travel to Sri Lanka nor the purchase of groceries from Sri Lanka. That is mainly because of the big donors to their associations and Government of Tamil Eealam are the Tamil businessman, grocery store owners, and travel agents, as well as the media owners. This is in addition to the 200 odd officials and parliamentarians have family and friends in the above mentioned businesses.

The top travel agents for Sri Lankan Airlines in sales in UK, EU, Canada, and Australia are Tamil owned Travel agencies. Tamils seem to want the cake and eat it. - Tamil Daily News.

"The views of those returned are mixed. Some are aghast, and said 'nothing like the mother land!' Some had undergone bad experience with the paramilitary groups and some Sinhala tourist from the south. Everyone says army is everywhere with the guns."

(October 10, Colombo, Sri Lanka Guardian) Large influx of Diaspora Tamils post defeat of the LTTE is contributing towards tourism boom in Sri Lanka.

The Diaspora Tamils are visiting Sri Lanka for various reasons. Some are visiting to see their kith and kin and some to deal with their property matters.

The Hindu temples festival season also has attracted large numbers of Tamils to the north. The infamous Nallur annual festival has attracted thousands who were longing to attend the festival since they departed from the island some years ago.

The influx is similar to the one post the peace agreement with the LTTE in 2002.

Many of those visiting the north also have undertaken tours in the south.

> An interesting portion also could be the members of the LET and other Indian terrorist also visiting Sri Lanka to meet their Pakistani handlers as well.

The views of those returned are mixed. Some are aghast, and said 'nothing like the mother land!' Some had undergone bad experience with the paramilitary groups and some Sinhala tourist from the south. Everyone says army is everywhere with the guns. So far there is some semblance of normalcy, but they are worried of the guns of the army if there is a violent act by disgruntled chaps.

A mother who went to Jaffna with her two sons who were born in the UK told, her experience in some instances was worrying. When she went to the Maviddapuram temple, she feared something may happen to her sons. The army standing outside the temple and those inside gave strange looks at my sons. 'Of course my children were dressed strangely with their hair westernised with studs in the ears. She quickly left the temple. She also had gone to Keerimalai and was upset that road names and direction in the area were only in Tamil. She had experienced a rowdy scene with the Sinalsese visitors.

Another coupe who went to Jaffna after nineteen years to see their parents encountered a nasty experience when balaclava wearing paramilitary group men entered their parent's house, threatened and intimidated the occupiers to handover a youngster who was not living there. When the men realised they had come to the wrong house they apologised and went to the neighbour's house, where they had snatched a youngster and hand taken him away in a motor bike. The couple since leaving Sri Lanka seems traumatised and said 'We will never or ever would go back to Sri Lanka'.

*Courtesy: Sri Lanka campaign*

# பல்லாயிரம் தமிழ் மக்களின் படுகொலைக்கு காரணமானவர் இந்தியாவின் விருந்தாளி - த கார்டியன்

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர் என குற்றம் சுமத்தப்பட்டுவரும் சிறீலங்கா அரச தலைவர் மகிந்தா ராஜபக்சா இந்திய தலைநகர் புதுடில்லியில் வியாழக்கிழமை (14) நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு போட்டியின் நிறைவு விழாவில் கலந்து கொள்ளவுள்ளார். இளவரசர் எட்வேட்டுடன் அவர் கலந்து கொள்வது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளதாக த கார்டியன் நாளேடு தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர் என குற்றம் சுமத்தப்பட்டுவரும் சிறீலங்கா அரச தலைவர் மகிந்தா ராஜபக்சா இந்திய தலைநகர் புதுடில்லியில் வியாழக்கிழமை (14) நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு போட்டியின் நிறைவு விழாவில் கலந்து கொள்ளவுள்ளார்.

இளவரசர் எட்வேட்டுடன் அவர் கலந்து கொள்வது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. எனினும் மனி உரிமை மீறல்களை மகிந்தா அரசு மறுத்து வருகின்றது.

மகிந்தாவுக்கான அழைப்பை இந்திய அரசும், விழா ஏற்பாட்டாளர்களுமே அனுப்பியதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மகிந்தா புதன்கிழமை (13) இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

பிரித்தானியா மகாராணிக்கு பதிலாக விழாவில் கலந்து கொள்ளும் இளவரசர் எட்வேட்டுக்கு அருகில் மகிந்தா கலந்து கொள்வது மனித உரிமை செயற்பாட்டளர்களிடம் பெரும் விசனங்களை தோற்றுவித்துள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற போரில் பல ஆயிரம் மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு மகிந்தா காரணமானவர் என அவை குற்றம் சுமத்தி வருகின்றன. இந்தப் போரில் அனைத்துலக மனித உரிமை விதிகளையும் சிறீலங்கா அரசு மீறியிருந்தது.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற 64 வயதான மகிந்தா, தான் எத்தனைமுறை வேண்டுமானாலும் பதவி வகிக்கலாம் என சட்டத்தையும் மாற்றியுள்ளார்.

இது ஒரு வன்முறையான, சட்ட ரீதியற்ற நடவடிக்கை என முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஜீவ விஜயசிங்கா தெரிவித்துள்ளார். சிறீலங்கா மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மையானவையல்ல என மக்கள் உணர்ந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்திய அரசும், விழா அமைப்பாளர்களும் இணைந்தே விருந்தினர்களை அழைக்கும் திட்டத்தை வகுத்ததாக விழாவின் நிகழ்ச்சி தயாரிப்பாளர் அஸ்லாம் கான் தெரிவித்துள்ளார். ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெறும் வைபவத்தில் மகிந்தா உரையாற்றப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு என்பது பெரும்பாலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை உள்ளடக்கியது. அங்கு அனைத்துல விதிகளும், மனிதாபிமானமும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது நடப்பது வெட்கமானது என பிரித்தானியா தமிழர் பேரவையின் உறுப்பினர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வருடம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர்களின் கூட்டத்தை சிறீலங்காவில் நடைபெறவிடாது, பிரித்தானியாவும், அவுஸ்திரேலியாவும் எதிர்த்துள்ளன. மனித உரிமைகளை காரணம் காட்டி அவர்கள் இதனை மேற்கொண்டிருந்தனர். ஆனால் தலைவர்கள் ஒன்றை கூறிவிட்டு, பிறிதொன்றை செய்வது துரதிஸ்ட்டமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவராக பிரித்தானியா மகாரணியே உள்ள போதும், இளவரசர் சார்ள்ஸ் தான் விழாவை ஆரம்பித்து வைத்தார்.

65,000 பார்வையாளர்கள் மற்றும் பல மில்லியன் தொலைக்காட்சி பார்வையாளர்கள் முன் மகிந்தா மூத்த தலைவர்களுடன் தோன்றப் போகின்றார். இது பொதுநலவாய நாடுகள் மீதான விமர்சனத்தை ஏற்படுத்தும்.

தமது அமைப்பில் உள்ள 54 நாடுகள் மேற்கொண்ட குற்றங்கள் தொடர்பில் பேசும் அமைப்பு தமது அமைப்பு அல்ல பொதுநல்வாய அமைப்பின் யொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

பிரித்தானியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் பொதுநலவாய அமைப்பு தொடர்பில் புதிய அணுகுமுறையை கடைப்பிடிக்கப்போவதாக பிரித்தானியா பிரதமர் டேவிட் கமரோன் மற்றும் வெளிவிவகாரச் செயலாளர் வில்லியம் ஹேக் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

சிறீலங்காவில் சீனாவின் பிரசன்னத்தை குறைப்பதற்கான செயற்பாடாகவே இந்தியாவின் அழைப்பு உள்ளது. மகிந்தாவை தம்வசப்படுத்த இரு நாடுகளும் போட்டி போட்டு உதவி வருகின்றன. அபிவிருத்தி நடவடிக்கைகள், நிதி உதவிகள், தொழில்நுட்ப உதவிகளை இந்த இரு நாடுகளும் மகிந்தாவுக்கு வழங்கி வருகின்றன.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அமைப்பின் விளையாட்டுப் போட்டியை அம்பாந்தோட்டையில் நடத்துவதற்கு சிறீலங்கா அரசு முயன்று வருவதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழாக்கம்: *eelamenews.com*

*காலம் ஒருநாள்*

*மாறும்*

*நம் கனவுகள்*

*யாவும்*

*தீரும்*

OPINION

# Let Us All Make the World a Better Place to Live!

**By Periasamy Kanthavel**

"The centre of gravity of US foreign policy has shifted from Europe to Asia". This is the essence of the speech by Asst. Sec. Robert O. Blake, Jr., in San Diego, on September 30, 2010. He said, "Never has there been a moment when India and America mattered more to one another. And never has there been a moment when partnership between India and America mattered more to the rest of the globe."

He went further to say, "Finally, to ensure lasting reconciliation, Sri Lanka must investigate and ensure justice for the war crimes and serious violations of international humanitarian law that human rights and other groups allege occurred in the final stages of the conflict. The Government has established a Lessons Learnt and Reconciliation Commission that is now holding hearings on these matters. The U.S. has welcomed this commission, and expressed our hope that it will probe violations of international humanitarian law, identify those responsible and make appropriate public recommendations. Having defeated one of the most murderous terrorist groups in the world, President Rajapaksa now has an historic opportunity to build a tolerant, multi-ethnic democracy in Sri Lanka that will bring lasting peace and unprecedented prosperity".

What is he up to?

No one can entirely ignore what Mr. Robert O. Blake says. His sayings are like white papers, what is referred to as 'balloon testing'. USA unlike UK, the real schemers, is very transparent, flexible in her foreign policies and as Secretary of State, Hillary Clinton once said, "We would take U turns, and even operate the reset button".

There are genuine concerns that the so called Lesson Learned Commission will serve only to white wash allegations of serious abuses, and that its conclusions will be used to brush off calls for an independent international investigation. Belgian-born Peter Bouckaert, Human Rights Watch's emergencies director and an expert in humanitarian crises said, "One would hope that it would see the government's version of events for what it is: a cynical fabrication designed to avoid scrutiny. Unfortunately, there is every reason to fear that the panel will believe the story that is being spun by the Rajapaksa brothers, which basically runs to the formula from Lewis Carroll's Alice in Wonderland: **"Nothing would be what it is because everything would be what it isn't."**

*http://www.guardian.co.uk/commentisfree/2010/sep/05/sri-lanka-still-denying-civilian-deaths*

Knowing very well that the panel's limited mandate has no provision to investigate laws of war violations, the carrier diplomat Robert O Blake as usual, is just singing for his supper!

## Anticipated, nevertheless a great news!

Tamils, the Right People and the learned correct people got the feeling something like that of the Chilean miners when the news came that the International Crisis Group (ICG), Human Rights Watch (HRW), and Amnesty International (AI) have all refused to appear in the "bluff commission".

They argue that the commission is flawed because its members were appointed by the government, has no real mandate to investigate war crimes in the last stages of the conflict, lacks any mechanism to protect witnesses and falls short of minimum international standards of a commission of inquiry.

"Accountability for war crimes in Sri Lanka demands an independent international investigation," said Kenneth Roth, of Human Rights Watch.

## Eelam Tamils as mere Guinea pigs!

The January-May 2009 genocide, a premeditated and well planned one, of the Eelam Tamils and their protectors, LTTE, the great fighters the world ever knew who with both their feet on their motherland and defended her until their last breath, is a venomous tragedy of Darfur proportions, and is the result of Team work of world powers; India, UK, USA and the beneficiary is the chauvinist Sinhalese nation. The nasty imperialist and colonialist forces used the Eelam Tamils as mere guinea pigs.

The only way for the Tamil people to realize their human and national rights is by using a non- violent strategy supported by a committed international community. This is the exact and sacred task the People's Front of Liberation Tigers, the popular political party PFLT is engaging with. (www.pflt.org).

The Irish Congress of Trade Union feels a deep sympathy with the Tamil people's legitimate demand for human and national rights. Likewise there are are many great people and countries who mean and value human rights and not utilize it for achieving their hidden inhuman agendas.

*"We shall have to repent in this generation not so much for the evil deeds of the wicked people, but for the appalling silence of the good people".*

***- Martin Luther King Jnr.***

ஒரு பேப்பர்
ORU PAPER

# ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்
கனடா
தயா - அரவிந்தன் - சிந்து
பிரான்ஸ்
சிறி
ஜேர்மனி
சபேசன்
சுவிஸ்
சயந்தன்
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
சாரதா
விளம்பரம்
சோபனா
அச்சு
தர்சினி (கனடா) பானு
வடிவமைப்பு
மயூரன் - விஜி
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி — நிர்வாகம்
பானு
வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்



உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850
தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com



*'Oru Paper' is a bi-lingual paper published from London by Orupaper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*


# ஒரு புழுவும் புண்ணாக்கு வார்த்தையும்

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

சமீபத்தில் ஒரு நண்பரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் என் நெருங்கிய நண்பர் அல்ல. ஆயினும் சும்மா ஒரு நண்பராக இருக்கக் கூடிய தகுதி எதுவும் இல்லை. அவருடன் உரையாடிக் கொண்டிருந்த இருபது நிமிடங்கள் அவரது வாயிலிருந்து நிறையப் புழுக்கள் கொட்டுண்டன. இத்தனைக்கும் அவர் ஒரு சட்டத்தரணி அத்துடன் 'மெய்யுள்' காணும் ஆன்மீகவாதி.

அவர் சொன்ன சாராம்சம் இதுதான். 2009 மே மாத முள்ளிவாய்க்காலின் வன் கொடுமைகளுக்கு பிறகு விடுதலைப் போராளிகள் எவரும் சரணடைந்திருக்கக் கூடாது. அதிலும் குறிப்பாக யோகி, பாலகுமாரன், தமிழினி, எழிலன், புதுவை இரத்தினதுரை போன்றோர் ஒருபோதும் சரணடைந்திருக்கக்கூடாது. அவர்கள் எவ்விதத்திலோ தம் உயிரை மாய்த்திருக்க வேண்டும். கே.பியை பிடித்துக் கொண்டு போயிருந்தாலும் அவர் எப்படியோ தம்முயிரை மாய்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

இறுதியாக அந்த ஆன்மீகவாதி ஒன்று சொன்னார் அது மகா அதிர்ச்சி சரணடைந்த தமிழினியைக் குறித்துக் கூறியவை இதில் எழுதப்பட முடியாதன. இவற்றுடன் கொசுறாக தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களையும் அவர் அவன் இவன் என்று ஏகவசனத்தில் அர்ச்சனை செய்தார்.

இவ்வளவும் சொன்ன அவர் விடுதலைப்புலிகளுக்கோ தேசிய விடுதலைப்போராட்டத்துக்கோ எதிரானவர் அல்லர் மேலும் 80களின் தொடக்கத்தில் விடுதலைப் புலிகளுக்காக இங்கிலாந்தில் பணியாற்றியதாக பெருமையுடன் சொன்னார்.

இவருடைய கதை இங்கே எதற்கு ? என்ற கேள்வியும் எழலாம். இப்படியானவர்கள் சிலர் எங்கள் சமூகத்தில் இருக்கிறார்கள். தோள்மூட்டில் சிறு சிராய்ப்புக் காயங்கள் படாதவர்கள். தங்கள் பிள்ளைகளுக்கு சிறுகாய்ச்சல் வந்தாலும் பதறித்துடிப்பவர்கள். போராட்டம் பற்றி எந்த உணர்வையும் தங்கள் மக்கட் செல்வங்களுக்குப் போதியாமல் அவர்களை வாழ்வின் உச்ச நலன்களுக்கு அழைத்துச் செல்பவர்கள். இவர்கள் தான் சொல்கிறார்கள் முக்கியமான தளபதிகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று. ஏனென்றால் அவர்கள் யாரோ பெற்ற பிள்ளைகள் தானே, அவர்கள் யாரோ ஒரு பெண்ணின் கணவர், யாரோ ஒரு ஆணின் துணைவி, யாரோ சில பிள்ளைகளின் தந்தை,தாய், எவருடையதோ சகோதரர் அப்படி போகும் எவரும் இவருடைய உறவுகள் அல்ல. ஒரு சட்டத்தரணி ஆன்மீகவாதி போராளிகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என விரும்புவாராக இருந்தால் இவர்கள் மனிதர்களே அல்லர் என்பது போக அவர் படித்த சட்டமும், அவர் உணர்ந்த ஆன்மீகமும் இதையா சொல்லிக் கொடுத்தது?

இத்தகவல்களை இத்துடன் நிறுத்திக் கொண்டு உயிரை மாய்த்துக் கொள்ளல் தொடர்பாக வேறு சில விசயங்களைப் பேசுவோம். முள்ளிவாய்க்கால் வன்கொடுமையின் பின்னர் கனகரத்தினம் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் சிறையில் அடைக்கப்படுகிறார். சில மாதங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார். வெளியில் வந்து அவர் செய்த முதற் காரியம் சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் அவர் மகிந்தாவுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தது. கனகரத்தினம் யார் என்பதனையும் நாம் புரிதல் வேண்டும். 1983 யூலை 23இல் விடுதலைப் புலிகளின் திருநெல்வேலித் தாக்குதலில் களப்பலியான செல்லக்கிளி அவர்களின் அண்ணன். செல்லக்கிளியின் வீரச்சாவின் பின்னர் கனகரத்தினம் அவர்கள் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளராகச் செயற்பட்டவர். அதனாலேயே அவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கப்பட்டார். மேலும் ஒரு தகவல் முள்ளிவாய்க்காலின் வன்கொடுமைத் தாக்குதல் வரை வன்னி மக்களுள் ஒருவராய் வன்னி மண்ணில் வாழ்ந்தவர். அதனாலாயே அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

அப்பேர்ப்பட்ட கனகரத்தினம் சிறையில் இருந்து வெளியில் வந்ததும் மகிந்தவுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்கிறார் என்றால் அதற்குள் இருக்கும் சூட்சுமங்களை புரிந்து கொள்ள வேண்டாமா? இதற்கு மேலும் இது குறித்துப் பறைதல் இங்கு ஆகாது. கே.பி தனது செவ்வியில் கூறியதை தான் இங்கு குறிப்பிட வேண்டும் கே.பி சொல்கிறார், 'போராட்டம் இப்போதும் தொடர்ந்து அத்துடன் எனது தலைவரும் உயிருடன் இருந்திருந்தால் நான் அரசாங்கத்தை எதிர்த்து ஒத்துழைக்காமல் இருந்திருக்கலாம். நான் எத்தகைய பின்விளைவையும் சந்தித்திருப்பேன் ஆனால் நிலமை அப்படி இல்லை. எல்லாமே முடிந்து விட்டது. எனவே எதிர்ப்பதில் அர்த்தமில்லை எனவே நான் ஒத்துழைப்பதை தெரிவு செய்தேன்.'

மேற்கண்ட கே.பியின் கூற்றில் எனக்கு விமர்சனம் இருக்கிறது. அதுவேறு ஆனால் அவர்களின் சூழலைப் புரிந்து கொள்ளாமல் ' நீ செத்துப் போ' என்று தீர்ப்புக் கூற எவருக்கும் உரிமை கிடையாது. அதுவும் புலம் பெயர்ந்து வாழும் எந்த ஒரு 'புண்ணாக்குக்கும்' உரிமை கிடையாது அதனையே யோகி, எழிலன், தமிழினி, பாலகுமாரன், புதுவை இரத்தினதுரை போன்றோருக்கும் நாம் பொருத்தலாம். இவர்கள் அனைவரையும் தனிப்பட்ட முறையில் நெருக்கமாக அறிவேன். அவர்களுள் கனன்று கொண்டிருந்த நெருப்பு எனக்குத் தெரியும். அவர்கள் தாய்த் தேசம் விட்டு காலடி எடுத்து வைக்கவில்லை. இறுதிக் கணம் வரை மக்களுடன் மக்களாக இருந்தவர்கள் மக்கள் கஞ்சி குடித்தபோது அவர்களும் குடித்தார்கள். வெறும் வயிற்றுடன் இருந்தபோதும் அப்படியே இருந்தார்கள். நாம் இங்கு என்ன செய்தோம். எங்கள் பிள்ளைக்கு மூக்குமுட்ட உணவு ஊட்டி படிக்கப் பள்ளியனுப்பி என்னவெல்லாமோ செய்தோம்.

ஒரு கணம் உணர்ந்து பாருங்கள் ஒரு மரத்தின் கீழ் பாலகுமாரன் தன் மைந்தனுடன் உட்கார்ந்திருந்த படம் யாபேரும் பார்த்திருப்பீர்கள். வயிறு எரியவில்லையா யாருக்கும்? அந்த மைந்தனை அனாதரவாக விட்டு பாலகுமாரன் செத்துப் போயிருக்க வேண்டும் அதுதான் அந்த ஆன்மீகவாதியின் 'உள்ளொளி' சொல்கிறதா.

என் மொழி என் கோபம் சொல்லப் போதாமல் தடுமாறுகிறது அதனால் சேரனின் கவிதை வரியுடன் நிறுத்துகிறேன்.

*' நிர்வாணம் கொண்டு*

*தமிழர்கள் அனைவரும்*

*தெருக்களில் திரிக...'*

# எங்கே இருக்கிறது ஆனந்தம்!

'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா' என்று பாடினான் பாரதி. இப்படிப் பாடிய பாரதி செல்வச் செழிப்பில் வாழ்ந்தவனல்ல. வாழ்க்கையில் சிக்கல்களையும், பிரச்னைகளையும் பாராதவன் அல்ல. சொல்லப் போனால் அவன் வாழ்க்கையே பிரச்னைகளின் தொகுப்பு என்று சொல்லும்படி இருந்தது. ஆனாலும் பாரதி அழுது புலம்பி ஒரு வரி பாடியதில்லை. மாறாக எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா என்று வியந்து மகிழ்கிறானே எப்படி? அவன் கண்ட ஆனந்தம், அவன் கண்ட இன்பம் எங்கிருந்தது? எப்படி வந்தது?

வீதியில் நின்று சற்று நேரம் வருவோர் போவோரைக் கவனியுங்கள். எத்தனை முகங்களில் ஆனந்தம் தெரிகிறது? விரையும் மனிதர்கள் முகத்தில் கரைக்க முடியாத கவலைகளும், சிந்தனைகளும் அல்லவா தெரிகிறது? இதில் பணக்காரன், ஏழை என்ற வித்தியாசம் ஏதும் தெரிவதில்லையே. இருப்பவன், இல்லாதவன் என்ற இரண்டு வகை மனிதர்களும் ஆனந்தத்தைத் தேடி அலைவது போலல்லவா இருக்கிறது? எங்கே அந்த ஆனந்தம் கிடைக்கும்?

எது கிடைத்தால் நீ ஆனந்தமாய் இருப்பாய் என்று உங்கள் மனதைக் கேளுங்கள். இது கிடைத்தால் ஆனந்தமாய் இருப்பேன் என்று மனம் சொல்லும். அதை எப்பாடுபட்டாவது கொடுத்துப் பாருங்கள். மனம் இனியெல்லாம் சுகமே என்று ஆனந்தமாய் இருக்கிறதா என்று சோதித்துப் பாருங்கள். மனம் ஓரிரு நாட்கள் மகிழ்ச்சியாய் இருக்கலாம். மூன்றாவது நாள் மனம் தானாக ஆனந்தத்தை இழக்கும். காரணம் மனதிற்கு புதுத் தேவை ஒன்று பிறந்திருக்கும். அது மட்டும் கிடைத்து விட்டால் ஆனந்தமாய் இருக்க முடியும் என்று மனம் சொல்லும்.

அது வேண்டும் இது வேண்டும் என்று இந்த மனக் குரங்கு பாடாய் படுத்த ஒவ்வொரு தேவையாகப் பூர்த்தி செய்யக் கிளம்பும் மனிதன் தொடுவானத்தைத் தொட்டு விட முடியும் என்கிற நினைப்பில் ஓடும் வேலையைத் தான் செய்கிறான். எத்தனை வேகத்தில் ஓடினாலும் தொடுவானம் தொலைவிலேயே நிற்பது போல ஆனந்தம் அடைய முடியாத இலக்காகவே இருக்கிறது.

மனதில் தொலைத்த ஆனந்தத்தை அதைத் தவிர மற்ற இடங்களில் தேடி என்ன பயன்? உலகத்தையே சுற்றி வந்து தேடினாலும் அந்த ஆனந்தம் நமக்கு கிடைக்குமா?

> **தவறான செய்திகளை மனதிற்குத் தந்து, தவறான நம்பிக்கைகளை மனதில் ஏற்படுத்தி மனம் சோகப் படும் போது அது நியாயம் தான் என்று நாம் நியாயப்படுத்தி மனதை தவறாகவே பழக்கப்படுத்தி யிருக்கிறோம்.**

மில்டன் என்ற ஆங்கில மகாகவி பாடுவான். ' மனம் இருந்த இடத்தில் இருந்து கொண்டே சொர்க்கத்தை நரகமாகவும், நரகத்தை சொர்க்கமாகவும் மாற்றும் வல்லமை பெற்றது'.

மனதிற்கு அந்த ரசாயன வித்தை தெரியும். ஆனந்தம் அடையவும் தெரியும். அழுது புலம்பவும் தெரியும். ஒரே விதமான சூழ்நிலையிலும் இந்த இரண்டில் எதையும் தேர்ந்தெடுக்கும் ரசாயன வித்தை தெரியும்.

அந்த ரசாயன வித்தை அறிந்ததால் தானே பாரதியால் வறுமையிலும், ஆங்கிலேயரின் அடக்குமுறைத் தாக்குதலிலும், சிறையிலும், பல பக்கங்களில் இருந்தும் வந்த பிரச்னைகளிலும் கூட எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா என்று பாட முடிந்தது.

பின் ஏன் இந்த மனம் ஆனந்தமாய் இருக்க மறுக்கிறது? காரணம் அந்த மனதை சரியான படி வழி நடத்த நாம் மறந்து விடுவது தான்.

தவறான செய்திகளை மனதிற்குத் தந்து, தவறான நம்பிக்கைகளை மனதில் ஏற்படுத்தி மனம் சோகப்படும் போது அது நியாயம் தான் என்று நாம் நியாயப்படுத்தி மனதை தவறாகவே பழக்கப்படுத்தியிருக்கிறோம்.

ஊரைச் சுற்றினால் தான் ஆனந்தம், மதுவில் மூழ்கினால் தான் ஆனந்தம், பொருள்களை வாங்கிக் குவித்தால் தான் ஆனந்தம், அடுத்தவன் பொறாமைப்படும் படி வாழ்ந்தால் தான் ஆனந்தம், உன்னை மிஞ்ச ஆளில்லை என்று பலர் புகழ்ந்தால் தான் ஆனந்தம் என்றெல்லாம் தவறான கருத்துகளை மனதில் பதிய வைத்துவிட்டால் பின் மனிதன் ஆனந்தமடைவது சாத்தியம் இல்லை.

பொய்யை அஸ்திவாரமாகக் கொண்டு எதை அடைந்தாலும் அது நிலைத்து நிற்காது. மேலே சொன்ன தவறான, பொய்யான அனுமானங்களைக் கொண்டு அடையும் மகிழ்ச்சிகளும் அதனாலேயே வந்த வேகத்தில் காணாமல் போகிறது. பிரச்னையே இல்லாத வாழ்க்கை ஆனந்தமல்ல. பிரச்னையைத் தீர்க்க முடிவது தான் ஆனந்தம். தடங்கலே இல்லா தவாழ்க்கை ஆனந்தமல்ல. தடங்கலைத் தாண்டி முன்னேறுவது தான் ஆனந்தம். எதிலும் ஒரு நன்மையைப் பார்ப்பதும், எதிலும் ஒரு பாடத்தைப் படிப்பதும் ஆனந்தம் தரும்.

ஒரு விஷயத்தை எப்படியும் பார்க்கலாம். ரோஜாவில் முள் என்றும் பார்க்கலாம். முள்ளில் ரோஜா என்றும் பார்க்கலாம். பாதி தம்ளர் காலியாக இருக்கிறது என்றும் சொல்லலாம். பாதி தம்ளர் நிறைந்திருக்கிறது என்றும் சொல்லலாம்.

இந்த இரண்டு விதங்களில் எப்படிப் பார்த்தாலும், எப்படிச் சொன்னாலும் அது உண்மையே என்றாலும் நல்ல தன்மையை கோடிட்டுக் காணும் கலையை உங்கள் மனதிற்குக் கற்றுத் தந்தால் என்றும் எதிலும் ஆனந்தமே.

*- என். கணேசன்*

# அவல வாழ்வினை நிரந்தரமாக்கும் நில விழுங்கிகள்



## அரசியல் அலசல்

இதயச்சந்திரன்

மகாவலி கங்கையை, இரணமடுக் குளம் வரை கொண்டு வர, இலங்கை அரசு முயற்சி செய்வதாக செய்திகள் வெளிவருகின்றன.

நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ பிரதி அமைச்சர் எம்.எம். சந்திரசேனாவினால் இந்த திட்டம் குறித்த விபரம் அண்மையில் அறிவிக்கப் பட்டிருந்தது.

அது மட்டுமல்லாது, விடுதலைப் புலிகளால் நிர் மாணிக்கப்பட்டிருந்த விமான ஓடுபாதையில், 70 மில்லியன் ருபாய் செலவில் சீன உதவியுடன், சர்வ தேச விமான நிலையமொன்றினை அமைப்பதற் கும் சிங்கள தேசம் தயாராகிறது.

வடபகுதியில், இரணைமடுக் குளப்பிரதேசத்தை மையப்படுத்தி, பேரினவாதம் வகுக்கும் நில ஆக்கி ரமிப்பு வியூகம், அபிவிருத்தி என்கிற சொல்லாட லுக்குள் மறைக்கப்பட்டுள்ளது.

காலமாகிய, காமினி திசநாயக்காவால் முன்னெ டுக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமானது, கிழக்கின் பெருநிலப்பரப்பை சிங்களமயமாக்கிய வரலாற்றினை நாம் அறிவோம்.

அதேவேளை, தமிழர் தாயக நிலங்கள், வெளி நாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்ப டுவதாக வரும் செய்திகளில் ஆபத்தையும் உணர வேண்டும்

வவுனியாவில் 1600 ஏக்கர் நிலம் ஈரான் நிறுவனத் திற்கும் மற்றும் கோரளைப்பற்று பிரதேசத்தில் 300 ஏக்கர் நிலப்பரப்பு இறால் உற்பத்திக்காக இந்திய நிறுவனமொன்றிற்கும் விற்பனை செய்யப்படுவ தாக தகவல்கள் வெளிவருகின்றன.

பசில் இராஜபக்சவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, வாழைச்சேனை கடதாசி ஆலைக்கு அண்மித்த 1500 ஏக்கர் காணியிலும், மட்டக்களப்பு 231-சி கிராமசேவைப் பிரிவிற்கு உட்பட்ட 50ஏக்கர் நிலத்திலும், சுற்றுலா விடுதிகளை அமைக்க திட்ட மிடுகிறது.

அத்தோட சம்பூரிலிருந்து வெளியேற்றப்பட்ட 4500 குடும்பங்கள் வாழ்ந்த பூர்வீக தமிழர் நிலத் தில் அனல் மின் நிலையத்தை அமைக்க, இந்தியா முயற்சிக்கிறது.

நிலக்கரியால் இயங்கும் இந்த அனல்மின் நிலையம், சுற்றாடலை அசுத்தப்படுத்தி, மக்களின் சுகாதார வாழ்விற்கு அச்சுறுத்தலை உருவா க்குமென்று, பெரும் மக்கள் போராட்டமும் திரு மலையில் முன்பு முன்னெடுக்கப்பட்டது.

ஆனாலும் நுரைச்சோலையில் சீனா அனல்மின் நிலையத்தை அமைத்தால், சம்பூரில் தானும் அமை ப்பேனென்று போட்டிக்களத்தில் குதிக்கும் இந்திய தேசம், தமிழர் நலனில் அக்கறை கொள்வது போல் தெரியவில்லை.

இந்தியாவை அனுசரித்துச் செல்ல வெண்டு மென்பவர்கள், கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமிது.இவைதவிர, கழிவுப் பொருட்களை குவிக்கும் குப்பைத்தோட்டி போல் யாழ் புகையிர நிலையப் பகுதியில், தென்னிலங்கை சிங்கள வர்கள் பலர் குந்தியிருந்து குடாநாட்டில் நில உரிமை கோரிவருவதாக கூறப்படுகிறது.

கேட்பாரற்றுக் கிடந்த இப்பகுதியில் புதிதாக மல சலகூடமொன்றும் முளைத்துள்ளதாம்.

மாத்தறை, கந்தர பிரதேசங்களிலிருந்து மீன் வியாபாரிகள் போல் திருமலை மீன் சந்தைக்குள் நுழைந்த சிங்களவர்கள், காலப்போக்கில் அரச உதவியுடன் கோணேசர் கோட்டை வாசலிலிருந்து நீண்டு செல்லும் கரையோரப் பிரதேசங்களை, ஆக் கிரமித்த வரலாற்றை நினைவிற்கொள்வத பொருத் தமாகவிருக்கும்.

இது போன்று, புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமாகப் போகிறது, யாழ்நகரை ஆக்கிரமி க்கும் பேரினவாத வியூகம்.

கடந்த தேர்தலில் யாழில் படுதோல்வியுற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன், தனது மீள்பிரவேசத்திற் கான அடிக்கல்லை கொழும்பில் நாட்டி ஆரம்பித் திருக்கிறார் என்ற தகவலையும் இங்கே கவனிக்க வேண்டும்.

இவர் போன்றோரின் அநுசரணையுடன், வருகிற வருடம் பெப்பிரவரியில் நடைபெறவுள்ள உள்ளு ராட்சி சபைத்தேர்தலில், யாழ் நகரிலிருந்து சிங்க ளவர்களும் தெரிவு செய்யப்படலாம்.

இக் குடியேற்றங்களை நிறுத்துமாறு சனாதி பதிக்கு கடிதம் எழுதலாம், சர்வதேசத்திடம் கூற லாம், இந்தியத் தரப்பிடம் முறையிவலாம். அதை விட தம்மால் எதுவும் செய்ய இயலாது என்பது தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப் பாடாகும்.

இந்நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்த லில் போட்டியிட்டு வென்று, பின்னர் அதற்கான அதிகாரங்களை சிங்கள அரசு வழங்கவில்லை யென்று இப்பூவுலகிற்கு உணர்த்தப் போவதாக தன்னிலை விளக்கமளிக்க ஆரம்பித்துள்ளனர் சிலர்.

அதே வேளை கிழக்கின் முதலமைச்சராக முடி சூடியிருக்கும் குறுநில மன்னர் பிள்ளையான் என் பவர், மாநகர சபைகள் செய்யும் வேலைகளைத் தான் செய்வதாக கூறப்படுகிறது.

13வது திருத்தச் சட்டத்திலிருந்து குன்றந்த பட்ச அதிகாரங்களையும், அண்மையில் நிறைவேற்றப் பட்ட 18வது திருத்தச் சட்டம் வழங்கி விட்டதால், அது 13 மைனஸ் ஆக மாறி எலும்புக்கூடு போல் காட்சியளிக்கிறது.

இலண்டனிற்குள் பயணம் மேற்கொண்டுள்ள யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் தனது நேர்காணலொன்றில் மிகத் தெளிவாக இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

ஆகவே மாகாண சபையில் போட்டியிட்டு வெல் வதன் மூலமாக, அதற்கு அதிகாரம் இல்லை என்கிற விடயத்தை நிரூபிக்க வேண்டிய அவசியமி ல்லை.

சிங்கள அரசால் தற்போது தீவிரமாக முன் னெடுக்கப்படும் நில அபகரிப்புக்கு எதிராகவும், மக்களின் மீள் குடியேற்றத்தை வலியுறுத்தியும் தமது போராட்டங்களை கூட்மைப்பினர் விரிவு படுத்தவேண்டும்.

அவரின் விடுதலைக்காக எதிர்கட்சிகள் ஒன்றி ணைந்து பெரும் போராட்டங்களை கொழும்பில் ஆரம்பித்துள்ளனர்.

தமிழ்மக்களுக்காக இவர்கள் ஆர்ப்பாட்டங்க ளை நடாத்த வில்லை என்பதையும் குறித்துக் கொள்ள வேண்டும்.

வன்னி தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலுள்ள தமிழ்மக்களை ஒன்று திரட்டி, தமது போராட்டத்தை கூட்டமைப்பினர் முன்னெடுக்கலாம்.

நில ஆக்கிரமிப்புக்கெதிராக தாயக மக்களின் போராட்டத்திற்கு, நிச்சயம் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் கரம் கொடுப்பார்கள்.

நம்பிக்கை ஒளியைப் பரவச்செய்து, எமது நேசக்கரத்தினை, தாயக மக்களை நோக்கி நீட்டுவதுதான் முதன்மைப்பணியாகக கொள்ள வேண்டும்.

பட்ட துயர்
இனிக் காணும்
மிகக் கிட்ட
நெருங்குது
நேரம்

ஒரு பேப்பர்

# THE GRAND SALE

## IS NOW ON AT





## VENISONS

115-117 EALING ROAD, WEMBLEY,
MIDDLESEX HA0 4BP
TEL: 020 8903 5360

ART SILK SAREES, PARTY SAREES,
EMBROIDERED SAREES,
PUNJABI SUITS FOR ADULTS & CHILDRENS

## VENILAL'S

134-136 EALING ROAD, WEMBLEY,
MIDDLESEX HA0 4TH
TEL: 020 8903 3144

PURE SILK KANJIVARAM SAREES, KURAI SAREES
PUBERTY CEREMONY SAREES, PARTY SAREES
IMMITATION JEWELLERY, CHOLI SETS





## SHERWANI

242 EALING ROAD, WEMBLEY,
MIDDLESEX HA0 4QL
TEL: 020 8903 0004

MENS & BOYS SHERWANIS, COAT SUITS,
KURTA PYJAMAS, MOJDIS, SAFA
& DUPATTAS

## SANSKRUTI

3, ABERCORN COMM. CENTRE, MANOR FARM ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 1AN
TEL: 020 8782 8787

TEMPLES, GOD STATUES, GIFT ARTICLES,
PAINTINGS AND MUCH MORE...





## ZEVER

134-136 EALING ROAD, WEMBLEY,
MIDDLESEX HA0 4TH
TEL: 020 8903 8317

EXCLUSIVE 22K GOLD
& DIAMOND JEWELLERY

FOR ENQUIRIES CALL :
020 8903 5360

# குழு மோதல்களின் ஆடுகளம் ஆகிவிட்ட நாடு கடந்த அரசாங்கம்



கோபி
ஒரு பேப்பர்

நாடு கடந்த அரசாங்கம் அமைப்பது பற்றிய செய்திகள், கருத்துகள் மற்றய ஊடகங்களில் வெளிவர' ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அக்கட்டமைப்பின் அவசியம் பற்றியும், நாடுகள் மட்டத்தில் சனநாயக முறையில் மக்களால் தெரிவு செய்யப்படக் கூடிய கட்டமைப்புகள் அமைப்பதுபற்றியும் ஒரு பேப்பர் பல கட்டுரைகளை வெளியிட்டு வந்தது. இது தொடர்பில் ஒரு பேப்பர்ரின் ஆசிரியர் குழு, துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்றதுடன், ஆர்வலர்களுடன் சில கலந்துரையாடல்களையும் மேற்கொண்டது. எமது தேடல்கள் நாடு கடந்த அரச கட்டமைப்பின் இயங்குகைக்கு, இன்றய உலக ஒழுங்கில் உள்ள சாதக,பாதக நிலமைகள் பற்றியதாக இருந்தனவே தவிர, தனிநபர்கள் அல்லது குழுக்களை மையப்படுத்தியதாக அமையவில்லை என்பதனை இங்கு குறிப்பிடவேண்டும்.

இக்கால கட்டத்தில், வெளிப்படைத்தன்மை கொண்டதான சனநாயக வழிமுறையிலான அமைப்புகளை உருவாக்குவது பற்றி பல்வேறு கலந்துரையாடல்கள் நடைபெற்று வந்தன. அவை அனைத்தும், தமிழர்களின் நலன் சார்ந்து, ஒரே குறிக்கோளைக் கொண்டனவாக இருந்தயை அவதானிக்க முடிந்தது.

கடந்த வருட இறுதியில், நாடு கடந்த தமிழீழ அரசு அமைப்பது தொடர்பாக சில அறிவித்தல்களை திரு. விஸ்வநாதன் உருத்திர குமாரன் அவர்கள் வெளியிட்டப்பட்டதுடன். இச்செயற்திட்டத்தினை நடை முறைப்படுத்த நாடுகள் மட்டத்திலான செயற் குழுக்களும் அமைக்கப்பட்டன. அதனை வரவேற்று நாம் சில கட்டுரைகளை பிரசுரித்திருந்தோம்.

துரதிர்ஸ்டவசமாக இச்செயற் குழுக்கள் அமைக்கப்பட்டதில் ஆரம்பித்த முரண்பாடுகள் புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவித்தன. இச்செயற் குழுவில் அங்கம் வகித்த சிலரின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகள் செயற் குழுவிற்குள்ளும், வெளியிலும் முரண்பாடுகளையும் உருவாக்கியது. குழுவாதத்தை முன்னிலைப்படுத்தியது, இதனை சில ஊடகங்களும் பயன்படுத்தி, பிளவுகளை அதிகரிக்க முனைந்தன.

புலம் பெயர்ந்த நாடுகளில் ஏற்கனவே செயற்பட்ட கட்டமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதில் நாடுகள் மட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட செயற்குழுக்கள் வெற்றிபெறவில்லை. கடந்த மே மாதத்தில் நடாத்தப்பட்ட தேர்தல்களிலும் குழுவாதமே வெளிப்பட்டது. செயற்குழுவைச் சார்ந்தவர்கள் தமக்கு சார்பானவர்களை களமிறக்க, இதர தமிழ்த் தேசிய கட்டமைப்புகளும் தமது சார்பானவர்களை போட்டியிட வைத்தனர். முறைகேடுகளுடன் தேர்தல்கள் நடந்தேறியமை அனைவரும் அறிந்ததே.

நடந்து முடிந்த தேர்தல் நாடு கடந்த அரசாங்கத்தின் செயற்திறன், வெளிப்படைத் தன்மை, சனநாயகம் பேணுதல் என்பனவற்றை கேள்விக்குறியாக்கியது. தேர்தலில் நடந்த குழறுபடிகள், தேர்தல் முடிவுகள் அறிவிப்பதில் ஏற்பட்ட இழுபறி என்பன, ஏற்கனவே முகிழ்த்திருந்த குழுவாதத்தினை அதிகரிக்கச் செய்தன. இந்நிலைக்கு நாடு கடந்த அரசாங்கம் உருவாக்க குழுவினர் மட்டுமல்லாது மற்றய தமிழ்ச் செயற்பாட்டாளர்கள், அமைப்புகளும் பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறான குழப்ப நிலையில், நாடு கடந்த அரசவையில் காத்திரமான பங்களிப்பை வழங்கக் கூடிய பலர் தேர்தலில் போட்டியிடுவதில் அக்கறை கொண்டிருக்கவில்லை. போட்டியிட்டவர்களில் பலருக்கு நாடு கடந்த அரசாங்க கட்டமைப்பு பற்றிய எத்தகைய கருத்தும் இருக்கவில்லை. போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களில், மிகவும் பொருத்தமானவர்கள் சிலர் வெளியேற வேண்டிய நிலமையும் ஏற்பட்டது. உதாரணத்திற்கு இரண்டு சம்பவங்களை குறிப்பிடலாம், தென் மேற்கு லண்டன் பகுதியில் அதிக வாக்குப் பெற்று வெற்றியீட்டிய டேவிட் பரராஜசிங்கம் செயற்திறன் கொண்ட ஒருவர், தேர்தலில் இடம்பெற்ற குழறுபடிகளின் காரணமாக கனவான் முறையில் தனது பதவியிலிருந்து விலகினார். பரிஸ் இல் மாவட்டம் 93 (லாக்கூர்னோவ், ஹொட்டேல் து வில், பொபினி) பிரதேசத்தில் போட்டியிட்ட பல்கலைக்கழக மாணவியும், தமிழ் செயற்பாட்டாளருமாகிய கிருசாந்தி சக்திவாசன் (சாலினி) அதிகமான வாக்குகளை பெற்றிருந்தும், தேர்தல் நடாத்தியவர்கள், அங்கு முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி முடிவுகளை இன்னமும் அறிவிக்கவில்லை. ஆற்றல் உள்ளவர்கள் இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட சம்பவங்கள் நாடுகடந்த அரசின் மீதான நம்பகத்தன்மைக்கு பங்கம் விளைவிப்பதாகவே அமைந்துள்ளன.

முன்னுதாரணம் இல்லாத கட்டமைப்பான நாடு கடந்த அரசாங்கம் பற்றி புரிந்து கொள்வதும், அதன் நடைமுறைச் சாத்தியம் பற்றி விளக்குவதும் இலகுவானதொன்றல்ல. அதேசமயம் பழைய சித்தாந்தங்களில் ஊறியிருப்வர்கள், இவ்வாறான புதிய அணுகுமுறையை பரிசீலிக்கவேமறுத்து வருகிறார்கள். மாறிவரும் உலக சூழலில் புலம் பெயர்ந்த சமூகங்களும் (Diaspora communities) அவற்றின் நாடுகடந்த செயற்பாடுகளும் சமூக, அரசியல், பொருண்மியத் தளங்களில் ஆய்வுப் பொருளாக மாறிவருவதனையும், இவை தொடர்பாக காத்திரமான கருத்துகள் புலமையாளர்களால் வெளியீடப்படுவதனையும் நாம் கவனத்தில் கொள்ள தவறிவிடுகிறோம். ஆனால் இவ்விடயத்தில் அக்கறை காட்டிவரும் அரசியல் சிந்தனை மையங்களின் கவனத்தை நாடுகடந்த தமிழீழ அரசு ஈர்த்துள்ளது என்பது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல.

நாடு கடந்த தமிழீழ அரசாங்க கட்டமைப்பானது, ஒரு முன்னோடி அமைப்பாக செயற்படக் கூடிய தகமைகளை கொண்டிருந்தும், வினைத்திறனற்ற ஒரு அமைப்பாகவும், வெறுமனே குழு மோதல்களின் ஆடுகளமாகவும் மாறிவிட்டதையே காணக் கூடியதாக இருக்கிறது. இவ்வாறான அவதானத்தை மேற்கொள்வதற்குரிய காலஅவகாசம் போதுமானதாக இல்லாதபோதும், எதிர்காலத்தில் சிறப்பாக செயற்படக் கூடிய அறிகுறிகளை எதனையும் காணமுடியவில்லை என்பதை வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

கடந்த மாத இறுதியில் நடைபெற்ற அதன் இரண்டாவது அமர்வின் பின்னர் தமிழ் ஊடகங்களில் வெளிவந்த செய்திகள், கட்டுரைகள், பகிரங்கக் கடிதங்கள், செய்தி ஆய்வுகள் என்பனவற்றைப் நோக்கும்?போது, அவை இக்குழுமோதல்களினை தூண்டிவிடும் தன்மையையும், நாடு கடந்த அரசாங்கத்தினை சிதைத்து விடும் நோக்கினையும் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. 'முடிசூடிய துரோகம்', 'ஒப்பரேசன் இறைக்கை வெட்டல்', 'இதயம் வலிக்கிறது அண்ணா', 'அரசியல் கோமாளிகளின் கேலிக் கூத்து' போன்ற தலைப்புகளில் தனிநபர்களின் மீதும் குழுக்களின் மீதும் கரி பூசும் வகையில் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இவற்றை முதன்மைப்படுத்தி பிரசுரித்திருக்கும் ஊடகங்கள், நாடு கடந்த அரசாங்க கட்டமைப்புப் பற்றி விளக்குவதற்கு, அல்லது விவாதிப்பதற்கு, அது பற்றிய நம்பிக்கையினை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு, குறைந்த பட்ச முயற்சிகளைத்தானும் மேற்கொள்ளவில்லை.

இறுதியாக நடைபெற்ற இரண்டாவது அமர்வில் நாடு கடந்த அரசாங்கத்தின் அரசியல் யாப்பு விவாதிக்கப்பட்டுள்ளது. அதன் பிரதம அமைச்சராக திரு. விஸ்வநாதன் உருத்திர குமாரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். துணைப் பிரதமர்களும் அமைச்சர்களும் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படுவார்களா அல்லது பிரதமர் தேர்ந்தெடுப்பாரா என்பதனையிட்டு சூடான விவாதங்கள் நடைபெற்றன. பிரதமரால் தெரிவு செய்வதற்கு ஆதரவாக அதிகப்படியான வாக்குகள் கிடைக்கப் பெற்றமையால் அந் நடைமுறை நிறைவேற்றப் பட்டுள்ளது. அமைச்சரவையை கலைப்பதற்கும், யாப்பில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கும் தேவையான பெரும்பான்மை வாக்குகள் விடயத்தில் பலத்த வாதப்பிரதி வாதங்கள் நடந்திருக்கின்றன.

இதுபோன்ற சட்டவியல் சார்ந்த, அறம் சார்ந்த விடயங்களில் கருத்துவேறுபாடுகள் இருப்பதும், அதையொட்டிய விவாதங்கள், கருத்து மோதல்கள், உறுப்பினரிடையேயும், பொதுமக்கள் மத்தியிலும் நடைபெறுவதும் இயல்பானதே. தீர்மானங்கள் யாவும் ஏகமனதாக நிறைவேற்றப்படும் என எதிர்பார்ப்பது சனநாயகத்தின் உயிர்ப்புத் தன்மையை வெளிப்படுத்துவதாக அமைய மாட்டாது. இருப்பினும் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்வது, குழப்பத்தை ஏற்படுத்துவது, பகிரங்கக் கடிதம் எழுதுவது என்பவை நாகரீகமான நடவடிக்கையாக ஏற்றுக் கொள்ள முடியாது. தாய்ப் பாராளுமன்றம் எனக் கருதப்படும் வெஸ்ற்மின்ஸ்ரர் பாராளுமன்றம் போன்று, மேற்கு நாடுகளில் உள்ள ஆட்சி மன்றங்களின் நடைமுறைகளை பார்த்தும் அறிந்தும் வைத்துக் கொண்டு இந்தியா, சிறிலங்கா மற்றும் சில ஆசிய நாடுகளின் பாராளுமன்றங்களில் நடைபெறுவதைப்போல் காட்டுமிராண்டித்தனமாக உறுப்பினர்கள் நடந்து கொண்டமை கண்டிக்கத்தக்கது.

பரந்துபட்ட தமிழ் மக்களிடையே, நாடு கடந்த அரசாங்கம் தொடர்பான சரியான புரிதல் இல்லாவிடினும், புலம்பெயர் நாடுகளில் உள்ள மக்களை உள்ளடக்கியதான ஒரு கட்டமைப்பு இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் உடன்படுகிறார்கள். இவ்விடயத்தில போட்டிக்குழுக்களைச் சேர்ந்தவர்களிடையேயும் ஒருமித்த கருத்து காணப்படுவதனை ஒரு அனுகூலமான நிலவரமாகக் கொள்ளலாம். இச்சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி முன்னேறுவதே தமிழ்த் தேசியவாதிகளின் முன்னே விரிந்திருக்கிற பணியான இருக்கிறது. இதனை தவிர்த்து, குறுகிய நலன்களுக்காக குழுமோதல்களை வளர்ப்பது, தமிழ் மக்களின் அரசியற்பாதையில் பின்னோக்கிய நகர்வாகவே அமையும்.

இத்தகைய குழப்பங்களுக்கும், மோதல்களுக்கும் மத்தியில், நாடு கடந்த அரசாங்கத்தின் பிரதம அமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. உருத்திரகுமாரன் அவர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவராக உள்ளார். இருப்பினும் இவ்வமைப்பினை சரியான திசைவழியில் நகர்த்திச் செல்லும் பாரிய பொறுப்பு அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்பதனை உணர்ந்து அவர் செயற்படுவார் என எதிர்பார்க்கிறோம்.

மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறோம்

அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

▶ FREE COLLECTION WITHIN THE M25 AREA

▶ PAY ALL COLOMBO CHARGES CUSTOMS CLEARANCE AND DELIVERY IN THE UK. EXCEPT DUTIES AND TAXES

▶ ALL COLOMBO DELIVERIES WILL BE DONE WITHIN 24 HOURS OF CLEARANCE

▶ ALL CARGO OUTSIDE COLOMBO WILL BE DELIVERED WITHIN 48 HOURS OF CLEARANCE (EXCEPT JAFFNA)

PLEASE NOTE THAT FOR CUSTOMS CLEARANCE PURPOSE YOU STILL NEED TO GO TO THE TRICO UPB WAREHOUSE IN COLOMBO, GALLE AND KURUNEGALA, BUT NOTHING TO PAY EXCEPT TAXES!

CHENNAI 2XT/CHESTS ONLY £90.00
COCHIN 2XT/CHESTS ONLY £105.00
BANGALORE 2XT/CHESTS ONLY £110.00
MUMBAI 2XT/CHESTS ONLY £90.00

ONLY £10.00 T/CHEST TO SRI LANKA

CALL US NOW : 020 8888 8787

TRICO
T: 020 8888 8787 F: 020 8889 5445
Email: info@tricofreight.co.uk
Web: www.tricofreight.co.uk
Trico Freight UK Ltd
555 Whitehart Lane, (Safehouse Storage Units)
London. N17 7RP

# சிறீலங்காவின் பரப்புரை வலையில் வீழ்ந்து கிடக்கும் தமிழ் ஊடகங்கள்

சுந்தரி
*(ஒரு பேப்பருக்காக)*

எமது ஊடகங்கள் சில சொற் பிரயோகங்களை அப்பிடியே சீறிலங்காவின் பரப்புரையில் உள்ளது போல பாவிப்பதன் மூலம் தெரிந்தோ தெரியாமலோ அப்பரப்புரைக்கு மறைமுகமாகத் துணை போகிறார்கள்.

International commission of Jurists இன் "Sri Lanka's Mass detention of LTTE suspects" என்ற Sep 2010 அறிக்கையில் 'சிறீலங்காவில் 8,000 பேர்களை குற்றச்சாட்டோ, விசாரணையோ இல்லாமல் 2005 ம் ஆண்டின் அவசர கால சட்டத்தின் கீழ் அவர்களை புனர்வாழ்வுக்குள் உட்படுத்த உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்கள் அதைக் குறிப்பிடும் போது "Rehabilitation" (புனர்வாழ்வு) என்ற பதத்தை மேற்கோள் குறிக்குள் போட்டிருந்தார்கள். அதாவது அவர்கள் அதை புனர்வாழ்வு என்று ஏற்றுக் கொள்ளவில்லை ஆனால் சீறிலங்கா அரசாங்கம் சொன்னதை அப்பிடியே எழுதியிருப்பதாகப் பொருள் படும்.

ஆனால் பல இடங்களில் எமது தமிழ் ஊடகங்கள் சீறிலங்கா பாவிக்கும் அதே சொற்களை அப்படியே தாங்களும் பாவிப்பது அச்சொற்பதங்கள் சொல்லும் அர்த்தத்தை தாமும் ஏற்றுக் கொள்வதாக பொருள் படுகின்றது. செய்தி தொகுப்பாளர்களுக்கும், அவர்கள் தவறும் இடத்து செய்தி வாசிப்பாளர்களுக்கும், மற்றும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் இது பொருந்தும்.

'நலன்புரி கிராமங்கள்' என்ற சிறீலங்கா அரச ஊடகங்கள் பாவிக்கும் அதே பதத்தை அப்பிடியே எமது ஊடங்களும் பாவிக்கின்றன. அப்பிடி என்ன நலன்களை தான் சிறீலங்கா அரசு எமது மக்களுக்குச் செய்து விட்டது? இரண்டு தகரத்தை போட்டு, நாலு கம்பை நாட்டி, அதை வீடு என்றும், அதற்குள் அவர்களை விட்டு விட்டு அதை 'நலன்புரி கிராமங்கள்' என்றும் சொல்கிறார்கள் அங்குள்ள மக்ககளின் நலன்களை பாராமரிப்பதற்கு ஏதாவது சர்வதேசப் பொது அமைப்புக்களை அமைத்திருக்கிறார்களா என்றால் இல்லை.

சர்வதேசத்திற்கு காட்டுவதற்கு கண்காட்சிக் கூடமாக ஒன்று இரண்டை வைத்து விட்டு மிகுதியில் மக்கள் அன்றாட கடமை செய்ய முடியாமலும், பெண்களுக்கு சரியான பாதுகாப்பு இன்றியும் மிகவும் துன்பப்படுகிறார்கள்.

ஆங்கில அறிக்கையில் "Internal Displacement camp" என்ற பதத்தை பாவிக்கிறார்கள். இடப்பெயர்தவர்களுக்கான தற்காலிக முகாம் என்று பொருள்படும். பெரும்பாலான மக்கள் அவர்கள் முன்பு இருந்த இடங்களுக்கு, வளமான, அவர்களின் சொந்தக் காணிகளுக்கு போக அனுமதி மறுக்கப்பட்டு சிறீலங்கா அரசுக்கு நலன் தரும் பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

முள்ளுக் கம்பிக்குள் அடைபட்டிருந்தவர்கள் அக்கம்பிக்குள் இருந்து வெளியேறுவதற்கு கிடைக்கும் எந்த வாய்ப்பையும் ஏற்றுக் கொள்கிறார்கள். என்ன மாதிரி தன் தன் காலில் நின்ற மக்களை அடுத்த வேளை உணவை மட்டுமே சிந்திக்கும் படியான நிலைக்கு வைத்து விட்டு அதை 'நலன் புரி கிராமங்கள்' என்கிறார்கள்.

மற்றும் செய்திகளிலும் சீறிலங்காவின் ஜனாதிபதி என்று சொல்வதற்கு பதிலாக ஜனாதிபதி என்று சொல்வது அவரை முற்று முழுதாக எமது ஜனாதிபதியாக நாம் ஏற்றுக் கொள்வதாகப் பொருள்படும். அதே நேரத்தில் சில ஊடகங்களில் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்கிறார்கள்.

என்ன இரண்டுமே உண்மையானவை, எதை பாவித்தாலும் சரி என்கிறார்கள். அவரை தேசியத் தலைவராக ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஆனால் ஜனாதிபதியை மட்டும் தமது ஜனாதிபதியாக ஏற்றுக் கொள்கிறார்கள் என்று தானே பொருள்படும். இவற்றை விளங்கி பாவித்தால் கூட அவரவர் ஊடக உரிமை என்று விட்டுவிடலாம் ஆனால் பலர் இவற்றின் கனதி விளங்காமலே பாவிக்கிறார்கள். இனி பிரதம மந்திரி என்றால் யாரைச் சொல்கிறீர்கள் சிறீலங்காவின் பிரதம மந்திரி Disanayaka Mudiyanselage Jayaratne வையா? அல்லது நாடு கடந்த அரசின் உருந்திர குமாரையா? என்றொரு கேள்விக்கும் எதிர்காலத்தில் இடமுண்டு. எனவே இப்பவே சிறீலங்காவின் பிரதம மந்திரி எனச் சொல்லி பழக்கப்படுத்திக் கொள்வது நன்று.

இன்னும் கொஞ்சம் ஆழமாக யோசித்தால் இலங்கையை இலங்கை (Sri Lanka) என்று சொல்லாமல் இலங்கைத்தீவு (Island of Sri Lanka) என்று சொல்வதே பொருத்தமாகும். ஒரு தீவுக்குள் இரண்டு நாடுகள் இருக்கலாம். ஆனால் ஒரு நாட்டுக்குள் இன்னொரு நாடு இருக்க முடியாது. தமிழீழ தேசத்தை நோக்கி பயணிப்பதாக கூறிக் கொள்ளும் நாங்கள் இதனையும் கவனிக்க வேண்டும்.




ராஜபக்சேவை கூட்டிட்டு வந்து தமிழனை எவ்வளவுத்தான் அசிங்கப்படுத்தினாலும்.. துப்புங்க எசமான்.. துப்புங்க..னு சிரிச்சுக்கிட்டே இருக்குற தமிழன் உண்மையிலேயே ரொம்பபபபபபபபபபபபபபபபபபப நல்லவன் தான்...

16 வருட கால அனுபவம்

**Linga & Co**

Legal Advisors & Immigration Specialists

தீபாவளி வாழ்த்துக்கள்

**We Specialise in:**

- Asylum and Immigration Matters
- Human rights Applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Judicial Reviews
- Work Permits
- EEA Application(Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled migration Programme
- Naturalisation Applications

**V.P. Lingajothy**
LLB (Hons), M.Sc., Dip Fms, A.PLL
Principal
Immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்

முதல் ஆலோசனை இலவசம் (Initial Consultation Free)

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007ம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்கள்ளாயின் உடன் தொடர்பு கொள்ளவும்

மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்.

General Line : 020 8544 9285
Fax : 020 8452 9530

46, High Street
Collierswood
London SW19 2BY
OISC

Emergency Line : 07771 646 441

**GYPS Pest Control Services**

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நின்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

07983 589 993
07723 467 012

# என் இனிய யாழ்ப்பாணமே! போய் வருகிறேன்

கானா பிரபா
*(மடத்துவாசல் பிள்ளையாரடியில்)*

## அண்ணைக்கு ஒரு கொத்து றொட்டி போடு!



*தாவடிச் சந்திக் கொத்து றொட்டிக் கடை*

'உன்னை எவ்வளவு நேரம் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறன், செவிடு மாதிரி ஏனெண்டு கேளாமல் என்னடா பின்னுக்குச் செய்து கொண்டிருக்கிறாய்' தாவடிச் சந்தியில் இருந்து மானிப்பாய் றோட் பக்கம் போகும் திசையின் ஓரமாய் இருக்கும் கொத்து றொட்டிக் கடைக்குள் நான் நுழைந்ததும் அந்தக் கடைக்கார அம்மா தன் வேலையாளுக்குக் கொடுத்த வசவு தான் அது. ஊரில் முந்திய நாட்களில் வருஷம் 365 நாளில் 356 நாள் கோயில் திருவிழா விரதமிருக்கும் எங்கட வீட்டுக்காரருக்குத் தெரியாமால் கூட்டாளிமாரோட தஞ்சம் புகும் இடங்கள் தான் இந்தக் கொத்துறொட்டிக்கடைகள். கடைக்குள் நுழைந்து ஓடர் கொடுத்ததும் ஏதோ ட்ரம்ஸ் சிவமணி கணக்காய் கொத்து றொட்டி அடிக்கிற இரும்புத் தகட்டில் முட்டையை அடித்துப் போட்டு விட்டு, நறுக்கியிருந்த வெங்காயம், பச்சை மிளகாய்க் குவியலை ஒரு கையால் எடுத்துத் துளாவி 'விட்டு, பரோட்டாவைக் கண்டம் துண்டமாய் வெட்டித்தள்ளும் கொத்துறொட்டி மாஸ்டரின் கோடாலியின் இரும்புத் துண்டு போல இருக்கும் ஆயுதம். சைட்டில் இருக்கும் மாட்டிறச்சிக் கறியும் அதில் சங்கமிக்க, மேலே கோழிக்குழம்பு தீர்த்தமாடும். பத்து நிமிஷத்தில் வெங்காயம், மிளகாய், பரோட்டா எல்லாம் திரண்ட கலவை திரூப் பேப்பரில் சுத்திய பிளாஸ்டிக் கோப்பையில் போடப்பட்டுப் பரிமாறப்படும்.

அந்தப் பழைய நினைப்பு மீண்டும் தலைதூக்க, தாவடிச் சந்திக் கடைக்குத் தனியே போய் உட்காருகிறேன். கொத்துறொட்டி வந்தது. பசியில்லை ஆனால் கொஞ்சமாவது சாப்பிட்டுப் பார்ப்போம் என்று ஒரு சில விள்ளல்களை வாயில் வைத்து விட்டுக் கை கழுவுகிறேன். அந்த நாளில் நண்பர்களோடு போய்ச் சாப்பிட்ட காலம் ஒரு தனிச்சுவை போல... அது சாப்பாட்டில் விளைந்ததா அல்லது நட்பில் சுவைத்ததா தெரியவில்லை.


## மாடு கண்டு ஈண்டுட்டுது சிக் லீவ்



யாழ்ப்பாணத்து நண்பர்களை விட்டு விலகும் போது பள்ளிக்காலம், இப்போதோ அவர்களைக் காணும் போது உழைப்பாளிகள். 'ஒரு நண்பன் ஒரு சிற்றூரில் ஆசிரியராக இருக்கிறான். அவனோடு சேர்த்து ஒரு நாலு ஆசிரியர்கள் , தலைமை ஆசிரியர் அவ்வளவு தான் அந்தப் பள்ளிக்கூடத்தின் கொள்மானம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். தலைமை ஆசிரியருக்கு அடுத்து என் நண்பன் தான் சீனியராம்). ஒரு நாள் தலைமை ஆசிரியர் இவனைக் கூப்பிட்டு

'ஒருக்கால் வகுப்புகளைப் பார்த்துக் கொள்ளும் நான் கல்விக் கந்தோருக்குப் போட்டு வாறன்'

என்று விட்டுப் போய் விட்டார். தலைமை ஆசிரியர் போனபின் தான் இவனுக்கு உறைத்தது அன்று சொந்தக் காரர் கோயிலுக்குக் காவடி எடுக்கினம், போகவேண்டுமே என்று இவனும் கொஞ்ச நேரத்தில் சாப்பாட்டுக்குக் கிளம்பி விட்டான். காவடிச் சோறு பரிமாறப்படப்போகுது. இவன் பந்தியில் உட்கார்கிறான். பக்கத்தில் யாரடா




என்றால் சாட்சாத் தலைமை ஆசிரியரே தான்.

'உம்மை எல்லோ வகுப்பைப் பார்க்கச் சொன்னனான்' - தலைமை ஆசிரியர்

'சேர்! நீங்கள் இங்கை வருவீங்கள் எண்டா வந்திருக்க மாட்டன்' இது என் நண்பர்.

ஒரு அலுவலக நாளில் சொந்தக்காரர் வீடொன்றுக்குப் போனேன். அந்த வீட்டுக்காரரின் மகன் அன்றைக்கு வேலைக்குப் போகவில்லை, ஏனென்று ஆர்வக் கோளாறினேன் அதற்கு அவன்

'மாடு கண்டு ஈண்டுட்டுதண்ணை அதான் போகேல்லை'

## கிழித்துப் படிக்கப்படும் புத்தகங்கள்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தடியில் வழக்கம் போலப் பூபாலசிங்கம் புத்தகசாலைக்குப் போய் நூல்களை மேய்ந்தேன். சுவாமி(?) நித்தியானந்தாவின் அருள்மொழிகளைத் தாங்கிய குண்டு குண்டான புத்தகங்களைக் கண்டபோது நக்கீரன் சொன்னது ஞாபகம் வந்தது. அட நான் சொல்லவந்தது நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே.

ஆனந்த விகடன், குமுதம் போன்றவற்றில் இலங்கைப் பிரச்சனை குறித்து ஏதாவது கட்டுரையோ, கார்ட்டுனோ வந்தால் அவை கிழிக்கப்பட்டுத் தான் இங்கு விற்பனைக்கு விடப்படுகின்றன. இதே ரீதியில் நக்கீரன் போன்ற சஞ்சிகைகளைக் கிழித்தால் விளம்பரப்பக்கம் தான் மிஞ்சுமோ என்றோ நக்கீரன் போன்ற பத்திரிகைகளுக்குத் தடா. பஸ் நிலையத்தில் இருக்கும் பூபாலசிங்கம் புத்தகசாலை சிறியது, வேறு பெரிய கடை உண்டா என்று கடையில் வேலை செய்த பெண்ணிடம் கேட்டேன். 'வேம்படி றோட்டில் ஒண்டிருக்கு, போய்ப் பாருங்கோ'

அடுத்த நிமிடம் வேம்படி றோட் பூபாலசிங்கத்துக்கு லுமாலா பறந்தது.

அங்கே வேலையில் இருந்த பெண்ணை அழைத்து

'ஈழத்து எழுத்தாளர்கள் படைப்புக்கள் இருக்கா' - இது நான்

'புதுசா ரமணிச்சந்திரன், உமா பாலகுமாரின் புக்ஸ் இருக்கு, வேணுமா' - இது வேம்படி றோட் பூபாலசிங்கம், அங்கே இருந்த பெண்

யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பும் நாள், நண்பர்கள் இணுவில் சந்தியால் வரும் கொழும்பு பஸ்ஸில் என்னை ஏற்ற நிற்கின்றார்கள். பேசாமல் எல்லாவற்றையும் உதறிவிட்டு இங்கேயே இருப்போமா மனம் மாறி மாறி என்னைக் கூறு போடுகிறது. கொலைக்குற்ற வாளியின் இறுதி விருப்பங்களை நிறைவேற்றி விட்டு தூக்குமேடைக்கு அனுப்பும் நிலை அது.

விருப்பமில்லாத பிள்ளையைப் பாலர் வகுப்புக்குத் துரத்தி அனுப்புமாற் போல மனம் உள்ளே மௌனமாகக் குமுற அம்பாள் பஸ்ஸில் ஏறுகிறேன். மீண்டும்

'உன்னை நினைத்து' படத்தைப் போட்டுச் சாவடிக்கிறார்கள்.

என் தாய் நிலத்தில் நிரந்தரமாக உண்டு உறங்கும் நாளை எனக்கு ஆண்டவன் அருள்பாலிக்க வேண்டி விடைபெறுகின்றேன், என் இனிய யாழ்ப்பாணமே!

Kam & Co Accountants
- Company Accounts & Tax Returns
- Self-Assesment Tax Returns
- Book Keeping & VAT
- Payroll & Solicitors Accounts

Tel: 020 7388 8444
Mob: 07740 620 391
Fax: 020 7388 8466
Lower Ground Floor, 24 Conway street, London W1T 6BG
E mail: kamco@btconnect.com

Petrol Station For Lease or Rent!
Petrol Station for Lease or Rent in ILFORD Area
Contact Details:
Suren : 07956289237

Perma Shipping
பிரேமா விமான, கப்பல் பொதி சேவை
Air Freight World Wide
Collection, Packing & Crating
Urgent, Documents, Parcels Door Delivery
Customs Clearance By Sea/Air
Delivery to anywhere in Srilanka
யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை!
G14, Big Yellow, 1-3 Wyvern Industrial Estates, Beverely Way, New Malden, Surrey KT3 4PH
Tel: 02086465222 Mob: 07939550397

CHEF/COOK WANTED
for a busy Sri Lankan Restaurant in Balham (SW12).
Exeperience Required.
Pay £7.50-£8.50 per hour
Please call Bahi
0772 054 7714

Meera Arnold & Co
for all your accounting needs...
pay roll
Accountancy
Auditing
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

# சர்வதேச நியமங்களுக்கு முரணாக நிறைவேற்றப்பட்ட நாடு கடந்த அரசின் யாப்பு

**சி. சந்திர மௌலீசன்**
ஒரு பேப்பருக்காக

அரசியல் அமைப்புச் சட்டத்தை ஒரு பாடமாக எடுத்து சட்டத் துறையில் பட்டம் பெற்றவன் என்ற வகையிலும், தமிழனாய் பிறந்த பாவத்திற்காகவும் இதனை வரைகின்றேன்.

'தமிழர்களின் சுபீட்சமான வாழ்வுக்கு தமிழீழம் தான் தீர்வு. அது சாத்தியமா இல்லையா என்பது எமது செயல் பாட்டிலும் அதனூடாக சர்வதேச அங்கீகாரத்தை பெறுவதிலும் மட்டுமே தங்கி உள்ளது' என்பதை நம்புவன் நான். இன்றுள்ள நிலைப்படி, எனது அறிவுக் கெட்டியபடி எவரும் சரியான பாதையில் நகர்வதாகத் தெரியவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், அதன் சரி பிழைகளுக்கு அப்பால், அது சிறு அமைப்பாக இருந்த காலம் முதல் கடைப்பிடித்து வந்த ஒழுக்கக் கோவை, செயற்பாடுகளில் முழுமையான ஈடுபாடு கொண்ட உறுப்பினர்கள், கொள்கையில் கொண்டிருந்த உறுதிப்பாடு என்பன அவர்களை சிறந்த கரந்தடிப் படையாகவும், சிறந்த இராணுவ கட்டமைப்பாகவும் வளர வழி சமைத்தது. அவர்களின் இராணுவ திறமை எதிரிகளால் பாரட்டபடுமளவுக்கு இருந்தது. இருப்பினும் சர்வதேச அரசியல், இராஜ தந்திர உறவுகளை வளர்க்கும் விடயத்தில் அவர்கள் வெற்றியடையத் தவறிவிட்டார்கள்.

அதே போல் நா.க. அரசு சர்வதேச அரசியல், இராஜ தந்திர அங்கீகாரத்தை பெறத் தவறுமாயின் புலம் பெயர் செயற்பாட்டாளர்களின் முள்ளிவாய்க்கால் தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

தெரிந்த இராணுவ தந்திரோபாயங்களோடு புதிய தந்திரோபாய சிற்பிகளாக தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்ததால் அவர்களை உலகம் இராணுவ வல்லமை மிக்க சக்தியாக பார்த்தது. அதே போல் சர்வதேச அரசியல் விதிகளை அனுசரிப்பவர்களாக மட்டுமல்லாது, ஜனநாயக வழிமுறைகளில் புதிய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்தும் சிற்பிகளாக நா.க அரசு மாறவேண்டும். அப்பொழுது தான் உலகம் எம்மை திரும்பிப் பார்க்கும். அங்கீகரிக்கும்.

## நா.க. அரசின் யாப்பு

நா.க அரசு உருவாக்கியிருப்பது ஒரு யாப்பே தவிர அது அரசியல் அமைப்பு விதி அல்ல. என்றாலும் அவ்யாப்பினை மாற்றும் அதிகாரம், அரசை கலைத்தல் ஆகிய இரண்டும், யாப்புக்கும், அரசியல் அமைப்பு விதிகளுக்கும் பொதுவான விடயங்கள்.

ஆனால் நடந்தேறிய விடயங்களை பார்க்கும் போது அவை சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டதாகத் தெரியவில்லை. உதாரணமாக 'ஒரு அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதற்கு அறுதிப் பெரும்பான்மையும், அரசியல் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு மூன்றில் இரண்டு வாக்குகளும் அவசியம்' என்பது பொதுவான அரசியல் விதி. இந்நடைமுறைக்கு, முற்றிலும் முரணான விதத்தில் நா.க. அரசு' நம்பிக்கையில்லா பிரேரணையை நிறைவேற்ற மூன்றில் இரண்டு வாக்குகளும், அரசியல் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அறுதிப் பெரும்பான்மையும் அவசியம்' என தீர்மானித்துள்ளது. இவை சர்வதேச அங்கீகாரத்துக்கு வழி சமைக்காது, மாறாக சர்வதேச நிராகரிப்பிற்கே வழிகோலும் செயலாகும்.

இவ்விடத்தில் அறுதிப் பெரும்பான்மை என்ற வார்த்தை பிரயோகம் தொடர்பாக விளக்க வேண்டியுள்ளது. அது மூன்றில் இரண்டை குறிக்கும் எனச் சிலர் தவறாக விளக்கமளிக்கின்றனர். அறுதிப் பெரும்பான்மை என்பது ஐம்பது வீத்த்திற்கு அதிகமானோரைக் குறிக்கும். அதுவும் மொத்த உறுப்பினர்களில் வந்தவர் வராதவர் உட்பட பெரும்பான்மையை குறிக்கும்.

## அமெரிக்க அரசியல் அமைப்பு

நா.க அரசின் இந்த கூட்டத்தில் அமெரிக்க அரசியல் அமைப்பு பற்றி முழுமையாக அறிந்திருக்கக்சகூடிய அந்நாட்டின் முன்னாள் சட்ட மா அதிபர் ராம்சே கிளார்க் கலந்து கொண்டிருக்கிறார். 1787 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் திகதி அமெரிக்க அரசியல் அமைப்பு உருவாக்குவது தொடர்பான மகாநாட்டை ஆரம்பித்து உரையாற்றிய ஜனாதிபதி பெஞ்சமின் பிராங்க்ளின் எல்லா (அப்போதிருந்த 13 ) மாநில பிரதிநிதிகளும் புதிய அரசியல் அமைப்புக்கு உடன் படவேண்டும் என கோரியிருந்தார். எனினும் அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பான மாநாட்டு குழுவினர் ஒன்பது உறுப்பினர்கள் (மூன்றில் இரண்டு) பலம் போதுமானது எனத் தீர்மானித்தனர். கிட்டத்தட்ட மூன்று வருட விவாதத்தின் பின் தான் அமெரிக்க அரசியல் அமைப்பு உருவானது. இது தான் அமெரிக்க என்ற பலம் மிக்க நாடு உருவாக்கத்தின் ஆரம்ப வரலாறு. அமெரிக்க அரசியல் அமைப்பு மாகாநாடு உருவாக்கம் நடை பெற்ற போது அமெரிக்கா பிரித்தானியாவுக்கு எதிரான சுதந்திர போராட்டத்தில் இருந்தது. இதனால் இங்கு மனித உரிமை தொடர்பான பல நல்ல விடயங்கள் உண்டு.

## மலேசிய அரசியல் அமைப்பு

மலேசிய பினாங்கு முதல்வரும் இந்த கூட்டத்தில் கலந்து கொன்டுள்ளார் . மலேசிய அரசியல்மைப்பு சட்டமும், இவ்வாறே அரசியல் அமைப்பு மாற்றத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தான் கோரி நிற்கின்றது.

அமெரிக்க முன்னாள் சட்ட மா மா அதிபருக்கும், பினாங்கு முதல்வருக்கும் அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டு வர மூன்றில் இரண்டு வாக்குகளும், பிரதமரை நீக்க அறுதிப் பெரும்பான்மையும் தேவை என்பது உலக நியதி எனபது நன்கு தெரியும். நாடு கடந்த அரசின் யாப்பு ஒரு அரசியல் அமைப்பு இல்லாவிடினும் அது ஒரு நாட்டிற்கு நிகரான நிறுவனத்தின் யாப்பு என்ற வகையில் அடிப்படைகளை மீறுவது நல்லதல்ல. இந்த வகையில் என் மனதில் உள்ள கேள்வி நா.க அரசு பிரதிநிதிகள் சட்ட மா அதிபரினதும், முதல்வரதும் ஆலோசனைகளை பெறவில்லையா? அல்லது அவர்களும் தங்களுக்கு வேண்டிய கைப்பொம்மை ஒருவரை வைத்து காரியம் சாதிக்கும் திட்டத்தில் இதனைச் செய்தார்களா?

யாப்பு என்பது ஒரு தேசத்தின் தேசியக் கொள்கைகளை உள்ளடக்கியதாக இருப்பதால் அது இலகுவில் அறுதிப் பெரும்பான்மையுடன் மாற்ற முடியாததாக இருக்க வேண்டும்.

இதே வேளை பதவியில் இருக்கும் ஒருவர் யாப்பின் கொள்கைகளை கடைபிடிக்க தவறின் இலகுவில் நீக்கும் பொருட்டு அறுதிப் பெரும்பான்மை நடைமுறையில் உண்டு. நாடுகடந்த அரசின் தற்போதைய யாப்பு விதிகளை நோக்கும் போது

'தேசிய கொள்கைகளை அறுதிப் பெரும்பான்மையுடன் இலகுவில் மாற்றக் கூடியதாகவும், பதவியில் ஏற்றப் பட்டவரை இலகுவில் இறக்க முடியாதவாறும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' உதாரணமாக நிறுவனத்தின் கொள்கை தற்போது தமிழீழம். அது இலகுவில் மாற்றப் படக் கூடியது என்பதை எதிர்பார்க்கலாம். அறுதிப் பெரும்பான்மை நினைத்தால் தமிழீழ கொள்கையை மாற்ற இது வழி வகுக்கும். இத்தகைய யாப்பின் உருவாக்கம் ஆபத்தானது. இவ்வாறான நிலையற்ற அல்லது உறுதியற்ற அல்லது உத்தரவாதமற்ற அரசியல் சமூக கொள்கை சர்வதேச உறவுக்கு பொருத்தமானதல்ல .

எந்த ஒரு நாடும் இராஜதந்திர உறவுகளை உருவாக்குவதற்கு முன் முதலில் பார்ப்பது அந்நாட்டின் அரசியல் அமைப்பையும் அதன் கொள்கையையும் ஆகும். நா.க அரசின் இந்த அரசியல் அமைப்பை எந்த ஜனநாயக நாடும் மதிக்காது. ஏனெனில் நா. க. அரசின் பிரதான கொள்கையான தமிழீழம் அறுதிப் பெரும்பான்மையுடன் இலகுவில் மாற்றக் கூடியதாக அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே,

சர்வதேச நியமங்களுக்கு முரணாக நிறைவேற்றப்பட்ட நாடு கடந்த அரசின் யாப்பு சர்வதேச நியமங்களுக்கு அமைய திருத்தப்பட்டு சபையில் மீண்டும் சமர்ப்பித்தல் நா.க அரசின் சர்வதேச அங்கீகாரத்துக்கு அவசியம்.

இது நடைபெறத் தவறின் உறுப்பினர்கள் அனைவரும் இராஜினாமா செய்து தமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்.

எமது செயற்பாடுகள் 'வெள்ளையிலும் வெள்ளையாக' (Whiter than white) ஆக இருக்க வேண்டும். எமது செயற்பாடுகளின் ஒழுக்கத் தன்மை சாதாரணத்தை விட மிகச் சிறந்தது என்ற அபிப்பிராயம் ஏற்படவேண்டும்.

தனி மனித விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நின்று நாம் செயற்பட வேண்டும். எமக்குள் நாமே குறு நில மன்னர் ஆவது சிறு 'பிள்ளை விளையாட்டாகவே முடியும். சர்வதேச பந்தயங்களில் பங்கு பற்றுபவர்களைப் பாருங்கள் ஒரு சிலர் போட்டியில் முதலாவதாக வந்தாலும் சர்வதேச நியமங்களை கடைப்பிடிக்காததால், கௌரவத்தை இழந்தது வாழ்கின்றனர்.

## இணையதளம்

இன்றைய உலகில் சாதாரண வியாபார நிறுவனங்கள் முதல் அனைவரும், நிறுவனத்துக்கு என்று ஒரு இணைய தளத்தை எவ்வளவு அழகாக வைத்து நிர்வகிக்கின்றார்கள். நாடுகடந்த அரசின் www.tgte.org இணைய தளம் கடந்த நான்கு மாதங்களாக செயலற்று உள்ளது. அதில் ஒரே ஒரு அறிக்கை மட்டும் உள்ளது. அரசு பிரதி நிதிகளின் விபரம் முதல் கொள்கை, செய்திகள் என பல இருக்க வேண்டிய இடத்தில் எதுவுமே காணப்படவில்லை. சபாநாயகர், பிரதமர் பதவிகளுக்கு அடிபடுபவர்கள் இத்தகைய நடவடிக்கைகள் ஊடாக தமது திறமைகளை வெளிக்கொணரத் தவறியுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலை புலிகள் மற்றும் ஆயுதம் ஏந்திய ஏனைய அமைப்புகள் சர்வதேச அங்கீகாரத்தை பெற முடியாமல் போனது தான் எமது முள்ளிவாய்க்கால் நிலைக்குக் காரணம்.

இந்நிலையில் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சர்வதேச அங்கீகாரத்தை தேடும் பாரிய கடமை புலம் பெயர் மக்களிடம் உண்டு.

இந்த வகையில் மற்றைய நடவடிக்கைகளுடன் ஒப்பிடும் போது நாடுகடந்த தமிழீழ அரசு சரியானதொரு பாதை. இந்த பாதையில் வைக்கப்படும் ஒவ்வொரு அடியும் சர்வதேச கௌரவத்தை அங்கீகாரத்தினை தேடுவதாக அமைய வேண்டும்..

இவற்றை செய்யத் தவறின் சர்வதேச அங்கீகாரம் பெறாத 'ஏரியா கொமாண்டர்கள்' போல, நாடுகடந்த பிரதமரும், மந்திரிமாரும், இருக்க நேரிடும்.

எந்த ஒரு நாட்டிலும் புதிய அரசியல் அமைப்பை அமுல்படுத்துவதாயினும் சரி, அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டு வருவதாயினும் சரி சபை உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு அங்கீகாரம் அவசியம். அதற்கு குறைவானவர்கள் பிரசன்னமாய் இருந்து எடுக்கப் படும் அரசியல் அமைப்பு செல்லுபடியற்றது இது சர்வதேச நியமம்.


எனவே 135 உறுப்பினர்களைக் கொண்ட நாடு கடந்த அரசு சபையில் 48 மட்டும் பிரசன்னமாய் இருந்து உருவாக்கப் பட்ட யாப்பு செல்லுபடியற்றது. சபை மீண்டும் கூட்டப்பட்டு சர்வதேச தரத்தில் யாப்பு உருவாக்கப் படவேண்டும்.

இந்த யாப்பை அடித்தளமாக வைத்து எடுக்கப் படும் முன்னெடுப்புக்களுக்கு சர்வதேச நிறுவனங்கள் உரிய கௌரவ்ம் தர மாட்டார்கள். ராஜபக்சே அரசின் 18 ஆவது சரத்துக்கு எதிராக சர்வதேச நாடுகள் செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கும் நாம் அதே தவறை விட்டால் புலம் பெயர் முள்ளிவாய்க்கால் நிச்சயமாகிவிடும்.

*(தொடர்ச்சி 18ம் பக்கம்)*


அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from concept to design

# Sri Lanka is the next Cambodia, not the next Singapore



*"Cambodia and Sri Lanka have reached the same point of rejecting the liberal democratic foundations of their countries. The jailing of the opposition leaders of both countries is symbolic of the commonality of the political strategies and ideologies."*

**By Basil Fernando**

What Sarath Fonseka and Sam Rainsy have in common is that they are the most popular opposition leaders in their countries and that they have been jailed for that very reason. Political popularity is treated as a serious crime in both countries, where the ruling parties are aspiring to create one party rule.

Here are some similarities between the political styles followed by the ruling regimes in both countries:

The ruling regimes enjoy more than 2/3 majority in their parliaments. Hun Sen in fact has 90 seats out of 123 in the parliament, in which Sam Rainsy's party has 26 seats. When the first election was held after the Pol Pot period May 1993, the opposition party won the election and the party of the present Prime Minister Hun Sen lost despite of their having the territorial control of the largest part of Cambodia. However, through subsequent elections, Hun Sen's party has gradually gained control of power and the Funcinpec party, which was the party created by the former king, Norodom Sihaneuk. From having the majority, the Funcinpec party, was reduced to two seats in 2008. The next opponent to the ruling party was Sam Rainsy and now he is being jailed on flimsy charges. The ruling regime controls the courts and is able to get whatever verdicts it wants on political matters.

Sarath Fonseka, who was a military leader, was chosen as the common opposition candidate for the elections by several political parties and he was able to get nearly 40% of the vote (he claims that he in fact won the election and was wrongfully deprived of the victory). Later, in the parliamentary elections, he became a Member of Parliament and he was elected while he was being kept in military custody. Later he was sentenced to jail by court martial and the president, his political opponent, confirmed the verdict of the military tribunal. The arrest by the military and the use of the military tribunals was designed to deprive fair trial for the political opponent of the president.

Thus, the manipulation of the judicial process to achieve political ends has become a very essential component of the political apparatus of the suppression in both countries. Cambodia became a liberal democracy only recently. That is, by the agreement of all political parties to the Paris Agreements which created the basis for the United Nations interventions to organize elections after a long period of political devastation of the country.

The constitution which was adopted for the new Cambodia in 1993 declares Cambodia as a liberal democracy. The structure of the constitution is based on liberal democratic principles. However, at the time that the constitution was adopted, none of the basic institutions which were needed for liberal democracy existed in the country. That was because of the ruthless revolution of Pol Pot in which over 2 million people were destroyed and all the institutions in Cambodia were also brought to an end.

The most permanent institution of Cambodia, which was the monarchy, was also virtually brought to an end by the Khmer Rouge revolution, which took place between 1975 and 1979. Thereafter, a group of Cambodians supported by the Vietnamese took over the rule of the major part of Cambodia. The Vietnamese advisors laid the foundations for the infrastructure of administration in the devastated country. Naturally, their system of administration was based on socialist principles. The basic administration is controlled by the ruling political party. The 'court system' that was introduced was in fact an apparatus of administration to safeguard the state rather than to protect the rights of the citizens.


It was on this administrative apparatus that a liberal democratic constitution was imposed. Naturally, there was no bridge between the constitution and the actual administration. Within a short period of time, the constitution lost all practical relevance for the administration of the country. Thus, it was possible for the CPP of Hun Sen to reassert their control. Thus, Cambodia became a liberal democracy only in name.

Sri Lanka had a very much longer history of development of civil administration and judicial institutions on the basis of the common law tradition. When the country became independent from the British, Sri Lanka also adopted a liberal democratic constitution. There was a tradition of judicial institutions which had a history of 200 years. The system of civil administration was also had a more or less similar history. Education on liberal democratic principles had gone on for a long period and many persons were qualified as judges, lawyers and civil servants, in foreign universities. Later, the local educational institutes of high quality also developed in the country. The constitution after independence operated on the basis of these developments.

In 1978, however, there was an abrupt change in the constitutional structure of the country. While keeping a façade of liberal democratic jargon, an executive presidential system without any checks and balances was introduced into the country. The executive president was placed above the law and was not answerable to the courts. This was in radical contradiction to the tradition which had existed in the country until then. In the initial stages there was resistance to the new system introduced by the 1978 Constitution and the first Chief Justice, Neville Samarakoon, appointed by the same executive president who created the constitution, symbolized this resistance by his own open opposition to the executive president. However, over several decades, the system got consolidated, undermining the parliamentary system, judicial service and also all the public institutions of the country. Gradually, the executive presidential system devoured and destroyed the liberal democratic system, and its course was completed by the 18th Amendment to the constitution, which was passed just a few weeks ago.

Cambodia and Sri Lanka have reached the same point of rejecting the liberal democratic foundations of their countries. The jailing of the opposition leaders of both countries is symbolic of the commonality of the political strategies and ideologies. The idea that economic development requires a strong leader who is not opposed by other political forces is the core of the ideology that is common to Cambodia and Sri Lanka now.

# I wasn't expecting a medal



*Tamil gymnast Prasanth Sellathurai*

The Australian gymnast Prashanth Sellathurai was pleasantly surprised to realise he has won a bronze medal in the parallel bars event of the artistic gymnastics on Friday.

Already a winner of a gold medal in the pommel horse category, the shy Australian bagged a bronze medal in the parallel bars by scoring a perfect 14.000 on the board. His teammate Joshua Jefferies grabbed the gold with 14.625 points on the board.

"I was not expecting to get a medal on parallel bars. I guess, I am pretty lucky to end up with one", said the Australian of Sri Lankan origin.

An expert in the pommel horse, Sellathurai never believed the parallel bars to be his strong point. He said: "It (parallel bars) is not really a strong event for me. Other guys are lot stronger. My main area is the pommel and rings."

The gymnast said he was rooting for Kumar to grab the gold on Friday because he did a good job on the routine.

Ashish was really strong on floor and vault. I was kind of hoping that he would get a gold today because I know it means a lot. He came very close to it," he said.

The young gymnast mentions though it does not matter to him who his competitor is, he believes that England is one country to look out for.

"England are tough competitors in the team event. All these guys are pretty competitive and even on the other events", he said adding that as long as he completes his routine, he is happy.


Sellathurai said travelling to India has been a fantastic experience and that it feels like a second home.

"It has been a fantastic experience in India. I have been here before. It does not really feel that I am competing abroad," he said as the crowd cheered him with deafening applause.

*Courtesy: Indian express*



# Singapore no example for Sri Lanka!



By: Vikramabahu Karunaratne

Strange arguments are put forward to explain the development of Singapore. It is claimed, based on such arguments that it is a living example of a developed nation to be followed by countries like us.

European city with no agrarian sector

In the first place Singapore is not a country but a city state placed on a rock. It was originally a part of Malaysia. Singapore declared independence from Britain unilaterally in August 1963 and joined the Federation of Malaysia in September along with Malaya, Sabah and Sarawak after the result of the 1962 Merger Referendum of Singapore.

Later Singapore was expelled from the Federation after an ideological conflict between the state's PAP government and the federal government in Kuala Lumpur. Thus it became an island city state where English is the main language. While Muslims and Hindus together are less than 20 %, others are mostly nominally Buddhist or Christian.

Secondly it has no agrarian problem and agriculture is almost non existence. Hence it is more like a European city though situated in Asia.

Special political path it took was entirely due to this unique demography. Lee Kuan Yew, the first prime minister of Singapore ruled the city state more like a prince from medieval Europe. His politics has more connections to Machiavellian theories than with modem bourgeoisie politics.

## National problem

In effect Singapore does not and cannot give any indication relevant to politics or economic development of Lanka. Our main problems are due to the inability, on the one hand to remove agrarian backwardness and on the other hand to solve the Tamil national problem.

Singapore city state did not have an agrarian problem, and their national identity problem was solved by accepting English as the common language.

Also strong actions were taken against racism. Of course we could have taken English language to the people with at least a department for English teaching. Actually we should have one whole ministry for that purpose. On the other hand, certainly racist violence of 57 and 83 should have been avoided. Still Singapore is not an example we could have followed.

> He promised any thing and every thing to enter the domain of global capitalism.

We do not need the example of Singapore to prove that successful countries developed industrial strength before they fully open up their markets. In fact this is what America did after gaining independence.

If the founding fathers had listened to Adam Smith then Americans would have been tilling fields while Britain developed as an industrial state! But that is not what happened. Because using hefty tariff barriers America went in to industrialization.

One could say that America's route was followed by Germany, Japan and the Asian tigers. Most economies in East Asia did no start to liberalize imports until export growth was well established. This is an attempt squarely in the Keynesian tradition to show that trade can be made to work for the poor. But in the recent past trade restrictions cost poor nations twice as much as they receive in aid.

One could claim that the above argument is pretty out of date. But it is still valid against the ideas of neo liberalism where powerful keep important sectors protected while the weak nations are forced to obey the rules of free market.

## Radically wrong

The way the world's trading system works has little to do with ideology and everything to do with power. The strong are interested in free trade only when it suits them. In any case all these dreams of creating an industrial state are made ridiculous by the modern development of capitalism.

There is absolute necessity today to look into the problems of diminishing resources, destruction of environment, grave food shortage and possible nuclear disasters. There is something radically wrong with the system of global capitalism based on greed and super profit.

However Mahinda in his recent visit to America devoted much of his time to win the favors of global masters. He promised any thing and every thing to enter the domain of global capitalism.

He said that many of the atrocities of terrorism that the West has come to experience in recent times, the people of Sri Lanka were themselves the victims of, for nearly 30 years, losing almost one hundred thousand lives, among them being a President of Sri Lanka, a visionary leader of India and scores of intellectuals and politicians.

However he carefully covered up the brutal repression of Tamil nationality and the issue of Tamil self government. He said further;

"I can also proudly claim that my country through the economic strategy is comfortably realizing the millennium development goals, well in advance of the target set by the United Nations. We are at present strongly focusing on putting in place the necessary public infrastructure and strengthening the enabling policy environment for the private sector to invest even more in my country. In order to achieve the full realization of our potential, we desire a supportive external environment. Towards this end, we will always look for constructive engagement and partnerships. We will from our side, continue to contribute as we have always done, to the cause of multi-lateralism and a principled global order."

Thus while paying lip service to the Palestine issue with a friendly gesture to the Iranian president, Mahinda begged, pleaded and crawled before the Western powers and their associates, for crumbs and pieces.


TrainingConnect

Tel: 0208 538 0248 WWW.TRAININGCONNECT.CO.UK

Centres across London - Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway. Aldershot, Birmingham, Bedford, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Wolverhampton

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow - TW4 6JQ

Our 100% Commitment "You Pay Only Once & We Train You until You Pass – No Retake Fee"
Have successfully trained over 20,000 students | Courses from £200 | Certificates within 20 days
We are an 'Accredited College' as per UKBA new rule.

ESOL with Citizenship
For All Those Applying for:
- ✓ Extension of Stay Visa
- ✓ Indefinite Leave to Remain (ILR)
- ✓ British Passport / Naturalisation

OR
- ✓ Those failed Life in the UK Test
- ✓ Below Entry Level 3 of English

International ESOL Diploma
For All Those Applying for:
- ✓ Tier 1 (Highly Skilled Migrants)
- ✓ Tier 2 (Skilled Migrants)

Applicants Also Include
* Religious Ministers *Engineers
Chefs *Investors*Sports Persons
*Entrepreneurs




Online ESOL Courses Available

Special Offer!!!

Your nearest centre in London:
Hounslow: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
Kenton: 208 Kenton Road, Harrow HA3 8DX
Wembley: 116 Ealing Road, Wembley HA0 4TH
Holloway Road: 260 – 268 Holloway Rd, N7 6NE
Whitechapel: 4th Floor, 46-92 Whitechapel Rd, London, E1 1JX

Citizenship Courses from only £200



RAM

SALES LETTINGS MANAGEMENT MORTGAGES



" We are looking for all sorts of properties for our awaiting professional tenants"

LANDLORDS

" Are you looking for a professional agent who would be able to assist you with selling or renting your property?"



" We are currently looking for a properties in East London"

Call Us On:
020 8550 8788

E-Mail:
contact@ramestateagent.com
Log on:
www.ramestateagent,com

713 Cranbrook Road, Gants Hill, Ilford, Essex, IG2 6RJ

# KIDS

## The Rabbit and the Elephant

A herd of elephants in the forests of India was paying the price for man's greed. Man was however thoughtlessly cutting down trees to get some short lived gains. The elephants were suffering. . the The lake had dried. So they moved to the interior of the forest where there found a lake that still had water. Happily they decided to make it their home.

That lake was the residence of a bunch of rabbits, who didn't like the elephants.

"The elephants are not evil, but their presence spells doom for us - the feeble".

"So we must drive them out of here",said a wise rabbit called Long-ear.

"With strategy not strength".

The next night Long-ear went to see their king. The king of elephants was amazed to see such a tiny creature.

Long Ears introduced himself thus:

"Oh king I am the messenger of the king of the rabbits.

My king, The Moon wishes you to take your tribe to another lake for he does not like any other creatures in his kingdom"

The king of the elephants wanted to see the king of rabbits.

Long Ears said, " My king is in the lake, you can see him but don't disturb him" .

Long Ears pointed to the Moon's reflection in the clear night waters.


The king of elephants felt he could not disobey such as magnificent ruler and left the next morning with the herd. Long-Ears went back to the rabbits and said:

"Using names of those with fame can achieve a lot".




One little kitten needs help getting the kite ahhh!!! very kind to the little puppy.

*By: Sharuga (8 years old)*



Beautiful fish swinging up and down to have good and hide in the treasure chest. I like fish becouse they are funny and cool, also very beautiful.

*By: Sharuga (8 years old)*




The tiger is my favourite animal becouse it's fierce and am I. Tigers are beutiful and I love its stripes

*By: Darcica A Arulnesan from Wimbledon*

## Jokes

Q. When is a house not on land and not on water?
**A. When it's on fire!**

Q. How are prisoners and astronauts alike?
**A. They are both interested in outer-space.**

Q. A cowboy went on a trip on Friday, stayed three days, and came back on Friday. How is that possible?
**A. His horse was named Friday.**

Q. A hiker went without sleep for seven days and wasn't tired. How come?
**A. He slept at night.**

Q. When is a gun unemployed?
**A. When it's fired.**

Q. A man drove 2,000 miles with his family without knowing he had a flat tire. How come?
**A. It was his spare tire that was flat.**

Q. When is a house not on land and not on water?
**A. When it's on fire!**

## Funny Quotes!

"Basketball is like photography, if you don't focus, all you have is the negative."

"They say that nobody is perfect. Then they tell you practice makes perfect. I wish they'd make up their minds."

"Not eating meat is a decision, eating meat is an instinct."

"I call everyone 'Darling' because I can't remember their names."

"Behind every successful man is a surprised woman."

"Everything that can be invented has been invented."

"There are lies, damned lies and statistics."

"If you don't get caught, then everything is legal"

"The nice thing about being a celebrity is that if you bore people they think it's their fault."

"Experience is the name every one gives to their mistakes."

## Dear Kids...

Do you like to draw? Send in a picture of your favourite animal and write a few words on why it's your favourite and send it to ORU PAPER and you could be the lucky winner of a new stationary kit!

The winner will be published in the next issue!

## Colouring




Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

***Last issue winner is Sharuga ( 8 years old)***

**Show the mouse the way.**




## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| N | J | E | U | I | D | L | Y | O | P |
| C | X | T | U | K | A | P | P | A | M |
| A | R | V | A | L | W | A | S | O | P |
| C | T | A | X | T | P | U | K | L | M |
| R | H | I | D | V | I | F | T | N | G |
| U | O | P | F | U | T | N | B | R | A |
| I | S | A | N | W | T | S | O | H | I |
| Q | A | N | Y | Z | U | A | I | B | I |
| L | I | M | A | D | P | E | O | E | N |
| I | L | M | A | P | O | D | E | L | J |

**Hidden Words:**
**Subject: Tamil eatable items**
PITTU, APPAM, IDLY, THOSAI, VAIPAN, ALWA

*Submitted by:*
*By: Tharanya Sivaguru (Age 6) (Harrow)*

ஸ்ரீ சித்திவிநாயகர் துணை



அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் - ஹறோ

ஹறோ அருள்மிகு ஸ்ரீசித்தி விநாயகர் நூதன ஆலய அஷ்டபந்தன

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

## 18-10-2010 முதல் 21-10-2010 வரை

(பெருஞ்சாந்தி விழா என்னும் திருக்குட திருநன்னீராட்டு விழா)

**18-10-2010 காலை 7.35 மணி முதல் கணபதி ஹோமம் முதலியன**

**19-10-2010 காலை 9.00 மணி முதல் 20-10-2010 இரவு 9.00 மணி வரை எண்ணெய்க் காப்பு வைத்தல்**

# மண்டலாபிஷேகம்

## 22-10-2010 முதல் 8-12-2010 வரை நடைபெறும்

### விநாயகப்பெருமான் அடியார்களே!

ஹறோ நகரில் எழுந்தருளியிருந்து மனமுருகி பக்தியோடு வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்களை வேண்டிய வண்ணம் வாரிவழங்குகின்ற அருட்தெய்வமாம் ஸ்ரீவிநாயகப் பெருமானுக்கும், உலக மாதா பிதாவாகிய பார்வதி பரமேஸ்வர பெருமானுக்கும், முருகப் பெருமானுக்கும் ஆகம விதிகளுக்கு அமைய அழகிய வர்ண வேலைப்பாடுகளுடன் புதிதாக ஆலயம் அமைக்கப்பெற்று, நிகழும் மங்களகரமான விகிர்த்தி வருஷம், ஐப்பசி மாதம் 4 ம் நாள் (21-10-2010) வளர்பிறை சதுர்த்தசி திதி, உத்தரட்டாதி நட்சத்திரம், சித்தயோகம், விருச்சிக லக்கினம் கூடிய 10.45 மணி முதல் 11.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில், குருவருளும், திருவருளும் துணைநிற்க ஸ்ரீசித்திவிநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்திப் பெருவிழா நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. கும்பாபிஷேகத் தினத்திலும், ஏனைய கிரியா காலங்களிலும் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வந்து வழிபாடுகளில் கலந்து இறையருள் பெறுக.

21-10-2010 அன்று பகல் மஹேஸ்வரபூஜை (அன்னதானம்) நடைபெறும். 22.10.2010 வெள்ளிக் கிழமை முதல் 08.12.2010 புதன்கிழமை வரை 48 தினங்கள் மண்டலாபிஷேக பூஜை நடைபெறும். மஹா கும்பாபிஷேகம் முதல் மண்டலாபிஷேகம் வரை உள்ள அனைத்து விழாக் காலங்களிலும் உபயங்களை ஏற்று நடாத்தி இறையருள் பெறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மஹா கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர் ஆலயம் தினமும் காலை 9.00 மணி முதல் மதியம் 1.30 வரையும், பின்னர் மாலை 5.00 மணி முதல் இரவு 9.30 மணி வரை திறந்திருக்கும். செவ்வாய், வெள்ளி நாட்களிலும் விசேட நாட்களிலும் இரவு 10.00 மணி வரை திறந்திருக்கும். தினமும் நான்கு காலப் பூஜை நடைபெறும்.

தினமும் காலை 9.00 மணி, மதியம் 12.00 மணி, மாலை 5.30 மணி, இரவு 8.00 மணிக்கு பூஜை நடைபெறும்

மேலதிக விபரங்களுக்கு: 020 8427 5428

**Rear of 59B, Station Road, Harrow, HA1 2TY (UK)**


Bringing great food to life...
திருவின் உற்பத்திச் சக்கரம்
Niru BRAND
உங்கள் வாழ்க்கைச் சக்கரத்தை திறம்பட இயக்கும்!
அனைவருக்கும்
எமது
உள்ளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
Niru BRAND
Quality • Taste • Value
திருவின் உற்பத்திச் சக்கரம்
Niru BRAND
உங்கள் நிறை உணவுச் சக்கரத்தை நிறைவடையச் செய்யும்!
www.niru.co.uk
Produced in our ISO 22000
HACCP Certified Factory
Design by • Aambal Magazine • www.aambal.co.uk

## சர்வதேச நியமங்களுக்கு முரணாக...

(18ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவேளை சம்பந்த பட்டவர்களை நாடு கடத்துமாறு இலங்கை அரசு கேட்டால் சர்வதேச ஆதரவு இன்றி சம்பந்த பட்டவர்கள் தப்பிக்க முடியாது. எனவே எமது உறுப்பினர்கள் தமக்கிடையிலான குத்துச்சண்டையை நிறுத்திவிட்டு, இராஜ தந்திரிகளாய் மாற வேண்டும்.

### அரசின் சபையில் விவாதம்

சபை விவாதங்கள் ஒலி, ஒளி , எழுத்து வடிவில் மக்கள் பார்வைக்கு இருக்க வேண்டும். நாடுகடந்த அரசின் இணைய தளம் விவாதங்களை ஒலி வடிவில் அல்லது ஒளி வடிவில் அல்லது எழுத்து வடிவிலாவது சர்வதேச பார்வைக்கு விட வேண்டும். சபை உறுப்பினர்களின் ஒழுக்காற்று கோவை வெளிப்படையாக இருக்க வேண்டும்.

### ஊடகங்கள்

யாப்பை இயற்றி தமிழருக்கு அறிக்கை விடுவது நல்லது தான். நான் அறிந்தவரை சர்வதேச ஊடகம் எதுவும் நாடுகடந்த அரசின் யாப்பு செய்தியை வெளியிடவில்லை. பாராளுமன்ற அமர்வை தமிழ் ஊடகவியலாளர்களோ, சர்வதேச ஊடக வியலாளர்களோ நேரடியாக பார்த்ததாக எழுதவில்லை. ஊடகவியலாளர்கள் முக்கியமாக சர்வதேச ஊடகவியலாளர்கள் அமர்வுக்கு அழைக்கப் பட்டிருந்திருக்க வேண்டும். ஊடகவியலாளர்கள் மகாநாடு ஒன்று நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

தமிழீழ அரசு பற்றி உலகம் பேச வேண்டும், உலகத்துக்கு அது தெரியவேண்டும் அப்படி எதுவும் நடந்ததாயில்லை. நாமே கூட்டம் கூடி, நமக்கு நாமே பட்டம் சூட்டி, நமக்கு நாமே அறிக்கை விட்டு , நடத்துவதெல்லாம் மாரி காலத்தில் கிணற்று தவளை கும்மாளம் அடித்து மடிவதற்குச் சமன்.

உத்தேச தமிழீழ அரசின் யாப்பு என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆய்வாளர்கள், பத்திரிகைகள், இணையங்கள் எல்லாம் ஏன் இது பற்றி முன்கூட்டியே ஆக்க பூர்வமான கருத்துக்களை எழுதவில்லை? ஆர்வலர்கள் எல்லாம் எங்கே ஓடி மறைந்தனர்?

முகத்துக்கு நேரே சொல்லாமல் போகவிட்டு புறம் சொல்வது எமது சீரழிந்த பண்புகளில் ஒன்று. தமிழீழ விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலத்தில் ஒட்டி உறவாடி வாழ்ந்தவர்கள் சிலர் இப்போது புறம் சொல்வது போல், திரு. உருத்திரகுமாரனையும் தோல்விக்கு தள்ளிவிட்டு புறம் சொல்வார்கள் என்று எதிர் பார்க்கலாம்.

## முதல் காதல்

ஆரம்பக் காதலொன்று
ஆழமாய் இதயத்தில்
பதினாறு வயதிருக்கும்
பள்ளிப் பருவமது
அதிசயமாய் ஒருநாள்
அந்த மலர் வந்து பேச
மலரத் தொடங்கியது
மனதில் அந்தக்காதல்
தோழனாய் தோழியாய்
தொடர்ந்திருந்த நட்பது
இளமையின் இனிமையில்
இதயங்கள் இணைந்திருக்க
வசந்தமாய் வளர்ந்தது
வருங்காலம் நினைக்காமல்
கல்வியில் கவனம்
பள்ளத்தில் பாயுதென்று
பரீட்சை வருமட்டும்
பகுத்தறிவில் பட்டதில்லை
தேறவில்லை மேலே
தேடியது வீடு
வெட்கத்தில் சிலநாள்
வீதியில் போகாமல்
தரிசனம் இன்றி
தத்தளித்த மனதோடு
ஒருநாள் போக
ஒருவரும் அறியாமல்
வெளிப் படலையில்
வெண்கலப் பூட்டொன்று
இடியொன்று விழுமென்று
இவ்விதயம் நினைத்ததில்லை
தேடுதே தெருவெல்லாம்
மறக்காத மலரொன்றை!

- வ. கஜேனாஷ்

## உண்மை!

உண்மை
ஊருக்கு பயந்து
சிலகாலமாக ...
அஞ்ஞாதவாசத்தில் உள்ளது
என்ற உண்மையை நீ அறிவாயா?

மாரிகாலத்தில்
பெருகிவரும் புற்றீசல்களாய்
இங்கும் அங்கும் எங்கும்
பொய்களே புன்சிரிப்புக்களுடன்...

எக்குத்தப்பாக
மூலை முடுக்குகளில்
அகப்பட்டுவிட்டால் பொதும்

சட்டையைப்பிடித்து
இழுத்து வைத்து
உபதேசங்கள் செய்ய
ஆரம்பித்து விடுகின்றன

காட்டுக்குள் அகப்பட்ட
குருட்டு பிச்சைகாரராய்
கைகளில் அவநம்பிக்கைகளுடன்
அலைவதே
எம் அன்றாட பிழைப்பாகிவிட்டது

என்ன தான் செய்வது?
எது செய்தாலும்
அது தவறாகி விடுகிறது

தவறுகள்
எம்மை
தற்காலிகமாக
தத்தெடுத்து விட்டதா? என
தடுமாற்றமாக இருக்கிறது

- நடா சுப்பிரமணியம்

## அமெரிக்காவை கண்டுபிடிக்கும் முன் கொலம்பஸ் தமிழ் பொம்பிளையை கட்டியிருநதால்...

- ஏனப்பா எங்கை போறியள்?
- ஆரோட போறியள்?
- என்னத்துக்கு போறியள்?
- எப்படி போறியள்?
- என்னத்தைக் கண்டுபிடிக்க போறியள்?
- ஏன் நீங்கள் மட்டும் போறியளே?
- நீங்கள் இஞ்சை இல்லாமல் நான் என்ன செய்வன்?
- நானும் உங்களோட வரட்டே?
- எப்ப திரும்பி வாறியள்?
- எங்கை சாப்பிடுவியள்?
- எனக்கு என்ன வாங்கிக் கொண்டு வருவியள்?
- இப்படி போகோணும் எண்டு எனக்கு தெரியாமல் எத்தனை நாளா பிளான் போட்டுக் கொண்டிருந்தியள்?
- இன்னும் வேறை ஏதும் பிளான் வைச்சிருக்கிறியளே?
- நான் எங்கடை வீட்டுக்கு போகட்டே?
- நீங்கள் என்னைக் கொண்டே வீட்டை விடுவியளோ?
- நான் இனிமேல் திரும்ப வர மாட்டேன்.
- ஏன் ஒண்டும் சொல்லாமல் இருக்கிறியள்?
- என்னைப் போக வேண்டாம் எண்டு சொல்ல மாட்டியளோ?
- இதுக்கு முந்தியும் எனக்கு தெரியாமல் இந்த மாதிரி ஏதாவது செஞ்சனீங்களோ?
- எவ்வளவு கேள்வியள் கேக்கிறன் ஏன் விறைச்ச மாதிரி நிக்கிறியள்?
- கேக்கிறதுக்கு பதில் சொல்லுங்கோவன்?

இதுக்குப் பிறகும் கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடிக்க வெளிக்கிட்டிருப்பார் எண்டால் அவர் விறைச்சகட்டைதான்!!!!

- கிருபன் (நன்றி யாழ்)



# அந்த நவராத்திரி நாட்கள்



'சிவனுக்கொரு ராத்திரியாம் சிவராத்திரி சக்திக்கொரு ராத்திரியாம் நவராத்திரி' இருள் வந்த நேரத்தில், நிசப்தமான பொழுதில் எங்கள் அயலட்டை வீடுகளில் சின்னனுகள் கத்திக் கத்திப் பாடமாக்கும் சத்தம் கேட்பது தான் நவராத்திரி வருவதற்கான முன்னோட்டம். ஒவ்வொரு ஆண்டு நவராத்திரிக்கும் முன் சொன்ன அடிகள் மாறாது பேச்சுப் போட்டி மனப்பாடம் இருக்கும். அந்த சின்னப்பிள்ளைப் பருவத்தில் சுவாமிப் படத்துக்குச் சகலகலாவல்லி மாலை பாடினால் அவல் சுண்டல், கௌபி கிடைக்கும் என்பது தான் நவரத்திரி பற்றித் தெரிந்த ஒரே இலக்கணம் எமக்கு. துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என்ற மூன்று தெய்வங்களுக்கான பண்டிகை என்றாலும் 'சரஸ்வதி பூசை' என்ற பொதுப் பெயரிலேயே இதனை அழைத்தது எம்மவர்கள் கல்விக்குக் கொடுத்த அதீத முக்கியத்துவத் தாலோ என்னவோ என்று இப்போது எண்ணத் தோன்றுகின்றது.

சரஸ்வதி பூசைக்காலத்துக்குச் சில வாரம் முன்பே பள்ளிக்கூடங்களுக்கு மில்க்வைற் சோப் கனகராசாவின் கைங்கரியத்தால் அச்சடிக்கப்பட்ட சகலகலாவல்லி மாலைப் புத்தகங்களும் (பின் அட்டையில் நீம் சோப் விளம்பரம்), ஆனா ஆவன்னா அச்சடித்த அரிச்சுவடி ஏடுகளும் கட்டுக்கட்டாய் வந்துவிடும்.

ஒரு விஜயதசமி நாளில் மடத்துவாசல் பிள்ளையார் கோவிலில் சோமாஸ்கந்தக் குருக்களிடம் என் அப்பாவும் அம்மாவும் அருச்சனை செய்து தம்பி வாத்தியார் என் கை விரலைப் பற்றிப் பரப்பியிருந்த நெற்குவியலைத் துழாவி ஆனா எழுத அடியெடுத்துக்கொடுத்தது சின்னதாக இன்னும் என் ஞாபகத்திரையில். (குழப்படி செய்யாம ஆனா எழுதினா, கோவால் மாமா கடையில ஸ்ரார் ரொபி வாங்கித்தருவேன் - இது என் அம்மா). பின்னர் தம்பி வாத்தியார் தந்த அந்த ஆனா ஆவன்னா ஏட்டுச் சுவடி எமது சுவாமி அறையில் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறது. அச்சு பதியாமல் ஆணியால் எழுதியது போல் அந்த எழுத்துக்கள் இருக்கின்றன.

பாடப்புத்தகங்களும் அப்பியாசக் கொப்பிகளும் முகப்பில் சந்தனக் குறி தடவி ஒன்பதாம் நாள் வீட்டு பூசையில் சாமியறையில் தவமிருக்கும். சிட்னி முருகன் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் அம்மன் சிலை

பள்ளிக்கூடங்கள் தொடங்கி ஊர்க் குறிச்சி வைரவர் கோயில் வரைக்கும் சரஸ்வதி பூசைக் காலத்துக்குத் தனி முக்கியத்துவம் கொடுக்கப்படும். எங்கள் அயல் வைரவர் கோயிலில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு சுற்றுப்பக்க வீடுகளுக்கும், வசதி குறைந்த குடும்பங்களை ஒன்றாக இணைத்து ஒருபூசையுமாக ஒதுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொறு நாளும் அவல், சுண்டல் கௌபி என்று விதவிதமான பண்டங்கள், சில குடும்பங்கள் தங்கள் பவிசை (வெளிநாட்டுக் காசு) நைவேத்தியத்தில் காட்டுவார்கள். அவர்களில் படையலில் மோதகத்துக்குள் கற்கண்டும் கடிபடும்.

கார்த்திகேசு அண்ணற்றை பெடிச்சியளும் , அங்கால சிவலிங்க மாமா, திருச்செல்வண்ணையின்ர பெடிச்சியளும் தான் வைரவர் கோயிலின் ஆஸ்தான சகலகலா வல்லி மாலைப் பாட்டுக்காறர். கரும்பே, கலாப மயிலே என்ற வரிகள் வரும் போது முகத்தில் முறுவல் பூக்க 'சகல கலா வல்லியே' என்று முந்திக்கொண்டே எல்லோரும் ஒரு சேரப் பாடி வரிகளை முடிப்போம். அவல் தின்னவேண்டும் என்ற அவா வேறு) விஜயதசமி நாளான்று நாலு நாலரை மணிக்கெல்லாம் நீண்டதொரு வாழை மரம் பிள்ளையார் கோயிலடிப் பெடியளால் நட்டு நிமிர்ந்திருக்கும். சுவாமி வெளி வீதி வலம் வந்து உட்புக முன் சோமஸ்கந்தக் குருக்கள் கையில் நீண்டதொரு வாள் போன்ற கத்தி கைமாறும். ஒரே போடாக வெட்டு ஒன்று துண்டு ரண்டாக வெட்டப்படும் வாழைக் குத்தியின் நட்ட பாகத்தில் தன் கையில் இருக்கும் குங்குமத்தால் தடவி விடுவார். (மகிடாசுரனின் ரத்தமாம்).

சரஸ்வதி பூசைக்காலத்தில் ரியூட்டறிகள் பாடும் கொண்டாட்டம் தான். ஆண்டுக்கொரு முறை தாங்கள் கொண்டாடும் ஆண்டுக் களியாட்ட விழாவாகவே 'வாணி விழா' என்று பெயரிட்டு ஒரு நாள் விழாவாகக் கொண்டாடுவார்கள். இணுவில் கந்தசுவாமி கோயில் முன் றோட்டில இருந்த வாணி கல்வி நிலையம் என்ற ரியூட்டறி நிர்வாகி பாலா ஒவ்வொரு வாணி விழாவிற்கும் அருணா கோஷ்டி மெல்லிசைக் குழுவைக் கொண்டு வருவார்.

'எட உங்கற்றா பாலசுப்பிறமணியம் போலப் பாடுறான்' என்று அவர்களை வாய்பிளக்கப் பார்த்த காலம் அது. பாலா வெளிநாடு போன கையோட வாணி கல்வி நிலையம் எவரெஸ்ட் என்று மாறவும் அருணா கோஷ்டிக்கும் ஆப்பு.

என்னதான் சொல்லுங்கோ, அருட்செல்வம் மாஸ்டரின் ரியூட்டரியில் கொண்டாடும் வாணி விழா சோக்கானது எண்டு தான் சொல்ல வேணும். ஒவ்வொரு வாணி விழாவும் ஏற்படுத்திப் போன ஞாபகப் பதிவுகள் மிக அதிகம். சரஸ்வதி பூசைக்காலத்துக்கு ஒரு மாதம் முன்பே அருட்செல்வம் மாஸ்டர் ஆறாம் ஆண்டு முதல் பதினொராம் ஆண்டு மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் பாடங்களில் பரீட்சை வைத்து முதன்மைப் புள்ளி பெறும் மாணவருக்கு வாணி விழாவில் பரிசு கொடுப்பார்.

ஆறாம் ஆண்டு வகுப்புப் படித்த காலம் அது. வாணி விழாவும் வந்தது. 'விஞ்ஞானப் பாடம் அதிக புள்ளிகள் சுமித்திரா' என்று அறிவிப்பு அருட்செல்வம் மாஸ்டரின் மைக்கிலிருந்து வருகின்றது. திரண்டிருந்த மாணவத் தலைகளை விலக்கி அவள் போனபோது தான் அவள் அணிந்த ஆடை கண்ணை உறுத்தியது. கை முட்ட நீட்டு சட்டையும், லோங்க்ஸ் போன் ஆடையும் கழுத்தில் சால்வை போன்ற வஸ்திரத்தோடு அவள் கடந்த போது பக்கத்திலிருந்த சிவபாலனை இடித்து 'என்னடா உடுப்பிது' என்று அப்பாவி கோவிந்தனாகக் கேட்டதும், பிறகு அது தான் எங்கள் நாட்டுக்குப் புதிதாய் இறக்குமதியான நாகரீகமான பஞ்சாபி, சுரித்தார் வகையறாக்கள் என்பதும் தெரிந்தது.

அடுத்த ஆண்டு வாணி விழாவில் கணக்கிலோ விஞ்ஞானத்திலோ அதிக புள்ளி பெற்று சுமித்திராவின் கடைக்கண் தரிசனம் தெரிய வேண்டும் என்று மாய்ஞ்சு மாய்ஞ்சுபடித்ததும் (இதற்கு(ம்) போட்டியாகக் குமரனும் முகுந்தனும் வேறு)ஆனால் அவள் வாணி விழா வரு முன்பே வேறு காரணங்களுக்காக நிரு டியூசன் மாறியதும் என் விடலைப் பருவத்தின் ஆட்டோகிராப் பக்கங்கள்.

பெரிய வகுப்புப் பெடியள் போடியார் மாப்பிள்ளை நாடகத்தின் பிரதியை எடுத்துக் காட்சிகளைக் கத்தரித்து நாடகம் போட்டதும், பாலா மாஸ்டரிடம் இந்து நாகரீகம் படித்த ஒரு கறுத்த அக்கா ' எங்கிருந்தோ அழைக்கும் என் ஜீவன்' பாடலை அழுதழுது பாடியதும் இன்னும் நினைப்பிருக்கு.

எங்கள் வகுப்புப் பெடியளும் தங்கள் பங்கிற்கு 'விதுரன் கதை' நாடகம் போட ஆசைப்பட்டுக் கஷ்டப்பட்டு வளைத்து செய்த வில்லைத் தடியன் ஜெகன் குறும்புக்காக உடைத்துச் சதி செய்ததும் ஒரு சம்பவம்.

பெண்கள் வேலைக்குப் போகவேண்டுமா இல்லையா என்ற பட்டிமன்றம் ஆரம்பித்துச் சூடு பிடித்த தறுவாயில் அதிகம் உணர்ச்சிவ்சப்பட்டு' அந்த உந்த கதையில்லை பெண்கள் வேலைக்குப் போககூடாது எண்டு தான் நான் சொல்லுவன் ' என்று எதிர்த்தரப்பு வாதி குஞ்சன் தன் வாதத்திறமை(?)யைக் காட்டியதும் ஒரு வாணி விழாவில் தான்.

O/L படிக்கும் போது சகபாடி குபேரனின் குரலை முதலீடாக் வைத்து இசைகச்சேரி வைத்தும் அரவிந்தன் 'அதோ மேக ஊர்வலம்' பாடி நான் அறிவிப்புச் செய்ததும் எமது அருட்செல்வம் மாஸ்டர் வீட்டுக் கடைசி வாணி விழா.

பள்ளிக்கூடங்களிப் பொறுத்தவரை ஒவ்வொரு வகுப்பு வாரியாகப் பிரித்து பூசை நாள் ஒதுக்கப்பட்டு இறுதியில் பெரிய வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்களும் பங்கு போட்டு விஜயதசமி நாளைக் கொண்டாடுவார்கள். மாணவர்கள் வேஷ்டியும் மாணவிகள் அரைச் சாறிகட்டுவதும் இந்த நாட்களில் தான். ரவிச்சந்திரனுடன் எமது வகுப்புப் பூசைக்காக ஈச்சம் பத்தை தேடியலைந்து பூசைமாடத்தைச் சோடித்தது ஒரு காலம்.

எனது க.பொ.த உயர்தரவகுப்புக் காலம் அது. எமது பாடசாலையின் மூன்றாம் மாடி சரஸ்வதி பூசைக்கான இடமாக ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த மாடிக்குப் போகும் இரண்டாம் மாடிப் படியோரமாக எமது வகுப்பு இருந்தது. காலையில் இரண்டுபாட ஆசிரியர்கள் லீவு. எம்மைத் தட்டிக்கேட்க ஆளில்லை. நானும் மஞ்சவனப்பதி கோயிலடி ராசனும், வளர்மதி ரெக்ஸ் ரைல்ஸ் மதியாபரணத்தின்ர பெடியன் விக்கியும் ஒரு வாங்கினைப் ஒரமாகப் போட்டு வாற போற பொம்பிளைப் பிள்ளைகளை விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தோம்.(வயசுக்கோளாறு). வழக்கம் போல ராசனின் வாய் சும்மா இருக்காமல் ஒருத்தியைப் பார்த்துக் கிண்டல் அடித்ததும் அவள் பழிப்புக் காட்டிக்கொண்டே விறு விறுவென்று மாடிப் படியில் ஏறவும், முதல் நாள் மழைவெள்ளம் தேங்கிய படிக்கட்டில் வழுக்கி அவள் விழவும், வெள்ளை சட்டை காக்கிச் சட்டையாகத் தொப்பமானதும், விழுந்தடித்துக் கொண்டே வாங்கினை உள்ளே போட்டு எதுவும் தெரியாதது மாதிரி இருந்ததும் கூட மறக்க முடியுமா? (இது குறித்துப் புலனாய்ந்த மகேந்திரன் மாஸ்டரிடம் நாம் டோஸ் வாங்கியது மானப் பிரச்சனை கருதித் தணிக்கை செய்யப்படுகின்றது).

கரும்பே, கலாப மயிலே என்ற வரிகள் வரும் போது முகத்தில் முறுவல் பூக்க 'சகல கலா வல்லியே' என்று முந்திக்கொண்டே எல்லோரும் ஒரு சேரப் பாடி வரிகளை முடிப்போம். அவல் தின்னவேண்டும் என்ற அவாவில்

அதே ஆண்டு எங்கள் வகுப்பு லோகேந்திரன் ஆட்கள் நாடகம் போட்டார்கள். (சமூக நாடகமாம்) லோகேந்திரன் போட்ட பெண் வேடத்திற்கு எதிராக இதுவரை மானநஷ்ட வழக்கு எதுவும் வரவில்லை. அந்த நேரம் சினிமாப் பாட்டுக்கள் பொதுமேடைகளில் ஒதுக்கப்பட்ட காலம் அது. விஜயதசமி மேடையில் 'தென்னக்கீற்றில் தென்றல் வந்து மோதும்' என்ற எழுச்சிப் பாடலை ராஜசேகரும் இந்து மகளிர் கல்லூரியில் இருந்து இறக்குமதி செய்த பெண்ணுமாகப் புன்முறுவலோடு பாடவும் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த கோகுலகிருஷ்ணன் உணர்ச்சிவசப்பட்டுப் பாடல் முடியும் போதுமேடையில் ஏறி ராஜசேகருக்கு மாலை போட்டதும் (செட்டப்போ தெரியேல்லை)

'இறங்குங்கடா மேடையை விட்டு' என்று உறுமியவாறே மகேந்திரன் மாஸ்டர் வந்ததும், அந்த விஜயதசமி நாட்களின் இறுதி அத்தியாயமாக அமைந்து விட்டது.

- *பிரபா*




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

## பெரும் பகுதி வன்னி மக்கள், பிரபாகரன் மீது வருத்தத்தில் இருக்கிறார்களாம்.. இந்தியனுக்கு வால் பிடிக்கும் எங்கட ஒண்டு குமுதத்தில் புலம்புது!

யாழ்ப்பாணத்தில் சனம் எந்திரன் பாக்க வரிசையில் நிக்குதுகள். வன்னியில ஒரு தேத்தண்ணிக்கு சனம் அலையுதுகள். நாங்கள்(புலம்)அரசியல் கதைத்து பொழுது போக்கிறோம்.யாழில் உள்ள கல்வி சமூகத்தை வன்னிக்கு சென்று நிலைமையை பாக்க செல்லுற நிலமையில் அந்த மக்கள் தனிமைப்படுத்த பட்டு இருக்கிறார்கள்.அப்ப அவர்களுக்கு எல்லோர் மீதும் கோவம் வருவது இயல்புதானே.

*- சஜீவன்*

எண்பதுகளில் ஈழ விடுதலைப் போராட்டம் இந்தியாவுக்கு எவ்வளவுக்கு தேவையாக இருந்ததோ அதை விட பல மடங்கு தேவையுடன் மீண்டும் இந்தியா தமிழர்களின் காலில் நிச்சயம் விழும். அதுவரை பொறுமையாக இருக்க வேண்டியது தான். முத்துக்குமார் சொன்னது அப்போது நிதர்சனமாகும்.

*- ஈழப்பிரியன்*

வன்னி மக்கள் புலிகளை குறை கூறினமென்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை, இது வழக்கம் போல புலிகள் மீதும் அவர்களை வளர்த்த வன்னி மக்கள் மீதும் பழி போடவே எழுதப்பட்டது, நான் பார்த்தவரை, ஏன் முகாமில் இருந்த போது கூட தாம் அனைத்தையும் இழந்த போது தலைவருக்கு ஒன்றும் நடக்கக் கூடாது என்று யோசித்தவர்களே அதிகம், இது தான் உண்மை, இவ்வகையான கட்டுரைகள் உள் நோக்கம் கொண்டவை இவற்றை வாசித்து விட்டு அப்படியே விடுவது தான் புத்திசாலித்தனம்.

*- டாஷ்*

மே 19 இன் பின் புலம் பெயர்ந்தவர்களின் செயற்பாடுகளில் பெரிதும் மாற்றம் வரும் என எதிர்பார்த்தேன். இக்கட்டான நேரத்தில் எங்களை வழி நடத்த வேண்டிய தலைமைகள் தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டார்கள். தமிழ் பணியார ஊடகங்களின் தொல்லை ஒருபக்கம். மக்களும் சலித்துப் போய் தொலைகாட்சி பெட்டியின் முன் உட்கார்ந்து கொண்டார்கள். நாங்கள் இன்னும் கனவுலகில் சஞ்சரிக்காமல் தாயக மக்களை பொருளாதாரத்திலும் கல்வியிலும் கட்டி எழுப்ப வேண்டும். இதனை சிங்களத்தினூடாக செய்யத்தேவையில்லை. எங்களுக்கு தெரிந்தவர்கள், உறவினர்களுடாகவே செய்யலாம். வசதியுள்ளவர்கள் அங்கு முதலீடு செய்வதன் மூலம் தொழில் வாய்ப்புகளை பெருக்கலாம். நான் அறிய சிங்களவர்களும், முஸ்லிம்களும் தமிழர் நிலங்களை அடி மாட்டு விலைக்கு வாங்கி போடுகிறார்கள். எங்கள் போராட்டம் சிதைக்கப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாகப் போகிறது. எங்கள் தலையாய கடமையை காலம் தாழ்த்தாது செய்வோம். தாயக மக்கள் அரசியல் பாதையை தெரிவு செய்யட்டும்.'கோவணத்தோடு நிற்பவனிடம் வேட்டிக்கு பட்டு குஞ்சம் வை' என்பதாகவே புலம் பெயர்ந்த எங்களின் செயற்பாடுகள் உள்ளன.

*- தாப்பிலி*

எந்தவொரு அரசியல் நடவடிக்கையும் தாயகத்திலிருந்து தான் ஆரம்பிக்கப்பட வேண்டும். புலத்தில் நடப்பவை அவற்றுக்குச் சமானதரமாகவும், அவற்றிற்குப் பக்க பலமாகவும் மட்டுமே இருக்க முடியும். ஏனென்றால் தாயகத்தின் யதார்த்தங்களை உள்வாங்கிக் கொள்ளுமளவிற்கு புலத்திலுள்ளவர்களால் இயங்க முடியுமா என்பது கேள்விக்குறிதான். வேண்டுமென்றால் தாயக மக்களின் செயற்பாடுகளை வெளியுலகிற்கு கொண்டு வருவதில் புலத்து அரசியல் நடவடிக்கைகள் உதவி செய்ய முடியும்.

அரசியல் போராட்டமாகட்டும் அல்லது இன்னொரு ஆயுதம் தாங்கிய போராட்டமாகட்டும் அதை தாயகத்து உறவுகளே தீர்மானிக்க வேண்டும். எம்மால் அதைத் திணிக்கவும் முடியாது அதற்கான தார்மீக உரிமையும் கிடையாது. ஏனென்றால் எந்தப் போராட்டத்தினதும் விளைவுகளைச் சுமக்கப் போகிறவர்களும் அவர்களே.

வாழ்வு முற்றாகப் பறிபோன நிலையில் அவர்கள் எடுக்கும் எந்த முடிவிற்கும் நாம் கட்டுப்பாட்டேயாக வேண்டும். வழியை அவர்கள் தீர்மானிக்கட்டும், அதற்கான உதவியையும் ஒத்தாசையையும் நாம் செய்வோம்.

*- ரகுநாதன்.*

புலிகள் வேறு (ஈழத்) தமிழ் மக்கள் வேறு அல்ல. புலிகள் மீதான கோபம் என்பது தம் சொந்த பிள்ளைகள் மீது தாய்மாருக்கு வரும் கோபம் போன்றது. எம் உணர்வாலும், உதிரத்தாலும் கட்டப்பட்ட இயக்கமான புலிகள் மீதான கோபம் அவர்கள் இல்லாமல் இன்று போய்விட்டார்களே என்ற கவலையாலும் படுதோல்வி அடைந்து விட்டோம் என்ற உணர்வாலும் வருவது.

*- நிழலி (நன்றி யாழ்)*

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**Oct 23 — SATURDAY @ 09:30**

*வருடாந்த மாநாடு*

சர்வதேச தமிழ்ச் செய்தியாளர் ஒன்றியத்தின் வருடாந்த மாநாடு.

நேரம்: காலை 9.30

இடம்: University of Westminster, Harrow Campus, Watford Road, Northwick Park, Harrow, HA1 3TP.

**Oct 23 — SATURDAY @ 18:00**

*ஆனந்த ராகங்கள் இன்னிசை நிகழ்வு*

போரின் அழிவுக்குள்ளான வன்னியின் தாரகை வித்தியானந்தா கல்லூரியின் மீள்கட்டுமான நிதிக்காக பிரபல தென்னிந்தியப் பாடகர் மனோ அவர்கள் கலந்துகொள்ளும் இன்னிசை நிகழ்ச்சி.

நேரம்: மாலை 6:00 மணி

இடம்: ZOROASTRIAN CENTER, 440, Alexandra Avenue, Harrow, HA2 9T!

**Oct 30 — SUNDAY @ 17:00**

*முத்தமிழ் இசை நிகழ்ச்சி*

குறோளி தமிழ் கல்விக் கூடத்தின் நான்கவது ஆன்டு நிறைவு விழா நிகழ்வுகள்.

இடம்: Hazelwick School Hall, Three Bridge, Crawley, RH10 1SX

தொடர்புகளுக்கு: 07943837572, 07508016112

**Oct 30 — SATURDAY @ 12.00**

*கற்க கசடற - 2010*

சாவதேச சிறுவர் நாளை முன்னிட்டு தமிழ் இளையோர் அமைப்பு வழங்கும் திருக்குறள் போட்டி.

விண்ணப்பமுடிவு திகதி : 27-10-10

தொடர்புகளுக்கு: katkakasadara@tyouk.org
Mob - 07401094874






# இன்னும் ஓர் உரிமைப் போர்!



நாங்கள் முன்னர் குடியிருந்தோம். இப்போது இங்கே நாங்கள் மீளக்குடியமர எங்களுக்கு அரசகாணிகளை பகிர்ந்து தாருங்கள்..? யாழ்ப்பாணத்தில் புகையிரத நிலையக் கட்டடத்தில் வந்து தங்கியிருக்கும் 193 சிங்கள குடும்பங்கள் யாழ்ப்பாண அரச அதிபருக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பியிருக்கும் மனுவின் சாரம்சம் இது.

எங்கள் சொந்த நிலத்தில் சொந்த வீட்டில் எங்களை வாழவிடாது எல்லாவழிகளையும் மூடிவிட்டு முன்னர் எங்களிடம் வாடகைக்கு குடியிருந்தவர்களுக்கு எங்களுடைய வீடுகளையும் நிலத்தையும் கொடுக்கத் தயாராகின்றது சிங்கள அரசு.

1983 முன்னர் தாங்கள் தமிழ் மக்களோடு ஒன்றாக வாழ்ந்தகவும் தமிழர்களோடு திருமண உறவுகள் கூட செய்துள்ளதாகவும் கூறிக் கொண்டு வந்துள்ள இவர்கள் புதிதாக தயாரிக்கப்பட்ட 4ம் இலக்க அடையாள அட்டைகளை வரும் பத்திரிகையாளர்களுக்கு காட்டுகின்றார்கள். தங்களுக்கு வாழ அரச காணிகள் வழங்கி தங்களை சகயமாக குடியமர்த்தும் வரை தாங்கள் யாழ் புகையிரத நிலையக் கட்டடத்தை விட்டு விலகப்போவதில்லை எனவும் கூறுகின்றார்கள். அதற்கு ஏற்றாற் போல் தங்களுடைய முச்சக்கர வண்டிகள் உடுபுடவைகள் என்பன சகிதம் வந்து முகாமிட்டுள்ளார்கள் இந்த சிங்கள குடும்பங்கள். மிகவும் ஏழ்மை நிலையில் அதாவது சராசரி வருமானத்திலும் மிகவும் குறைந்த வருமானம் பெற்று அனுராதபுரம் மற்றும் மிகிந்தலைப் பகுதிகளில் வசித்து வந்து இவர்கள் இப்படி யாழ்ப்பாண்த்தில் வந்து தங்கியிருப்பது ஏதோதான்தோன்றித் தனமாகத் தெரியவில்லை.

இதே யாழ் புகையிரத நிலையத்தில் சில காலங்களுக்கு முன்னர், இடம்பெயரந்து தற்காலிகமாக வசித்து வந்த தமிழ் மக்களை வெளியேறும்படி உத்தரவிட்டு இருந்தார் யாழ் அரச அதிபர். அந்த மக்கள் இராணுவக் கெடுபிடுகளால் தமது வாழ்நிலங்களை இழந்து, இருக்க வழியின்றி பாழடைந்து கிடந்த புகையிரத நிலையக் கட்டடத்தை சிறிது சிறிதாகப் புனரமைத்து அங்கே தமது வாழ்வினை தொடர்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒதுக்கக்கூட சிறிய அளவான அரச நிலமோ அல்லது அதனை ஒதுக்குவதற்கு சிறிதளவான கருணை மனப்பாங்கோ அரசிடம் இருக்கவேயில்லை. அவர்களை அங்கிருந்து விரட்டி அடித்தது. அதே இடத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லாது திடீர் என வந்து புகுந்துள்ள இந்த சிங்களர்கள் தங்களுக்கு அரச காணிகளைத் தாருங்கள் எனக்கேட்பது எந்த விதத்தில் ஏற்றுக் கொள்ள முடியும். அதனை விடவும் அவரகளுக்கு செவி சாய்க்க முயல்வது எந்த விதத்தில் சரியாகும். பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களே தமது சொந்த நிலங்களில் வாழ வழியில்லாமல் தவித்துக்கொண்டு கூடாரங்களிலும் வாடகை நிலங்களிலும் பரிதவிக்கும் போது, இவர்கள் வந்து தமக்கு நிலம் தா எனக்கேட்பது சரியா? அதாவது வாழ அரச காணிகளைத் தா! இன்னும் அழுத்தமாகப் பார்த்தால் தமக்கு தமிழர் நிலம் தா! தரும் வரை தாங்கள் வெளியேற மாட்டோம்..

ஒட்டுமொத்தத்தில் தமிழன் தலையையும் மொட்டை அடித்து உச்சந் தலை மேல் இறுக ஆணியடிக்கப் பார்க்கின்றது சிங்கள அரசு. இத்தனை தெனாவெட்டாக வந்திறங்கியிருக்கின்ற சிங்கள ம(மா)க்களினைப் பார்த்தால் இந்த தெனாவெட்டுக்குப் பின்னால் இருப்பது சிங்கள அரசு என்பது தெள்ளத் தெளிவு.

'கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம்' என்றும் ஆணைக்குழு என்பது ஒரு கண்துடைப்பு ஆணைக்குழு. சிங்கள அரசு எழுபது வருடங்களாகக் கற்றுக் கொண்ட பாடம் ஏதுவுமே இல்லை.பழைய பேரினவாத குட்டையில் கிடந்து உருளும் மட்டமான அட்டைகள் சிங்களப் பேரினவாக அரசுகள். கல்வியறிவு வளரும் போது கொஞ்சமாவது மனிதப் பண்பும் உயரிய மனப்பாங்கும் (attitude) சேர்ந்து வளர வேண்டும். இல்லாது போனால் அந்தக் கல்விக்கு அர்த்தமே இல்லை. சிங்கள மக்களின் மனதிலோ அல்லது ஆளுகின்ற அரசிடமோ எந்த விதமான மனிதப் பண்பும் இல்லை உயரிய மனப்பாங்கும் இல்லை. 1983 கலவரத்தில் வீடிழந்த வாழ் விழந்த தமிழ் மக்களுக்கு இன்னமும் அதற்குரிய நிவாரணம் முழுமையாக கிடைக்கவில்லை. அப்படியிருக்க இந்த சிங்களவர்களை யாழ்பாணத்திற்கு உசுப்பேற்றி அனுப்பி வைத்திருக்கின்றது. இதுதான் சிங்கள அரசுகள் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுத்துகின்ற அழகா?

யாழ் கோட்டை முனியப்பர் கோவில் பகுதி மற்றும் துரையப்பா விளையாட்டு அரங்கு பகுதிகளில் நாளாந்தம் குவியல் குவியலாகக் குவிகின்ற சிங்கள மக்களின் மனிதக் கழிவுகளால் தொடங்கியிருக்கின்ற மழை காலத்தில் பெரும் சுற்றாடல் பாதிப்புகள் வரப் போவதாக யாழ்ப்பாண மக்கள் அஞ்சிக் கொண்டிருக்க, இப்போது யாழ் புகையிரத நிலையத்தில் புதிதாக புதுப் பிரச்சனையை விதைக்கின்றது சிங்கள அரசு. எதிர்ப்பலைகளை பகிரங்கமாக வெளியிட்டு இதனை தவிர்க்க வேண்டிய அரசியல் கட்சிகள் மெளனம் சாதிப்பது மிகவும் வெட்கக் கேடாகவும் வருத்தம் தருவதாகவும் இருக்கின்றது.

இந்த சிங்களக் குறியேற்றங்களுக்கு அப்பால் உள்ள சூட்சுமங்களை வெட்டக் கூடிய எந்த ஒரு நடவடிக்கைகளையும் தமிழர் தரப்பு அரசியல் கட்சிகள் செய்யாதிருப்பது, மிகவும் பாரதூரமான விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தப் போவது திண்ணம். நாளைய தமிழர் குழந்தைகள் சிங்களவரிடம் வீடுகளுக்கு கையேந்தும் நிலையினை இன்றைய சிங்கள அரசுகள் உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். அதனை தமிழர் தரப்பு அரசியல் கட்சிகள் தடுக்காது விட்டால்? இன்று நாம் நமது அரசியல் உரிமைக்காகப் போராடி ஒரு இரத்தாபிசேகம் நடத்தி முடித்திருப்பது போன்று? நாளை நமது சந்ததிகள் வீடுகளுக்காகவும் உணவுக்காகவும் இன்னும் ஓர் இரத்தாபிசேகத்தினை நடாத்தியே தீரும்?

1983 கலவரத்திற்கு முன்னர் கொழுப்பிலும் காலியிலும் 'சொந்த' வீடுகளில் வசித்து வந்த பல தமிழர்களை காலி முகத்திடலில் கொண்டு வந்து சேர்த்து அரசிடம் 'சொந்த வீடு கொழும்பில்' கேட்க இந்த தமிழ் கட்சிகள் ஆவன செய்தால்? சிங்களவருக்கு கொஞ்சமாவது தமது எதிர்ப்பையும் உரிமையையும் புரியவைக்க முடியும். அங்கே சிங்களவர் எடுக்கப் போகின்ற நடவடிக்கை யாழ் வந்திறங்கிய சிங்களவர் மேலும் பாயும் என்பதை யதார்த்தமாக எடுத்துரைக்கலாம். தந்திரத்தினை தந்திரத்தால் தான் முறியடிக்க வேண்டும்!

*- நன்றி ஊஞ்சல்*

## நான் வாழ்வதற்கு...

பிறர் நோக கொடுமைக்கு துணைநின்று
மாற மக்கள் மார்பில் மிதிப்பேன்
நல்லன்பை கொன்று மானத்தை இழப்பேன்
நாய்போல் நமக்குள்ளே சண்டைகள்
வளர்ப்பேன்... நரியாகி அந்நியன்
காலில் விழுந்து கிடப்பேன்

இலட்சியம் எல்லாம் எனக்கு அலட்சியம்
உச்சிமலை விளக்காக உயர்ந்த தலைவனை
எச்சில் துப்பி அணைக்க துடிப்பேன்
பச்சைபசும் தமிழ் நாட்டை என்னிச்சைக்காக
கட்சி மாறி நின்று காட்டிக் கொடுப்பேன்

நன்செய்யாது சமூகத்தை சாக்கடை என்பேன்
விமர்சனத்துள் ஒழிந்து குற்றங்கள்
சுமத்துவேன் உண்மைக்கு புறம்பாக
வதந்திகளை ஊதுவேன் நெருப்பை
அன்னையின் தலையில் கொட்டி செருப்பாகி
அந்நியன் காலில் மானம் தேய்வேன்

பிறர்க்காக எதையும் செய்யமாட்டேன்
செய்பவரின் குற்றம் கண்டுபிடிப்பேன்
மற்றவரை நன்றாக விமர்சிப்பேன்
நான் அதுபோல் இருக்க மாட்டேன்
பொறாமைப் படுவேன் குற்றவாளி என்பேன்

சொரணை இல்லாதவனாகி கோவணம்
போனாலும் எதிரி வீட்டில் குளிர் கண்டு
நீச்சலடிப்பேன்
உடன் பிறந்தவனை காட்டிக் கொடுப்பேன்
என் தாயினது பெண்ணை பிறர்
காலிடை வீழ்த்துவேன்
வேறென்ன செய்வேன் நான் வாழ்வதற்கு....

- மணிவண்ணன் ஏகாம்பரம்



"தினசரி பாராட்டு விழாக்களும்,
வாழ்த்து 'பா'க்களும் அதிகமாகிட்டதால..
தலைவர் இனிமே இந்த காஸ்ட்யூம்ல
தான் வலம் வருவாராம்ப்பா..!"

IATAJ
Annual conference 2010
"Media and the Tamil question in a globalising world"
Saturday 23rd October 2010
9.30 a.m. – 5.00 p.m

Speakers include:
Mr.Bashana Abeyawardena | Mr. T. Arulezhilan | Dr. R. Cheran | Mr. Ramesh Gopalakrishnan
Ms. Vino Kanapathipillai | Mr. Dinesh Kumar | Mr. Amrith Lal | Dr. Sutha Nadarajah |
Mr. Senthan Selvarajah | Mr. V.Thevaraj | Mr. Majoran Vivekananthan

INTERNATIONAL ASSOCIATION OF TAMIL JOURNALISTS
சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம்

University of Westminster,
Watford Road, Northwick Park,
Harrow, Middlesex HA1 3TP
United Kingdom

ENTRANCE (including food & beverages): £10

020 8543 7226 (Anandhi)
078 1011 6032 (Gopi)
07950 301 300 (Kannan)
07956 939 874 (Yoga)

Email: iataj@iataj.org • Web: www.iataj.org

## திருடர்கள் ஜாக்கிரதை.



அது ஒரு இளங் குடும்பம். கணவன் மனைவி மகள் மட்டுமே அங்கத்தவர்கள். அதிக வசதி படைத்தவர்களாக இல்லாது போனாலும், அளவோடு வளமோடு வாழ்ந்து வரும் குடும்பம். இயற்கையாக வரும் சின்னஞ்சிறு ஆசைகளை அவர்களால் நிராகரிக்க முடியவில்லை. அதனால் வந்த வினைதான் இவரை உலக நடப்பில் இடம் பெறுகிறது.

இவர்கள் ஒரு தமிழ்க்குடும்பமாக இருந்தாலும், புலம் பெயர்ந்த நாடுகளில் கலந்துவிட்ட காரணத்தினால், கோடை விடுமுறை நாட்களில் எம்மவர்களால் பெரிதும் விரும்பப்படும் 'பாபிக்கியூ' (Barecue) இறைச்சியை நெருப்பில் வாட்டி வேறு பல சுவையான உணவுகளுடன் சேர்த்து, குடும்ப நண்பர்களுடன் கூடி உண்ணும் ஆசை இவர்களுக்கும் வந்தது. ஆக, நாள் குறித்து, நண்பர்களை அழைத்து, விசேடமாக அமைக்கப்பட்ட பின்புறத் தோட்டத்தில் இறைச்சியை வாட்டி, குதூகலமாக மாலைப் பொழுதைக் களித்தனர்.

எல்லாம் ஒழுங்காகவே நடநடத்தது. நல்லதாகவே நடந்தது. ஒன்று கூடுதல் நிறைவடைய இரவு நேரம் வரை கழிந்ததால், பார்ட்டி முடிந்த பின், துப்பரவு செய்ய உடனடியாக முடியவில்லை. போட்டது போட்ட படியே எல்லோரும் கழன்று விட்டனர். காலையில் எழுந்து பார்த்தால் பாபிக்கியூ அடுப்பைக் காணவில்லை. இதைப்போய் பொலிசில் யாரும் முறைப்பாடு செய்வார்களா? போனால் போகட்டும் என்று விட்டுவிட்ட குடும்பத்தினருக்கு அடுத்த நாள் ஒரு நற்செய்தி காத்திருந்தது.

பாபிக்கியூ அடுப்பைப் பத்திரமாக திருப்பிக் கொண்டு வைத்தவர்கள், மூன்று சினிமா ரிக்கட்டுகளையும் உடன் வைத்து, மன்னிப்பு கடிதத்தையும் அங்கே வைத்துள்ளனர். அதில் செய்த தவறுக்கு மன்னிப்பு கோருவதாகவும் தங்களுடைய தேவைக்குரிய பாபிக்கியூ அடுப்புக்கு நிவாரணமாக அச்சினிமா ரிக்கட்டுக்களை வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். சினிமாவுக்கு செல்லும் ஆசையினால், இக் குடும்பம் அன்று இரவே அந்தச் சினிமா ரிக்கட்டுகளைப் பயன்படுத்தி, இரவு சினிமாவைப் பார்த்து மகிழ்ந்தனர். வீடு திரும்பியதும்தான் விபரீதம் தெரிந்தது. குடும்பத்தை சினிமாவுக்கு துரத்திவிட்டு வீட்டில் கிடந்த பெறுமதியான பொருட்கள் அத்தனையும் சூறையாடப்பட்டுள்ளதை அந்த அப்பாவிக் குடும்பம் அறிந்து கொள்ள வெகுநேரம் எடுக்கவில்லை. இதைப்போய் யாரிடம் சொல்லி அழுவது என்று அடக்கமாக இருந்தாலும், அந்த உண்மைச் சம்பவம் மெல்ல மெல்ல கசியத்தான் செய்தது.

பொலிசில் முறைப்பாடு செய்து நிவாரணம் பெற இவர்கள் தவறலாம். இத்தகைய புதிய உத்திகளைக் கையாழும் நவீன திருடர்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமல்லவா?

## தூக்கத்தை குறைத்து கொழுப்பைக் கரையுங்கள்.

உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு. இந்த உண்மையை யார்தான் கேட்கிறார்கள். கண்ட கண்ட உணவுகளை கட்டுக்கடங்காமல் உள்ளெ தள்ளிவிட்டு, உடல் பருமனைக் குறைக்க இப்போதெல்லாம் பத்தியம் (Dieting) காப்பது ஒரு வழக்கமாகிவிட்டது. இதைவிட வேறு வழிகளே கிடையாதா என்ற ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இத்தகைய பரீட்சையில் ஒரு புதுமுறை கையாளப்பட்டது.

தேவைக்கதிகமான எடையுடைய 10 தொண்டர்களை (Volenteers) தெரிவு செய்து இப்பரீட்சையில் ஈடுபடுத்தினர். முதலில் இவர்கள் தினசரி உணவு உட்கொள்ளும் வழக்கத்தில் கட்டுப்பாட்டை கடைப்பிடித்து, உடலின் கொழுப்பை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவர்களுடைய நாளாந்த நடவடிக்கைகளினால், இவர்கடைய எடை ஸ்த்திர நிலையை அடைந்த போது, இவர்களை ஆராய்ச்சி நிலையத்தினுள் 2 வாரங்களுக்கு இரவில் 8.5 மணித்தியாலங்கள் நித்திரை கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். இந்நேர இடைவெளிக்குள் குறைந்த பட்சம் 7 மணித்தியாலம் 25 நிமிடங்கள் வரை இவர்கள் தூக்கத்தில் உறங்கியுள்ளனர்.

### தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

மூன்று மாதங்களுக்குப் பின்னர், இதே தொண்டர்களை 2 வாரங்களுக்கு 5.5 மணித்தியாலங்களுக்கு மட்டும் தூங்க வைத்து, 5 மணித்தியாலங்கள் 14 நிம்டங்கள் மாத்திரமே தூக்கத்தில் உறங்கியுள்ளனர். இப்பரீட்சையின் பெறுபேறுகளின்படி, நீண்ட நேரம் தூங்கியவர்கள் இழந்த கொழுப்பைவிட குறைந்த நேரம் தூங்கியவர்கள் கூடுதலான கொழுப்பை எரித்துள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது.

உடலை வருத்தும் பருமனைக் குறைப்பதே உங்கள் குறிக்கோளாக இருப்பின், இரவில் தூங்கும் நேரத்தைக் குறைத்து, ஆழ்ந்து உறங்கும் நித்திரையைத் தள்ளிப் போடுங்கள், எல்லாம் சுலபமாகவே நடந்தேறும் என சிக்காக்கோ பல்கலைக்கழக மருத்துவ பேராசிரியர் Plamen Ornev கூறுபின்றார்.

உடலின் ஆரோக்கியத்துக்கு தேவைப்படுமளவு நித்திரை கொள்வது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாக இருப்பினும், பாழாய்ப்போன இந்த உடல் பருமன் குறைந்த பாடில்லையே என்று அங்கலாய்ப்பவர்கள் தங்கள் பழக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி தூக்கத்தைக் குறைப்பதைத் தவிர வேறு வழி இல்லையென ஆராய்ச்சியாளர்கள் கைவிரித்துவிட்டனர். ஆசை ஆசையாகச் சாப்பிட்ட உணவுப்பண்டங்களால் இத்தனை அவஸ்தைப்படுவதை விட, அளவோடு உண்டு வளமோடு வாழ பழகிக் கொள்வது நல்லதல்லவா?

## கவனத்தைத் திருப்ப கையடக்கக் கருவி.

குறித்த இடத்திற்கு, குறித்த நேரம் செல்ல வேண்டுமென்று எல்லா ஒழுங்குகளைச் செய்த போதும், வழியில் ஏற்பட்ட கவனக் குறைவால் சாரதிகளில் பலர் இடங்களைத் தவறவிட்டு சுற்றித் திரிவது சர்வ சாதரணம். காரினுள் காதைத் துளைக்கும் ரேடியோ, கையிலேந்திய கமகம காப்பி, கையிலேந்தாத செல்பேசியின் தொல்லை, இத்தனை கவன ஈர்ப்புகளுடன் எப்படித்தான் வழி தவறாமல் குறித்த இடத்திற்கு செல்வது. அந்தக் கவலையே வேண்டாமென கைக்குள் அடங்கக்கூடிய கருவியைத் தயாரித்துள்ளார்கள்.

காரின் கைவளையத்தில் (Stearing Wheel) பொருத்தப்படும் இக்கருவி, தானாக இயங்கக் கூடிய விதத்தில் GPS வழிகாட்டியுடன் இணைக்கப்பட்டுள்ளது.GPSவழிகாட்டியில் தெரிவு செய்த இடத்தைச் சென்றடைய எந்த எந்த திருப்பங்களில் திரும்பவேண்டுமோ அதன்படியே அசைந்து கொடுத்து உரிய இடத்திற்கு உரிய நேரத்தில் சென்றடைய முடியுமாயிருந்தால் இக் கருவியை எவர்தான் விரும்பமாட்டார்கள்.

காரின் வளையத்தில் பொருத்தப்படும் இக் கருவியில், சாரத்தியம் செய்பவர் தனது சுட்டு விரலை மட்டும் இக்கருவியுடன் இணைத்து வைத்திருக்க வேண்டுமென தயாரிப்பாளர்கள் கூறுகின்றார்கள். பரீட்சார்த்தமாக பயன்படுத்தப்பட்ட இக்கருவி 98% சரியாக இயங்தியுள்ளதை தயாரிப்பாளர்கள் நிரூபிக்கின்றனர். இப்புதிய கருவி எப்போது விற்பனைக்கு வருமென பலர் காத்திருந்தாலும் சாரதிகளின் சாதரண கவனத்தை மெல்ல மெல்ல விழுங்கி முற்றாக அழித்துவிடுமோ என்ற பயம் சிலரிடம் இல்லாமல் இல்லை. இதையும்தான் பார்ப்போமே.





நீங்கள் இரத்தம் சிந்தி உழைக்கிறீர்கள் என்பது எமக்குத் தெரியும்

உழைத்தவற்றை ஊருக்கும் உறவுக்கும் கொடுத்து களைத்தீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்

ஒரு நாளில் உங்களுக்கு ஓய்வாகக் கிடைப்பது ஒண்டு ரெண்டு மணித்தியாலங்களே!

இதற்கு அதிகம் செலவழித்து தமிழ்த் தொலைக்காட்சிகளை பார்க்க முடியாது என்பதும் தெரியும்.

ஒரே ஒரு வழிதான் உங்களுக்கு உண்டு

சீவியம் முழுக்க உங்களால் பார்க்க முடிந்த தொலைக்காட்சிகளை பார்த்து மகிழ்ந்திட

அழையுங்கள்

# 020 7183 0367






**புதிய சட்டிலைட்**
**இணைப்புகளுக்கும் அழையுங்கள்**

இந்தப் பொட்டியின் தார்ப்பரியத்தை ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

http://www.nallatv.com

இது ஒரு தமிழ் பெடியங்களின் தயாரிப்பு

# நம்மவர் கல்வியும் நவராத்திரியும்



நவராத்திரி ஒன்பது தினங்களும் துர்க்கை, லஷ்மி, சரஸ்வதி என வீரம், செல்வம், கல்விக்குரிய தெய்வங்களின் திருவழிபாட்டிற்குரிய தினங்கள் என கூறப்பட்டாலும் எம்மவர்களின் கூடிய கவனம் பெறுவது கல்வித் தெய்வமான சரஸ்வதி வழிபாட்டில்தான்.

தமிழ்பாடசாலைகள், கலைப்பாட ஆசிரியர்களின் கலை நிலையங்கள் என புலம்பெயர் நாடுகள் எங்கும் இந்நாட்களில் வித்தியாரம்பம், விழா என ஊரே பக்தி மயம் கலகலக்கின்றது. இங்கு கொண்டாடப்படுகின்ற நவராத்திரி விழாக்கள் தாயகத்தில் ஆலயங்களில் பூசைகள் என்ற மட்டத்தில்அமைகின்றன. இங்கே ஆலயங்களோடு, தமிழ் பள்ளிகள், கலை நிலையங்களிடையேயும் கூடுதலான சிறப்பை நவராத்திரி பெறுகின்றது.

புலம்பெயர் நாடுகளில் எமக்கு கிடைக்கும் வசதிகள் பிள்ளைகளை கலைப்பாடங்களில் ஊக்குவிக்க மேலதிக செலவுகளையும் ஏற்று விடுமுறை தினங்களிலும் கலைப் பாடப்பயிற்சிக்கு அழைத்துச் செல்ல வாய்ப்பளிக்கின்றன. தவிர 'ஊரோடு ஒத்தோடு ஒருவர் ஓடினால் கேட்டோடு' என்ற பழமொழிக்கு அமைய அடுத்த வீட்டுக்கு ஒப்பாக எம் அந்தஸ்த்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற தன்மான உணர்வு பெற்றோர் இங்கு அலைஅலையாக பிள்ளைகளை கலைப்பாடத்திற்குள் நுழைக்க வைப்பதில் கங்கணம் கட்டி நிற்க காரணமாகின்றன. அந்தஸ்த்தை நிலைநாட்டுவதற்கு அரங்கேற்றங்களும் அவசியம் என்ற பெற்றோர்களின் உணர்வும் வாராவாரம் அரங்கேற்றங்கள் காண காரணமெனலாம். குறித்த கலைப்பாடத்தை கற்பித்த ஆசிரியருக்கு அரங்கேற்றத்திற்கான தட்சணை £2000. மண்டபத்திற்கு வாடகையாக 4500 வரையான பவுண்கள். ஒவ்வொரு பக்கவாத்திய கலைஞருக்கும் தலா £500. அழைப்பிதழ், விழாமலர், இடைவேளைச் சிற்றுண்டி, நிறைவில் எடுத்துச் செல்ல இரவு உணவுப் பொதி, உடையலங்காரம், அரங்கேற்றத்திற்கு முந்திய ஒத்திகைக்கான கலைஞர் வேதனம் என தரமான அரங்கேற்றம் ஒன்றுக்கு 20 000 பவுண் வரை செலவாகின்றது என அண்மைய ஒரு அரங்கேற்றத்தின் அமைப்புச் செலவு ஆச்சரியத்தை அளித்தது.

1+ என்ற ஆரம்ப பள்ளிக்கு பின்பான அடுத்த நிலைக்கு தரமான பாடசாலைகளில் இடம் கொள்கின்ற பரீட்சையும் நவராத்திரி நாட்களில் வந்துபோகின்றன. தரமான பாடசாலைகளுக்கு 2000 மாணவர்களுக்கு மேல் அனுமதி கோருவதும், அதில் 180 முதல் 200 மாணவர்கள் மட்டும் நுழைவுப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதும் வழமை. இந்த பரீட்சைக் காலம் நவராத்திரி காலத்தோடு ஒட்டி அமைவதும், கல்வித் தெய்வங்கள் மேல் எம்மவர் கவனம் கூடுதலாக அமைவதற்கு காரணமாகின்றது. பெற்றோர்களின் கடும் உழைப்பும், கரிசனையும் தரமான பாடசாலைகளில் எம்மவர் பிள்ளைகளுக்கு வருடாவருடம் அதிக தொகையில் இடம் கிடைக்க செய்கின்றன. சரஸ்வதி தேவியின் கடாட்சம் தமக்கு இருப்பதாகவும் அவர்களின் நம்பிக்கை.

6ஆம் ஆண்டின் முற்பகுதியில் எதிர் கொள்ளும் பரீட்சைக்கு பிள்ளைகளை பிரத்தியேக வகுப்புக்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே எம்மவர்கள் தயார் படுத்த அழைத்துச் செல்கின்றார்கள்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

குறிப்பாக Sutton பரப்பளவு தொடர்ந்தும் இரு தசாப்தங்களாக கல்வித் தரத்தில் பிரித்தானியா அடங்கலும் உயர்தரத்தில் விளங்குவதால் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தமிழர்கள் இப்பகுதிக்கு படையெடுக்கின்றனர். வந்து குடியேறுகின்றனர். பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக நோர்வே, சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகளிலிருந்தும் காலகாலமாக அங்கு வாழ்ந்த வாழ்க்கையை விட்டு இங்கு வந்து இடம் பெயர்ந்து நல்ல வருமானத்தையும் வசதியையும் இழந்து விட்டோமே என்ற ஏக்கத்தோடு, இலண்டன் தும்படி வாழ்க்கைக்கு தம்மை பழக்கப்படுத்தி கொள்வதையும் அதிகம் காணக்கூடியதாக இருக்கின்றது. கணவன் ஓயாமல் உழைப்பைத் தொடர, பிள்ளைகளை பள்ளிக்கும் தனியார் கல்விக்கும் தாய் கொண்டு செல்கிறார். இதற்காக பலத்த பிரயத்தனத்தின் பல தொல்விகளின் பின்பும் தாய் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துகின்றார். தனக்கென தனி மோட்டார் வண்டியோடு 1+ பரீட்சைக்கான ஓயாத பயணம் வாரத்தில் ஏழு நாட்களும் ஆகின்றது.

தனியார் கல்வியில் வல்லவர்கள் அவர் இவர் என அடுத்தவர் சொல்ல சொல்ல ஆசிரியரை மாற்றி மாற்றி ஓட்டம் தொடரும். செல்லர், யசோ, சித்ரா, பாலா, வில்வராசா கல்விக்கூடம் என கல்விக்கான ஓட்டங்கள் ஆங்கிலேய பிரபல ஆசிரியர்களிடமும் தொடரும். மணித்தியாலம் ஒன்றுக்கு 25 பவுண் வரை கட்டணமாக அறவிடுகின்ற வரைக்கு இந்த முயற்சிகளினுடைய ஆர்ப்பரியம் சென்றடைந்துள்ளது. வேள்விக்காலத்தில் ஆட்டுக்கடாய்களுக்கு தீனியை திணிப்பது போல பிள்ளைகள் மீதும் பிரத்தியேக கல்வித்திணிப்பு. 1+ ஓட்டம் முடிய மீண்டும் அடுத்த உயர்தர பரீட்சைக்கான தயார்படுத்தல்கள் ஆரம்பம்.

## வேள்விக் காலத்தில் ஆட்டுக் கடாய்களுக்கு தீனியை திணிப்பது போல பிள்ளைகள் மீதும் பிரத்தியேக கல்வித் திணிப்பு

தாயகத்திலும் எங்கும் தமிழர் கல்வியில் முன்னிலையில் வகிக்க அவர்களின் முயற்சியும் ஓயாத ஆர்வமும் காரணமாக அமைகின்றது. எம்மவர்கள் சந்ததிகளுக்கு கல்விச் செல்வத்தை நல்கும் முயற்சி பாராட்டப்பட வேண்டியது. பயன் தருவது. கல்வித் தெய்வத்திற்கான வழிபாடுகள் வீடு தோறும் கடலை, அவல், பொங்கல் என படையல்களோடு அமைவதும் எம் பிள்ளைகளை Mc Donalds, Kender Ki Chicken விருப்பத்திலிருந்து தாயக உணர்வை நுகர்கின்ற சந்தர்ப்பத்தை தருவதும் நவராத்திரி பயன் தருகின்றது எனலாம். நல்லவைகள் தொடரட்டும். நவராத்திரி வழிபாடும் தொடரட்டும்.

### தீவிரவாதி...

ஈழம் ஆனாலும் ஈராக் ஆனாலும்
குற்றவாளியாய்க் கருதப்படுபவன்
மண்ணின் மைந்தனே!
கல்லை எறிந்து எதிர்ப்பைக் காட்டுபவன்
தீவிர வாதியாம்!


உலகம் முழுவதும் உங்கள் சொந்தங்களுடன்
துல்லியமான ஒலித்தெளிவுடன் பேசி மகிழ...

FREE CALLS
LOCAL & EUROPE

மாதம் £7.99 மட்டுமே

- VOIP SOLUTIONS FOR BUSINESS
- RESELLER SOLUTIONS

Professional quality voip phone service for Small businesses UK and Europe

Call : 020 3004 8097


அழையுங்கள்...
மியாமி மதன்
020 3004 8097
079 4001 4908
www.miaamyglobal.com

Miaamy GLOBAL

Its Quick and easier than you think.




# காவலன் விஜய்க்கு கவுண்டமணி அட்வைஸ்!



விஜய் நடிக்கும் காவலன் ஷ?ட்டிங் ஸ்பாட். அங்கு எண்டர் ஆகிறார் எள்ளல் நாயகன்,நகைச்சுவை பேரரசு கவுண்டமணி...

ஹாய்..ஹாய்..ஹாய் எவரிபடி....

கவுண்டரை பார்த்ததும் ஆர்வமுடன் ஓடி வந்து சூழ்ந்து கொண்ட..டெக்னீசியன்கள், தொழிலாளர்களை விலக்கிக் கொண்டு,விஜய் கேரவேனை நோக்கி செல்கிறார், அதே நேரம் கேரவேனை விட்டு இறங்கிய விஜய் ய்யும் கவுண்டரை பார்த்து ஷாக் ஆகி.. இந்தாளு எங்க இங்க வந்தார் என நினைக்கிறார்.. விஜய்யை நெருங்கிய கவுண்டர்,

ஹல்லோ..போலீஸ்கார் குட்மார்னிங்..

வாங்கண்ணே..என்னது போலீஸ்கார்னு சொல்றீங்க.. நான் இதுல செக்யூரிட்டிண்ணே..

"அட... காவலன் னா போலீஸ்கார் தாம்பா.. அப்போ நீ போலீஸ்சா நடிக்கலையா.. செக்யூ ரிட்டியா.. எப்படி... உன் இமேஜ் என்னாவறது.. உங்கப்பன் டைரடக்கரு ஒத்துக்க மாட்டானே?

கதை நல்லாருந்துது.. சரின்னுட்டார்??

ஹே..பார்த்தியா நம்மகிட்டிய டகால்டி காமிக்கிறியே.. அப்பனும் மவனும் என்னிக்குடா கதைய பார்த்தீங்க.. வேற வழியில்ல.. ஹிட் வேணும் னு ஒத்துக்கிட்டீங்க.. பாலிஸா பேசியே..பதிலிசா அலையறிங்கடா..

'மெதுவா பேசுங்கண்ணே..எனக்குன்னு இமேஜ் இருக்கு..இன்னும் கோயமுத்தூர் ஷுட்டிங்க்ல பார்த்த விஜய் யாவே நினைக்காதீங்க..

'ஓஹோ.. இப்ப பெரிய ஆளாயிட்டியா... ரஜினியே என்ன பார்த்தா பம்முவாரு.. நீ என்ன பிஸ்கோத்து... பின்னாடி ஏதாவது முளைச்சிருக்கா.. எங்க திரும்பு பார்க்கலாம்.. ஒண்ணும் காணமே... அப்புறம் என்ன...??

'உடம்பு சவுரியமெல்லாம் எப்படிண்ணே..?'

'அட..அத விட்டு தள்ளு கழுதை...ஆமா கோயமுத்தூர் மாப்ள ல நாம இரண்டு பேரும் ஜோடி போட்டு தாக்கு தாக்குன்னு தாக்குனோம்..சங்கவிய நீ தாக்கு தாக்குன்னு தாக்குன.. அதையெல்லாம் இப்பவும் நினச்சு பார்த்தா குளுகுளுனு இருக்குது.."

'அட... என்னெண்ணே.. நீங்க.. அதையேல்லாம் நினெச்சுகிட்டு..'

அட... என்னெண்ணே.. நொண்ணேணேன்னுட்டு... மாப்ள..மாம்ஸ் னு கூப்பிடுப்பா.. நாம எல்லாம் யூத்துப்பா.... ஏம்பா... நம்ம ஜோடி காம்பினேசன் உனக்கு பிடிக்கலையா...??

அது இல்லண்ணே.. சங்கவி மேட்டர சொன்னேன்..

சரி..சரி..இன்னிக்கு கிடைச்ச பிரியாணிய சேதாரமில்லாம சாப்பிடப் பார்க்கணும்.. நேத்து சாப்பிட்ட பழைய சோறை மறந்துடணும்னு சொல்ற... புரியுது.. யூ கண்டினியூ... போட்டு தாக்கு... அப்புறம் அசின் அக்கா என்னா சொல்றாங்க.. உர்ர்ர்ராசினியா.. ஓ.. நீதான் சிவகாசியிலியே உராசு உராசுனு உரசிட்டியே....?

ஹஹஹா..குறும்பாவேபேசாதீங்கண்ணே... எனக்கு படம் ஜெயிக்கணும்கிறதுதான் கவலையே.... என் கவனமெல்லாம் அதுலதான்

'ச்சே..என்னப்பா.. அசிங்க, அசிங்கமா பேசற.. நாம என்னிக்கு படம் ஓடறத பத்தி கவலப்பட்டோம்.. படம் ஓடுனா என்ன.. பணம் போட்ட அந்த மொன்ன நாயி செத்தா நமக்கு என்ன.. பேமண்ட் கொடுத்துட்டானா இல்லையா.. கறுப்பு வெள்ளை பிரிச்சி வாங்கிட்ட இல்ல...ஓப்பனிங்சாங்,நாலு ஃபைட், நாலு பாட்டு... தங்கச்சி பாட்டு, ஆத்தாகாரி பாட்டு எல்லாம் வெக்க சொல்லிட்டீல்ல.. அரசியலுக்கு தோதா பில்டப் சீன் வைன்னு உங்கப்பன் டைரக்டரை கூப்பிட்டு மிரட்டினானா இல்லையா, சந்தானத்துக்கிட்ட ரெண்டு பிட்டு. விட்டு நடிக்க சொல்லி வாங்கிட்டியா?'

எல்லாம் பக்காண்ணே..

அப்புறம் என்ன.. அடுத்த படம் .. அடுத்த பேமண்ட்.. அனுஸ்கா, தமனா னு போக வேண்டியதுதானே.. நம்ம ரசிக குஞ்சுமணிகளுக்கு நாலு குத்துப்பாட்டு, நாலு பைட் இருந்தா போதும்.. கோயமுத்தூர் மாப்ள. எனக்காகத்தான் ஓடுச்சுன்னு நியூஸ் வந்ததுக்கப்புறம் எந்த காமெடி நடிகனையும் நீ அண்டவே விடறதில்லைனு கேள்விப்பட்டேன்..வடிவேலு சீனை கூட ஒண்ட வெட்டிற சொல்லுறியாம். இதெல்லாம் தப்புப்பா.. ரஜினி ஆகணும்னு நினெக்கிற ரஜினி குணத்தையும் ஃபாலோ பண்ணனும்.. நல்ல டைரக்டர், நல்ல காமெடியன்..டைரக்டர் சொல்றதை மட்டும் கேட்டு செய்றதுன்னு இருந்தா நீயும் இன்னும் பெருசா வரலாம்பா..??

சரிண்ணே..பேரன்,பேத்தியெல்லாம் எப்படி இருக்காங்க..?

கவுண்டர் மனதிற்க்குள் (பேச்சை எப்படி மாத்துறாம் பாரு.. நல்லது சொன்னா கேட்க மாட்டியே.. உன் ரூட்லியே வர்றேன்..)

'பேரன், பேத்தியெல்லாம் நல்லா இருக்காங்கப்பா.. அவங்க குறும்பு பண்ணும் போதெல்லாம் வில்லு பிரஸ் மீட்ல.. ஷட் அப்னு நீ கத்துவியே... அந்த வீடியோவை போட்டு காட்டுவேன்.. பொடுசுங்க அப்படியே கப்பு சிப்புனு அடங்கிரும்...' இது பரவாயில்லை .. என் ஃப்ரெண்ட் ஒருத்தன் கடன்காரங்களை சமாளிக்கிறதுக்கு அந்த வாய்சைத்தான் காலர் டியூனா வெச்சிருக்கானாம். போன் பண்ற கடன்காரங்க... டரியல் ஆயிடுறானுங்களாம்...

விஜய் சுதாரித்துக் கொண்டு,டேய்.. அண்ணனுக்கு ஆரஞ்ச் யூஸ் கொடுறா சரிண்ணே... நேரமாச்சு....ஷுட்டிங் போறேன்??

ஓகேம்மா...??

கவுண்டரும் கிளம்புகிறார்.. என்னமோ ஷூட்டிங் கிறானுக..வேலைங்கிறானுக..ஒரே குஸ்டமப்பா... சரி அடுத்து யாரை பார்க்கலாம் என சிந்தித்தபடியே செல்கிறார் கவுண்டர்...

*- ஆர். கே. சதீஸ்குமார்*



" ஏன்டா.. தம்பி கோத்தபயா.. காமன்வெல்த் கேம்ஸ்க்கு என்னைய கூப்பிட்டுருக்காங்களே.. ஈழத்தமிழர்களை கொத்துக்கொத்தா கொன்னு 'மரண விளையாட்டு' விளையாண்டதுக்காக எனக்கு மெடல் எதுவும் குடுக்க கூப்பிட்டுருப்பாங்களோ..?!"

# விடாக்கண்டன்... கொடாக்கண்டன்...

ஒரு விஷயம் சரியா இருக்கும்போதே, தப்பா இருக்கும். அதேபோல ஒரு விஷயம் தப்பா இருக்கும்போதே, சரியா இருக்கும். இதைத் தான் ஆங்கிலத்தில் பேரடாக்ஸ் (Paradox) என்கிறார்கள்.

ஒரு விடாக்கண்டன், கொடாக்கண்டன் கதையை சொன்னால் இதை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அந்தக் காலத்தில் ஒரு வாத்தியார் இருந்தார். அவர் வாதம் புரியும் கலையில் கில்லாடி. அதனால் பல ஊர்களில் இருந்தும் நிறைய பேர் வந்து அவரிடம் படித்து பாரிஸ்டர் பட்டம் வாங்கிக் கொண்டு போவார்கள். அப்புறம் அவங்கவங்க ஊர் ஆலமரத்தடி முதல் நீதிமன்றம் வரை வழக்காடி சூப்பரா கல்லா கட்டுவாங்க. அவரது மாணவர்களை யாராலும் அவ்வளவு சுலபத்தில் வழக்காடி ஜெயித்துவிட முடியாது.

ஒருநாள் காலையில் ஒரு பையன் அவர் வீட்டு வாசல்ல வந்து பாடம் கத்துக்கணும்னு நின்னான். நம்மாளு ஃபீஸை சொன்னாரு. பையன் மிரண்டு போயிட்டான். ஐயா, இப்போதைக்கு அவ்வளவு பணம் என்கிட்டே கிடையாது. வேணும்னா ஒரு ஒப்பந்தம் போட்டுக்கலாம்னான். அதாவது, நான் படிச்சு முடிச்சு போனதும் எடுத்துக்கிற முதல் கேசுல ஜெயிச்சா நீங்க கேட்ட ஃபீஸை உடனே கொடுத்துடுவேன், தோத்துட்டா கொடுக்க மாட்டேன், ஓ.கே.வான்னான் பையன். நம்ம சிஷ்யன்நிச்சயம்தோற்கமாட்டான்றதைரியத்துல ஒப்பந்தத்துக்கு ஒத்துக்கிட்டார் குரு.

பையன் நல்லா படிச்சான், கோர்ஸை முடிச்சான், ஊருக்கு போயிட்டான். ஆனா பல மாசம் ஓடியும் காசு மட்டும் வரலே. கடுதாசி போட்டுப் பார்த்தாரு குரு. பதில் கடுதாசி தான் வந்தது. ஐயா, நான் இன்னும் கேஸே எடுத்துக்கல. முதல் கேஸ் வரட்டும் பார்க்கலாம்னுட்டான் அந்த தில்லாலங்கடி. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த குரு ஒருகட்டத்திலே வெறுத்துப் போய் அவன் மேலேயே ஒரு கேஸைப் போட்டார். இவன் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காம ஏமாத்துறான்றதுதான் கேஸ்.

பையன் அவன் சார்பா அவனே ஆஜரானான். இதுதான் அவன் ஆஜராகும் முதல் கேஸ். குருவுக்கு பணம் தரணும்ன்னு நீதிபதி தீர்ப்பு சொல்லிட்டா, பையன் கேஸ்ல தோத்துருவான். அதனால ஒப்பந்தப்படி பணம் தரத் தேவையில்லை. தர வேண்டாம்னு சொல்லிட்டா, அதுதான் நீதிபதியே சொல்லிட்டாருல்லன்னு நடையை கட்டிருவான். ஆக, எப்படி பார்த்தாலும் பணம் தர முடியாதுன்னுட்டான் அந்த கில்லாடி கில்மா.

குரு லேசுப்பட்டவரா? நீதிபதி பணம் தரச் சொன்னா, தீர்ப்புப்படி பணம் தரணும். தர வேண்டாம்னு சொன்னா, நீ மொத கேஸ்ல ஜெயிச்சுருவ, அதனால ஒப்பந்தப்படி பணம் தரணும். ஆக எப்படி பார்த்தாலும் பணம் தரணும் மகனேன்னாரு.

இரண்டு பேரும் இப்படி கிடுக்கிப்பிடி போடுவதை பார்த்த நீதிபதி பாவம் என்ன பண்ணுவாரு. மயங்கி விழுந்திட்டாரு. இப்போ புரியுதா, இதுதான் பேரடாக்ஸ்.

*- பார்த்திபன்*



# திறந்த மனத்துடன்.

திறந்த மனத்துடன் விசராணை செய்யத்தக்க சிரத்தையுடன் பகுத்தறிவுடன் விமர்சனப் பாங்குடன் அரசியல் ரீதியாக யாவற்றையும் அணுகவேண்டும் என்பது எமக்கு முன்னுள்ள கடன். இலங்கைத் தீவில் இரண்டு தேசங்கள் உள்ளன எனவே அவற்றுக்குரிய இறைமைகளும் உள்ளன என்பதே என்நம்பிக்கை. அதே நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கவேண்டும் என்பதும் அவசியமல்ல. சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வை சிலர் வலியுறுத்தலாம். ஒற்றையாட்சியின் கீழ் தமிழர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் சிலர் கூறலாம்.

எவ்வாறாயினும் தமிழர்களுக்கு உரிமைகள் இல்லை. பிரச்சினைகள் இருக்கின்றன என்று யாவரும் ஏற்றுக் கொள்வர். இலங்கை என்பது சிங்கள பெளத்த நாடு அங்கு தமிழர் என்போர் இரண்டாந்தர அல்லது மூன்றாந்தரப் பிரஜைகள். சிங்களம் இரந்து ஏதேனும் கொடுத்தால் அதனை இருகை நீட்டி வாங்கிக்கொண்டு வாழ்வது தான் தமிழரின் கடன் என்று தமிழர் எவரும் சொல்ல மாட்டார். அவ்வாறு சொன்னால் அவர் தமிழர் அல்லர்.

அவ்வாறு சொல்லாமல் அதனையே வேறொரு வார்த்தையில் அல்லத வேறொரு வழியினூடாக சொல்வோரும் உளர். அவர்கள் எவ்வாறு சொல்கின்றார்கள் எனில் தமிழர்களில் 'தலித்' பிரச்சினைகள் இருக்கின்றன அவை முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்பாரும் உளர். இவர்கள் தலித் என்ற கோலை ஏன் கையில் எடுக்கிறார்கள். என்பதனை எழுதப் புகின் இதிலொரு ஆய்வுக்கட்டுரை வரைய வேண்டும்.

ஈழத்தின் தலித் எழுத்தாளர் என்றோ அல்லது தமிழில் முதன்முதல் தலித்திய எழுத்துக்களைச் சொன்னார் என்றோ அறியப்பட்டவர் கே.டானியல் அவர்கள். அவரின் பஞ்சமர்,கானல், கோவிந்தன் முதலான நாவல்கள் தரமான கதை சொல்லும் கூறுகளைக் கொண்டுள்ளன. 1981 மே 31ஆம்நாள் யாழ்ப்பாண பொதுசன நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட சமயம் ஈழத்தழர் நெஞ்சங்களில் நெருப்பு கொழுந்து விட்டெரிந்தது. ஆனால் கே.டானியல் அவர்கள் இது பற்றி ஓர் இலக்கியக்கூட்டத்தில் குறிப்பிடுகையில் ' உயர் சாதியினர் கல்வி கற்கச் சென்ற எத்தனையோ தலித் பிள்ளைகளின் புத்தகங்களைக் கொளுத்தியிருக்கின்றனர் அதன் முன்னால் நூலக எரிப்பை என்னால் முக்கியத்துவப்படுத்த முடியவில்லை.' என்று கூறினார்.

ஒரு வரலாற்று எரிப்பை டானியலின் மார்க்சீய அரசியல் எந்தளவுக்கு புரிந்து வைத்திருக்கிறது என்பதற்கு இது நல்ல சான்று. இந்த மார்க்சீய அரசியல் தான் எமக்கு சினேகமுரண்பாடு, பகைமுரண்பாடு, பிரதான முரண்பாடு, என்றெல்லாம் கற்றுத் தந்தன. அதே மார்க்சியர்களுக்கு அது தெரியாமல் போனது விந்தை. பாரதியாரும் இவ் முரண்பாடு முற்றிய போது தான் தன் கவிதையில் இரு வரி வைத்தார்.

' ஆயிரம் உண்டிங்கு ஜாதி எனில்

அந்நியர் வந்து புகல் என்ன நீதி'

பாரதியார் ஒரு பிராமணக் கவி என்று சிலர் நிராகரித்து விட்டுப்போகலாம் ஆனால் இந்த உண்மைகளை யாராலும் நிராகரிக்க ஏலாது.

இவாவ்வாறு சொல்கையில் ஈழத்து தலித்துக்களுக்கு யாதொரு பிரச்சனையும் இல்லை என்று ஒருபோதும் சொல்ல முடியாது. அவர்களின் பிரச்சனைகளை நன்கு அறிவேன் ஏனெனில் அவர்களுடன் உண்டு உடுத்து உறங்கிச் சீவித்தேன்.

என் பிரச்சினை என்னவென்றால் தலித் பிரச்சினைகளை முன்னெடுப்பவர்கள் அதற்கான தீர்வு வழிமுறை அரசியல் வேலைத்திட்டம் என்ன என்பதை பகர்கிறார்கள் இல்லையே . தேசிய விடுதலைப்போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யவும் விடுதலைப்போராளிகளை விமர்சிக்கவும் தானே இக் கோலைக் கையில் எடுக்கிறார்கள். அப்படி எடுப்போரும் ஒன்றிரண்டு பேர் தான் அவர்களால் எந்த ஆபத்தும் இல்லை. எம்மைச்சுற்றி வேறு ஆபத்து இருப்பது தான் என் தீரா வேதனை.

நாம் இப்போது அடுத்த கட்டத்துள் புகுந்து விட்டோம். செப்ரெம்பர் மாத இறுதியில் நாடு கடந்த அரசாங்கத்துக்குரிய அமைச்சரவை தெரிவு செய்யப்பட்டு விட்டது. பிரதமமந்திரியாகத் தெரிவுசெய்யப்பட்ட உருத்திரகுமாரன் அவர்களுக்கும் ஏனைய அங்கத்தவர்களுக்கும் என் வாழ்த்துக்கள் . உங்களிடமிருந்து நாம் எதிர்பார்ப்பது அதிகம் என்பதால் செறிவாக அந்த நம்பிக்கை பொய்த்துப் போகாமல் பணிபுரிவீர்கள் என்றும் நம்புகிறோம்.

ஈழத்தமிழர் யாபேருக்கும் இப்பொழுது மேலும் பொறுப்புக் கூடியுள்ளது. முப்பது வருடகால ஆயுதப் போராட்டத்தில் நாம் அடைந்தவை மிக அதிகம். சர்வதேச சமூகத்திடம் தமிழீழம் என்ற ஒரு தேசம் உள்ளதை அடையாளப் படுத்தி விட்டோம். தமிழீழம் என்ற தேசத்தை அமைத்துக் காட்டி விட்டார் நமது தேசியத்தலைவர். தமிழீழம் நோக்கி யாபேரது கவனமும் குவிந்தது.

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

இதைச் சாத்தியப்படுத்தியவர் நமது தேசியத்தலைவர். தலைவருக்கு அதனைச் சாத்தியப்படுத்திக் கொடுத்தவர்கள் தளபதிகள் போராளிகள் மாவீரர்கள் தமிழ்மக்கள். முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரத் தெய்வங்கள் சிந்திய குருதியும், வியர்வையும், உயிரும் அளப்பரிய தியாகங்களும் யாவரலும் மறக்கப்படமுடியாதது. ஒவ்வொரு மாவீரர்களுக்கும் ஓராயிரம் கதைகள் இருக்கின்றன. அதனை நாம் மீண்டும் மீண்டும் நினைவில் கொள்வோம்.

இந்த இடத்தில் மீண்டும் தாள் பணிந்து கேட்கிறோம். சேரமான் போன்ற அரசியல் ஆய்வாளர்களே ஈழமுரசு போன்ற பத்திரிகை ஊடகங்களே, பதிவு போன்ற இணையத்தளங்களே ஒரு சிறிது காலம் பொறுப்போம். இலட்சக்கணக்கானோர் சிந்திய உயிர்களுக்காகப் பொறுப்போம் கோடிக்கணக்காக அழிந்த சொத்துக்களுக்காகப் பொறுப்போம். யாவற்றிலும் மேலாக சிதைக்கப்பட்டு அழிக்கப்பட்ட ஈழதேசத்தின் ஆன்மாவுக்காகப் பொறுப்போம். நாடு கடந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது. என்று பொறுத்திருந்து பார்ப்போம். அது புலம் பெயர் தேசத்தில் தான் இருக்கிறது. இப்பொழுது தான் கருக்கட்டியது இனி முளைவிட்டு முகிழ்க்கின்ற போது பார்ப்போம். இப்பொழுது அது குழந்தை அது எழமுன்னர் சாத்தானின் குழந்தை என்று சாபம் இடாதீர்கள். எதுவாக இருந்தாலும் அரசியல் மொழியில் பேசுங்கள். புனைவுகளையும் இட்டுக்கட்டியவைகளையும் வதந்திகளையும் அரசியல் ஆய்வு என்று தமிழ்மக்களைக் குழப்பாதீர்கள்.

நாடு கடந்த அரசாங்கம் என்பது கே.பி முன்மொழிந்த ஒன்று என்பதற்காக அதை நிராகரிப்பது எந்த வகையில் நியாயம்? கே.பி யுடன் நா.க.அரசாங்கத்தை முடிச்சுப் போட வேண்டிய அவசியம் இப்போது ஏன் வந்தது? உருத்திரகுமாரன் சொல்லாதவற்றை ஏன் சொன்னார் என்று சொல்கிறீர்கள்.

ஒருபுறத்தில் சிங்கள அரசு செய்ய வேண்டியதை நீங்கள் செய்கிறீர்கள் என்பதை உணர்கிறீர்களா? சிங்கள அரசு இப்போது தன் அச்சத்தை குறைத்துக் கொண்டதைக்கவனித்தீர்களா? ஏனெனில் யாவற்றையும் குழப்ப நீங்கள் இருக்கிறீர்கள்.அது போதும் சிங்கள அரசுக்கு.

பிறகு ஒரு போதும் வரலாறு உங்களை மன்னிக்காது.

# அறிவியல் தகவல்கள்

## இறந்து போனவருக்கும் குழந்தை பிறக்கும் !

'ஐயோ என்னால் அப்பாவாக முடியாதே? 'என இனிமேல் ஆண்கள் யாருமே புலம்பத் தேவையில்லை என்கிறது பிரிட்டன் ஆராய்ச்சியாளர்களின் ஒரு ஆராய்ச்சி முடிவு.

விந்தணுவும் முட்டையும் இணைந்து கரு உருவா்வது தானே இயற்கையின் நியதி. ஒருவேளை நோயினாலோ, வேறு ஏதேனும் காரணத்தினாலோ சரியான விந்தணுக்கள் இல்லாத ஆண்கள் என்ன செய்வது ?

கவலையை விடுங்கள் உங்கள் உடலிலுள்ள ஒரு 'ஸ்டெம் செல்' போதும் உங்களுக்குச் சொந்தமான ஒரு விந்தணுவை உருவாக்கி விடலாம் என்பது தான் அந்த ஆராய்ச்சி சொல்லும் ஆச்சரிய சங்கதி. பிரிட்டனின் நியூகாசல் பல்கலைக்கழகத்தில் நடந்த இந்த ஆராய்ச்சியை தலைமையேற்று நடத்தி உலகின் புருவத்தை உயர வைத்திருப்பவர் பேராசிரியர் கரிம் நயிர்னியா.

இன்றைய தேதியில் ஆறு தம்பதியரில் ஒருவருக்கு குழந்தை பிறப்பதில் சிக்கல் இருக்கிறது. பழைய காலத்தைப் போல குழந்தையில்லையேல் பழியை பெண்ணின் தலையில் போட்டு விட்டு தப்பிக்கவும் நவீன யுகம் வளர்ச்சி இடம் தருவதில்லை.

உண்மையில், பிரச்சினை இப்போதெல்லாம் பெரும்பாலும் ஆண்களிடம் தான். ஜீவனில்லா விந்தணு, வீரியமில்லா விந்தணு, குறைவான எண்ணிக்கை இப்படி எக்கச்சக்கமான பிரச்சினைகள் இந்த உயிரணுவைச் சுற்றி. இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வாகக் கூடும் இந்த ஆராய்ச்சி என்பதே இப்போதைக்கு மருத்துவ உலகின் நம்பிக்கை.

உலக மருத்துவ வரலாற்றிலேயே முதன் முறையாக எனும் அடைமொழியுடன், ஒரு ஆண் கருவிலிருந்து ஒரு செல்லைப் பிரித்தெடுத்து, அதை சோதனைக்கூடத்தில் ஸ்பெர்ம் ஆக வளரச் செய்திருக்கிறார் அவர். கருவிலிருந்து தான் செல்லை எடுக்க வேண்டுமென்றில்லை. ஆண்களின் கைகளிலிருந்தே ஒரு ஸ்டெம் செல்லைப் பிரித்து எடுத்து ஒரு ஸ்பெர்ம் செல்லை உருவாக்க முடியும் என நம்புகிறார் பேராசிரியர் கரிம் நயிர்னியா.

எளிதாய் சொன்னாலும் இதன் பின்னணியில் உள்ள உழைப்பு அசாத்தியமானது. ஸ்டெம் செல் ஒன்றை திரவ நைட்ரஜனில் பதப்படுத்தி, அங்கிருந்து சாதாரண வெப்பநிலைக்குக் கொண்டு வந்து வைட்டமின்கள் உதவியுடன் ஸ்பெர்ம் ஆக வளர்த்தெடுக்க நான்கு முதல் ஆறு வாரங்கள் ஆகிறதாம். இந்த விந்தணுவை IVF முறைப்படி நேரடியாக முட்டையில் செலுத்தினால் கரு தயார்.

இவர் ஏற்கனவே இந்த ஆராய்ச்சியை எலிகளை வைத்து நடத்தி நிறைய எலிக்குட்டிகளை உருவாக்கினார் என்பது வியப்புச் செய்தி ! ஆனால் மனித விந்தணுவை வைத்து இன்னும் குழந்தையை உருவாக்கவில்லை, காரணம், பிரிட்டனில் அதற்கான அனுமதி இல்லை என்பது தான். ஏற்கனவே செயற்கை முறையில் கருத்தரிக்க வைக்கும் முறை இருக்கிறது. ஆனால் அதற்கு ஸ்பெர்ம் யாராவது தானமாய் தரவேண்டும், முட்டை யாராவது தானமாய் தரவேண்டும். இரண்டையும் சேர்த்து ஏதோ ஒரு தாயின் கருவறையில் கருவாய் வளர்க்க வேண்டும். ஆனால் இந்த புதிய ஆராய்ச்சி மட்டும் நடைமுறைக்கு வந்தால், அச்சு அசலாக பெற்றோரின் குணாதிசயங்களுடன் இயற்கையாய் பிறக்கும் குழந்தைக்குரிய அத்தனை இயல்புகளோடும் செயற்கையாய் ஒரு குழந்தையை உருவாக்க முடியும் என்கிறார் கரீம்.

இந்த ஆராய்ச்சி ஸ்பெர்ம் தொடர்பான பல ஆராய்ச்சிகளுக்கான கதவுகளை ஒரு சேரத் திறந்திருக்கிறது. உயிரணுக்கள் எப்படி உருவாகின்றன, வளர்கின்றன, என்னென்ன தன்மையில் வலுவடைகின்றன என அனைத்து நுண்ணிய விஷயங்களையும் இனிமேல் விரிவாக அறிய முடியும் என்பது மருத்துவ நம்பிக்கை. அப்படி நடந்தால் 'வயாகரா' போல ஒரு மாத்திரை வந்து சர்வ உயிரணுப் பிரச்சினைகளையும் தீர்த்து வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இப்போதைக்கு ஒரு விந்தணுவை உருவாக்க ஒரு ஆணின் ஸ்டெம் செல் கட்டாயம் தேவை என்பதே நிலை. பெண்ணின் ஸ்டெம் செல்லைக் கொண்டு விந்தணு உருவாக்க முயன்ற முயற்சிகள் தோல்வியடைந்திருக்கின்றன. அப்படி பெண்ணின் செல்லில் இருந்தே ஒரு விந்தணுவும் உருவாக்க முடிகின்ற ஒரு காலம் உருவாகும் போது ஒரு குழந்தைக்கு பெண்ணே தாயுமானவளாகவும், தந்தையானவளாகவும் மாறும் வியப்பின் உச்சகட்டம் உருவாகும்.இந்த ஆராய்ச்சியின் மிகவும் வியக்கத் தக்க விஷயமே இனிமேல் தான் இருக்கிறது. அதாவது இறந்து போன ஒருவருடைய உடலிலிருந்து கூட ஒரு செல்லை எடுத்து அதை வளரவைத்து ஸ்பெர்ம் ஆக மாற்றி அவருடைய சந்ததியை செயற்கையாகவே உருவாக்கிவிடலாம் என்பது தான் அது !


எண்ணித் துணிவோம் !
ஒன்றிணைந்து எழுவோம் !
இலக்கை வெல்வோம் !

அனைத்துலக உயிரோடை - தமிழ்

Daily Broadcast on Spectrum Radio
MW558
From 6.02pm until 8.58pm

To listen online: http://www.ilctamil.com

ILC Tamil - INTERNATIONAL LIVE CHANNEL
Contact us on:
0207 019 75 12 / 0796 323 11 95
E-mail: radio@ilctamil.com

iLc Tamil
அனைத்துலக உயிரோடை தமிழ்




# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 37 years, 5'10", working in a retail profession, British Citizen, looking for a matching bride. Horoscopes should be matched. Ref: 1728

2. 31 years, 5'7", Doctor, British Citizen, looking for a well educated bride. Ref: 1680

3. வயது 32, 5'2", Student visa இல் பிரித்தானியாவில் வசிக்கும், செவ்வாய் குற்றம் உடைய மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 636.

4. வயது 25, 6'0", துபாயில் வசிக்கும் மணமகனுக்கு ஐரோப்பிய பிரஜா வுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1528

5. Age 25, 5'6", HMD Business student, student visa in UK, looking for a matching bride with UK PR or Citizenship. Ref: 1703

6. வயது 31, 5'5", இலங்கையில் கல்விக் கோட்டத்தில் வேலை செய்யும் வாய் பேச முடியாத மணமகனுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1656

7. வயது 31, 5'7", பிரித்தானியாவில் நிரந்தர வதிவுடமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 686

8. 24 years, 5'9", IT Student, student visa in UK, looking for a suitable bride. Ref: 1672

9. 35 years, 5'11", Uk PR, Self-Employed, seeking a matching bride. Ref: 1693

10. 37 years, 5'6", Computer Science Graduate, British Citizen, Divorced, looking for a suitable bride with UK citizenship. Ref: 1684

11. வயது 48, 5'7", Self-Employed, UK PR, மணமமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1694.

12. வயது 52, 5'7", widowed, இலங்கையில் வசிக்கும் மணமகன் சிறந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1699

13. Age 31, 5'7", working as Project Manager in a leading company in UK, British Citizen, seeking a suitable bride. Ref: 575.

14. வயது 28, 5'4", Medical sector, இந்திய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1565.

15. வயது 34 5'5", BA Graduate, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1480.

16. Age 35 5'7", selfemployed, French Citizen, seeking a suitable bride. Ref: 1444.

17. வயது 40, 5'7", Accountant, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1457.

18. துபாயில் வசிக்கும் வயது 28, 5'5", மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1602

19. வயது 32, 6'0", UK PR, looking for a suitable bride. Ref: 1526.

20. வயது 30, 5'6", Accountant, அவுஸ்திரேலியன் PR பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார் Ref: 1413.

21. Age 30, height 5.5" in Sri Lanka, a farmer looking for a suitable bride Ref: 1323

22. Age 28, height 6.0" Engineer working in UK in a company with the work permit visa looking for a suitable bride Ref: 1316

23. Age 35, height 5.11" British Citizen, Engineer woking in a company looking for a suitable bride Ref: 1332

24. Age 30, height 5.5" Engineer working in UK with Work permit visa looking for a suitable bride Ref: 1355

25. Age 38, height 6.0" living in Canada, looking for a suitable bride Ref: 1407

26. Age 28, height 5.9" Canadian Citizen, Graduate is looking for a suitable bride Ref: 1339

27. Age 32, height 5.11" Marine Engineer currently studying in Cyprus looking for a matching bride Ref: 1356

28. Age 36 height 5.8" Canadian citizen, graduate, self employed looking for the suitable bride. Ref: 1409

29. 28 வயது, 6'2", Canadian Citizen, well employed, மணமகன் தகுந்த வாழ்க்கைத் துணையைத் தேடுகின்றார். Ref: 1203

30. 24 years, 5'9", working in a CCTV Company in malaysia, is looking for a suitable bride in Europe. Ref: 1202

31. 31 years, 5'9", Indian Nationality, BA Physicology, seeks a suitable bride. Ref: 1271

32. 37 years, 5'10", British Citizen, Accountant, looking for a matching bride. Ref: 678

33. British citizen 37 years, 5'10", self employed in IT, looking for a suitable partner. Ref: 1199.

34. 40 வயது, 5'9", கனடா பிரஜாவுரிமை பெற்ற, வங்கியில் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1231

35. 55 வயது, 5'6", இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Heathrow Airport இல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref:1235.

36. 42 வயது, 5'6", British Citizen, இலண்டனில் IT Company ல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1213.

37. 42 வயது, 5'6", Swiss Citizen, Engineer தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1167.

38. 49 years, 6', living in France, looking for a suitable bride. Ref: 271

39. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 27 வயது, 6" உயரம், Financial Sector இல் பணிபுரியும் மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 587.

40. British citizen, age 29, 5' 4" Accountant, looking for a suitable groom. Ref: 1130.

41. NHS இல் வேலை செய்யும் 26 வயது, 5'7" உயரம் மணமகன் தகுந்த மணமகளை இலண்டனில் தேடுகின்றார். Ref: 1096.

42. MSC in Civil Engineer, 29 வயது, 5'6" உயரம் மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர் Ref:1091.

43. கனேடிய, இலண்டன் பிரஜாவுரிமைகளைப் பெற்ற வயது 36, உயரம் 5'9" Auto Mobile Engineer ஆக வேலை செய்யும் மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1084.

44. Age 31, tall 5'7", Living in UK, seeks a bride in UK. Ref: 686.

45. ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற 35 வயது, 5'5" உயரம் உடைய மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1055.

46. Age 27, tall 5'4", Living in Colombo, speaking disablity, seeks a suitable bride. Ref: 1137.

## மணமகன் தேவை

1. 21 years, 5'3", Information technology in IT, living in India, seeking a matching groom in UK with citizenship. Ref: 1686

2. வயது 27, 5'6", Bank இல் வேலை செய்யும் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1722

3. வயது 30, 5'4", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1551

4. வயது 23, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு UK Citizen பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1697

5. 25 years, 5'1", BA Graduate, PR in UK, seeking a suitable grrom. Ref: 1580

6. வயது 25, 5'6", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1696

7. வயது 29, 5'4", Doctor, இலங்கையில் வசிக்கும் மணமகள் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1695

8. 40 years, 5'5", MSc in computing, British Citizen, looking for a matching groom. Ref: 1678

9. Age 38, 5'7", working in financial sector, Canadian Citizen, looking for a matching groom. Ref: 1595.

10. வயது 23, 5'2", Medical Student, British Citizen, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1408.

11. Age 25, 5'2", Pharmasist, British Citizen, looking for a educated groom. Ref: 1531.

12. வயது 28, 5'4", BSc Degree Holder, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் நன்கு படித்த தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1596

13. Age 25, 5'2", Computer Engineer, Danish Citizen, looking for a educated groom. Ref: 1527.

14. வயது 25, 5'0", தற்பொழுது France இல் வசிக்கும் பெண்ணுக்கு, ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1475.

15. வயது 27, 5'2", இலங்கையில் Administrative Assistant ஆக வேலை செய்து கொண்டிருக்கும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1459.

16. வயது 25, 5'0", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1525.

17. Age 43, 5'2", working in a University in Sri Lanka, looking for a suitable grrom. Ref: 1246.

18. வயது 27, 5'1", graduate degree holder, இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1433.

19. Age 24, 5'9", BA finished in Jaffna univercity, looking for a suitable groom. Ref: 1599

20. இலங்கையில் வசிக்கும் வயது 30, 5'5", Nurse, மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1598.

21. Age 37, height 5.5" Doctor working in a Jaffna Hospital looking for a suitable Groom Ref: 1063

22. Age 38, height 5.6" Canadian Citizen, Engineer working in a company looking for a suitable Groom Ref: 1322

23. Age 35, height 5.6" French Citizen, in UK Divorcy working as a sales assistant looking for a suitable Groom Ref: 610

24. Age 28, height 5.0" in India looking for a suitable Groom Ref:1347

25. Age 27, height 5.2" British Citizen Accountant working in a company looking for a suitable Groom Ref:1348

26. Age 32 height 5.3" Sri Lanka, finished diploma in Psychology looking for a suitable Groom Ref:1391

27. Age 28, height 5.7" in UK worked as a English teacher in Sri Lanka looking for a suitable Groom Ref:1406

28. Age 30, height 5.7" British citizen, Graduate and working as a Biochemist looking for a suitable Groom Ref:627

29. Age 22, height 5.2" British citizen, Graduate looking for a suitable groom Ref: 1408

30. 24 வயது, 5'3", BSc Degree holder in Mathematics, படித்த, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

31. 28 வயது, 5'0", மணமகள் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1222

32. 41 years, 5'5", finished MBA in UK, seeks an educated groom. Ref: 1230.

33. 38 வயது, 5'4", Doctor, நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1232

34. 43 years, 5'2", working at univercity in sri Lanka, is looking for a grrom with Europe Citizenship. Ref: 1246.

35. 46 வயது, 5'2", British Citizen, divorcee, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1210

36. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 28 வயது, 5'2" உயரம், BSC Degree in Computer Science & Business Management படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1160.

37. இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும் 22 வயது, 5" உயரம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1040.

38. Accountant, British Citizen, 28 age, 5'5" tall, is looking for a well educated groom. Ref: 1102.

39. Nowagien Citizen, 27 age, 5'4" tall, is looking for a suitable groom. Ref: 1104.

40. Royal Scottish Bank Team Leader ஆக இருக்கும் 28 வயது, 5'5" உயரம் கொண்ட மணமகள் Accountant அல்லது IT Qualified மணமகனைத் தேடுகின்றார். Ref: 871

41. British Citizen, 34 age, 5'2" tall, working as a Information Technology, seeks a well educated & employed groom. Ref: 1076.

42. Australian PR, Accountant, 30 age, 5'10" tall, is looking for a educated groom. Ref: 1120.

43. Living in Sri Lanka, a widow, 36 age, 5'3" tall, seeks a matching groom in UK or Sri Lanka. Ref: 1166

44. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Case Progress Officer ஆக Majestic Court இல் வேலை செய்யும் வயது 28, உயரம் 5.2" கொண்ட பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 963.

45. British Citizen, Age 21, Tall 5.5" LLB finished, Looking for a well educated groom. It's better if the groom was born in UK or brought up in UK. Ref: 992.

46. Age 26, Tall 5.3", Finished her MA in French and English, is seeking an educated groom in UK. Ref: 897

47. UK PR, பல்கலைக் கழகத்தில் மூன்றாவது வருடம் படித்துக் கொண்டிருக்கும், வயது 22, உயரம் 5" பெண்ணுக்கு நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1008

48. Working in a Audit Firm in Sri Lanka, Age 29, Tall 5.3", is looking for a Roman Catholic. groom age between 30 – 36. Ref: 913.

49. இலங்கையில் வசிக்கும் வயது 21, உயரம் 5.2" உடைய பெண்ணுக்கு இலண்டன் அல்லது கனடா குடியுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 956.

50. வயது 34, உயரம் 5.3" Sun TV இல் Web Designer ஆக வேலை செய்யும் பெண்ணுக்கு Europe இல் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 991.

51. வயது 26, உயரம் 5.2" IT field இல் வேலை செய்து கொண்டிருக்கும் பெண்ணுக்கு ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். prefer in UK, Canada & Australia. Ref: 1007.

52. வயது 40, உயரம் 5.5" இலங்கையில் வசிக்கும், செவ்வாய் குற்றம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 819

53. Age 37, Tall 5.3", doing Administrative Managementin UK, is looking for a groom in Europe. Ref: 1026

54. இலங்கையில் வசிக்கும் வயது 47, உயரம் 5.6" செவ்வாய் தோஷம் கொண்ட பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1027

55. 27 வயது, 5.8" உயரம், Engineer பெண்ணுக்கு, இலண்டன் பிரஜாவுரிமையுடைய படித்த மணமகனை அவருடைய பெற்றோர் தேடுகின்றனர். Ref: 865

56. British Citizen, Age 28, tall 5", Pharmacist is looking for a well educated groom. Ref: 866

57. Age 26, tall 5.3", completed BSC Microbiology and doing MBA now in India, looking for a well educated groom in Europe. Ref: 882

58. வயது 26, உயரம் 5'. இலங்கையில் ஆசிரியை ஆக பணிபுரியும் செவ்வாய்க் குற்றம் உடைய பெண்ணுக்கு படித்த UK இல் வசிக்கும் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 607

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

## இது வேற ஆட்டோகிராப்!

நம்ம பயபுள்ளைங்க எதுல ஒத்துமையா இருக்குதோ இல்லியோ ஒரு விசயத்துல இல்ல ஒன்னுக்கு விசயத்தில் ஒத்துமையா இருப்பாய்ங்க... ஸ்கூலுக்கு போகும் பொழுது தலையில் புத்தக மட்டைய மாட்டிக்கிட்டு எவனாவது ரோட்டு ஓரமா ஒன்னுக்கு அடிக்க ஆரம்பிச்சா எல்லோரும் பக்கத்துல பக்கத்துல நின்னுக்கிட்டு சொய்ங்ங்ங்ன்னு பம்பு செட்டை திறந்துவிட்டு விடுவானுங்க...

அப்படி ஒருநாள் ஸ்கூலுக்கு போகும் பொழுது ஆரம்பிச்ச விளையாட்டுதான் ஒன்னுக்கு அடிக்கும் பொழுது நம்ம பேரை எழுதுவது...இந்த விளையாட்டும் படிப்படியா டெவலப் ஆனதுன்னு நினைக்கிறேன்... சும்மா ஒன்னுக்கு சொய்ங்ன்னு அடிக்காம அதுல வட்டம் போடுவது, அலைகள் போடுவது, அப்புறம் எவன் முக்கி முக்கி ரொம்ப தூரம் ஒன்னுக்கு அடிக்கிறான் என்ற விளையாட்டுகளின் அடுத்த கட்டமாகதான் இந்த பேர் எழுதும் விளையாட்டு வந்துச்சு.

இந்த விளையாட்டு ஆரம்பச்சதிலிருந்து தண்ணிய நிறையா குடிச்சிட்டு ஒன்னுக்கு போகாம அடக்கி வெச்சிக்கிட்டு ஊட்டுக்கு போகும் பொழுது பேர் எழுத ஆரம்பிப்போம். இதுலயும் நான் ஜெயிக்க முடிஞ்சது இல்ல... ஏன்னா சரவணவேல் என்கிற பேரை எழுத ஆரம்பிச்சி 'ண' வில் ரெண்டு சுழி முடிக்கங்காட்டியும் டேங் காலி ஆகிடும் முக்கி முக்கி அடிச்சாலும் 'ண' வை தாண்ட முடிஞ்சது இல்ல. அப்புறம் பேரை சுருக்கி சரவணன் என்றும் முயற்சி செய்து பார்த்தேன் சுழி போடும் பொழுதே டேங் காலி ஆகிடும்...இதுல எப்பவும் ராமு தான் ஜெயிப்பான். எந்த பிரச்சினையும் இல்ல வெறும் கோடுதான் 'மு' வுக்கு மட்டும் கொஞ்சம் கஷ்டப்படனும் ஆனா சித்திரமும் கைபழக்கம் என்பதுபோல் பழக பழக் வந்துவிடும்.

இதுல முக்கியமா ஒவ்வொரு எழுத்து எழுதி முடிச்சதும் தம் கட்டி பம்பு செட்டை நிறுத்தி நகர்ந்து நின்னுதான் அடுத்த எழுத்த எழுத ஆரம்பிக்கனும் இல்லாட்டி பேர் எழுதும் பொழுது எல்லா எழுத்தும் ஜாயிண்ட் ஆயிடும். அதும் நம்ப பேரை எழுதும் பொழுது 'ன்'க்கு புள்ளி வைக்க தம் கட்டி 'ன'வுக்கு மேல சரியா குறி பார்த்து புள்ளி வைக்கனும். இது எல்லாம் சரியா வராதுன்னு பேரை இங்கிலீஸில் எழுதலாம் என்று முடிவு செஞ்சு என் பேரை சுருக்கி SVEL ஆக்கிய பிறகுதான் போட்டியில் ஈசியா ஜெயிக்க முடிஞ்சுது. சில சமயம் பேரு எழுதும் பொழுது ஒவரா ஆட்டி பக்கதுல இருக்கவன் மேல எல்லாம் பட்டு விடும்... சண்டையில் கிழியாத சட்டை எங்கே கிடைக்கும் என்பது மாதிரி போட்டின்னு வந்துட்டா இது எல்லாம் சகஜம் என்று போய்க்கிட்டே இருக்கனும்.

அப்புறம் ஒன் டேவை 20 20 ஆக்கியது போல அப்புறம் போட்டிய வேற மாதிரி மாத்தி னோம்... மண் சுவத்துல எவன் போர்சா அடிச்சி செங்கல் தெரியவைக்கிறான் என்று போட்டி வைக்க ஆரம்பிச்சோம்... போற வழியில் இருக்கும் மண்சுவத்து வீட்டு சந்தில் நின்னு சொய்ய்ய்ய்ய்ய்ங்ன்னு அடிச்சு யாரு பெருசா செங்கல் தெரிய வைக்கிறாங்கன்னு நடக்கும் போட்டிய ஒரு பத்து நாள் கூட நடத்த முடியாம போச்சு...வீட்டுக்கு சொந்தகாரன் பார்த்து கம்பு எடுத்து அடிக்க வந்ததில் ராமு கீழே விழுத்து முட்டி பேர்ந்து போச்சு அதிலிருந்து அந்த விளையாட்டு நிறுத்தப்பட்டுவிட்டது.

அப்புறம் செடியில் இருக்கும் பழுத்த இலைய குறிபார்த்து அடிப்பது, பாஸா பெயிலா பூ மேல குறிபார்த்து அடிப்பதுன்னு பலவகையில் இந்த விளையாட்டு டெவலப் ஆனது. சில சமயம் முக்கி முக்கி அடிக்கிறோம் என்ற விளையாட்டில் அந்த பக்கம் போற ஆளுங்க மேல பட்டு திட்டுவாங்கியதும் உண்டு.அப்புறம் குழிப்பறிச்சு அதுல அடிச்சு குட்டி குட்டி குளம் ஏற்படுத்தி அப்பவே நாங்க முன்னோடியா இருந்திருக்கோம் என்று நினை ச்சுப்பார்க்கும் பொழுது ரொம்ப பெருமையா இருக்கு:)))

*- குசும்பன்*

## சினிமா அபத்தங்களின் பட்டியல் சில...

இரட்டைப் பிள்ளைகளில் ஒருவர் கெட்டவராக இருப்பார்.

ஹீரோ போலீசா இருந்தா,வேலையில் இருந்து நீக்கப்பட்டதும் தான் குற்றவாளியை கண்டு பிடிப்பார்.

ஹீரோயின் சேலையை வில்லன் பிடுங்கியதும் எங்கிருந்தாவது ஓடி வந்து தன்னுடைய சட்டையை கழட்டிக் கொடுப்பார்.உடனே அடுத்த சீனில் ஹீரோயின் அரைகுறை ட்ரெஸ்ஸில் ஆட இவரும் கூட ஆடுவார்.

ஹீரோவோ, ஹீரோயினோ கடைசி நேரத்தில்.. அதிலும் ரயில்வே ஸ்டேசனில் தான் ஒன்னு சேருவார்கள்.

ஹீரோ அடிவாங்கும் போது கூட முகத்தை சுழிக்க மாட்டார்.ஆனால் தாயோ கதாநாய கியோ காயத்தை துடைத்தால் வலியால் துடிப்பார்.

வெடிக்கப் போகும் வெடிகுண்டின் இரண்டு வயர்களில் எதை கட் பண்ணுகிறாரோ அதுதான் சரியாக இருக்கும்.

முந்தானைத் தலைப்பு நழுவியதும் ஹீரோ விடம் வெட்கப்படும் ஹீரோயின்.இந்தப் பக்கம் திரும்பி நம் எல்லாருக்கும் காட்டுவார்.

வில்லன் என்ன செய்தாலும் பொறுமையாக இருக்கும் ஹீரோ, தன் மனைவியின் தாலியோ, அல்லது தங்கச்சியின் கற்போ?..பறிபோக போகிறது என்றால், அப்படியே ஆவேசமாகி விடுவார்.

ஹீரோக்கள் எல்லாரும் சமுதாயத்தை பற்றின அக்கறையோடு இருக்க, ஹீரோயின்கள் மட்டும் சிறுகுழந்தைகளுடன் விளையாடிக் கொண்டு, ஹீரோக்களை துரத்தி துரத்தி காதலித்துக் கொண்டு இருப்பார்கள்.

(வெறுப்பா இருக்கு... கொஞ்சம் திருந்துங்கப்பா..)

*- டீச்சர்*

## ஆடியபாதம் ஜோக்ஸ்

ஆடிய பாதம் ஏன் சீனி டப்பாவை அடிக்கடி திறந்து பார்க்கிறாரு?

டொக்டர் சொன்னவாரம், சீனியை அடிக்கடி செக் பண்ண சொல்லி.....

⊗ ⊗ ⊗

உன்னை பார்த்தால் பிச்சைக்காரன் மாதிரி இல்லையே அப்பா?

அதனால் என்ன, உங்களை பார்த்து தர்ம மகராசன் என்று நான் சொல்லவில்லைய்யா ஐயா?

⊗ ⊗ ⊗

ஆசிரியர் - சாஜகான், தாச்மகால் கட்டினார், கலிங்கத்துமன்னர்கள்கோட்டைகட்டினார்கள், சோழ மன்னர் என்ன கட்டினார்?

மாணவன் - வேட்டி கட்டினார்.

⊗ ⊗ ⊗

கணவன் - எங்களுக்கு கலியாணம் நடந்து 20 வருசமாய் போச்சுது, நீ ஒரு நாளும் கோப பட்டது கிடையாது. நான் பேசினாலும் நீ திருப்பி பேசினது கிடையாது. நீ எப்படி உன் கோபத்தை அடக்கிறாய்?

மனைவி - நான் உங்களில கோபம் வந்தால், ரொயிலட்டை சுத்தம் செய்ய போயிடுவன்.

கணவன் - அப்படியா? அது என்னண்டு உன் கோபத்தை அடக்கிறது?

மனைவி - உங்கட ருத் பிரசால தான் ரொயிலட்டை சுத்தம் செய்யிறான்.

⊗ ⊗ ⊗

ஆடிய பாதம் - அரை மணித்திலமாய் கரடியாய் கத்திறேன் எங்க துலைந்தனி?

முத்தழகி - எனக்கு கரடி பாசை தெரியாது என்று தெரியாத உங்களுக்கு......?

*- பொன்னி (நன்றி யாழ்)*



# அங்காடித் தெருவை பீப்லி லைவ் தள்ளியது ஏன்?



நான் இந்தித் திரைப்படங்களை அதிகம் பார்ப்பது இல்லை. ஆனால் ஒரு சில நல்ல படங்கள் வரும்போதும் விருதுகள் பெறும்போதும் அதைப் பார்த்ததுண்டு. அதில் பா, 3 இடியட்ஸ் போன்ற நல்ல படங்கள். இந்தி திரையுலகில் நம்பிக்கை தரும் நட்சத்திரமாக ஆமிர்கான் இருக்கிறார். அவரது தயாரிப்பில் வந்திருக்கிறது பீப்லி லைவ் என்ற படம்.

பளீரென்ற காமிரா கிடையாது. வண்ண வண்ண குட்டிக் குட்டிப் பாவாடைகள் அணிந்து வரும் ஹிரோயின் கிடையாது. மார்புக் கச்சை கீழிறங்க கவர்ச்சி ஆட்டம் போடும் பாடல்கள் கிடையாது. பறந்து பறந்து அருவியில் குதித்த படி சண்டைக் காட்சி கிடையாது. இப்படி நிறைய கிடையாதுக்கள்.

ஒரு வரியில் சொல்வதென்றால் விவசாயிகள் தற்கொலையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம்.

அண்ணன், விவரமில்லாத தம்பி. இருவரும் விவசாயிகள். தம்பிக்கு மனைவி, 3 குழந்தைகள். படுக்கையில் கிடந்து எந்நேரமும் கத்திக் கொண்டிருக்கும் வயதான அம்மா, அழகில்லாத கிராமம். விவசாயத்தை தவிர ஒன்றும் தெரியாத ஊர். மழையில்லை. கடன் அதிகமானது. வறுமை தாண்டவமாடியது. விளைவு நிலத்தை விற்க வேண்டிய நிலை.

உள்ளூர் அரசியல்வாதியிடம் உதவி கேட்கிறார்கள். வங்கியில் கடன் வாங்கத் தெரிந்தது அல்லவா? போய் அவர்களிடமே கேள். உன் நிலத்தை காப்பார்கள் என்கிறார். அப்போது தற்கொலை செய்தால் அரசாங்கம் ஒரு லட்சம் தருவதாகக் கூறுகிறார் அந்த அரசியல்வியாதி.

அதைப் பற்றிப் பேசிக் கொண்டே வீடு வருகிறார்கள். நடந்துநடந்துநடந்துகாடு, மேடெல்லாம்கடந்துவீடுவரும் போது இரவாகிவிடுகிறது. இதில் ஒளிப்பதிவின் மாயாஜாலம் அருமை. கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சம் குறைந்து வீட்டுக்குள் வரும்போது ஒன்றுமே தெரியாது. விவசாயிகளின் நிலையும் அதுதான். வெளிச்சத்திலிருந்துஇருளுக்கு. (அந்தளவுக்கு ஒளி குறைவு. இயற்கை வெளிச்சம் மட்டுமே வைத்து படம் எடுத்திருப்பார்கள் என நினைக்கிறேன்.)

மனைவியோ கடும் கோபத்தில் அடிக்கிறாள் கணவனை. விவசாயிகள் தற்கொலை செய்தால் ஒரு லட்சம். அண்ணன், தம்பி பேசி முடிவெடுக்கிறார்கள். தம்பி தற்கொலை செய்வதாக முடிவாகிறது. இதைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதை உள்ளூர் பத்திரிகை நிருபர் கேட்கிறார். விஷயம் வெளியே வருகிறது. பிறகென்ன நாட்டின் முக்கிய தொலைக் காட்சிகளில் செய்தி வெளியாகிறது. பரபரப்பாகிறது.

வீட்டின் முன் குவிகிறது ஒட்டுமொத்த மீடியாவும். ஒவ்வொரு நிருபரும் மைக்கை வைத்துக் கொண்டு காட்டுக் கத்தல் கத்துகிறார்கள். நாதா தற்கொலை செய்வார் என்கிறது ஒரு சேனல். இல்லை என்கிறது மற்றொன்று. விவசாய அமைச்சராக நஷ்ருதீன் ஷா. விவசாயிகள் தற்கொலை சொந்தப் பிரச்னையால் ஏற்பட்டது என்று பேட்டி கொடுக்கிறார்.

அரசியல்வாதிகள் தங்கள் பங்குக்கு குட்டையை குழப்புகிறார்கள். உள்ளூர் சாதிக் கட்சித் தலைவர்கள் அதற்கு மேல். மீடியாக்கள் சூடான செய்தி ஒன்று வேண்டும். அதையும் தாங்கள் மட்டுமே முதலில் தர வேண்டும் என்ற வேகம். அதிகாரிகள் கூட்டம் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறது. தாங்களாகவே உள்நுழைய முடியாது. உயர் நீதிமன்ற உத்தரவு வர வேண்டும் என்கிறார் வேளாண் அமைச்சக செயலாளர். இப்படி அரசியல்-ஊடகம்-அதிகாரவர்க்கம் என்று மும்முனைத் தாக்குதலில் விவசாயி சிக்கி சீரழிகிறான். கடைசியில் எதிர்பாராத திருப்பத்துடன் கதை முடிகிறது.

இதில் ஊடகத்தை கிழி கிழியென்று கிழித்திருக்கிறார்கள். முக்கியமாக 24 மணி நேர செய்திச் சேனல்களை. வீட்டைச் சுற்றிலும் மீடியாக்கள், போலீஸ் படை. வெளியே எங்கே சென்றாலும் கேள்வி கேட்கிறது போலீஸ். அதனால் அதிகாலையில் யாருக்கும் தெரியாமல் கையில் தண்ணீர் வாளியுடன் வயல் பக்கம் ஒதுங்குகிறார் நாதா. அதையும் படம்பிடிக்கிறது ஒரு சேனல். திடீரென்று காணாமல் போகிறார் அவர்.

உடனே தொலைக்காட்சி நிருபரே புலன் விசாரணையில் இறங்குகிறார். நாதா இங்குதான் மலம் கழித்தார். இதோ கடைசியாக இங்குதான் உட்கார்ந்திருக்கிறார். தண்ணீர் பாருங்கள் எப்படிப் போயிருக்கிறது என்று விளக்குகிறார். மீடியாவை இதைவிட கூர்மையாக விமர்சிக்க முடியாது. அந்த வகையில் பீப்லி லைவ் சூப்பர்ப்.

கிராமத்தின் ஓரிடத்தில் எலும்பும் தோலுமான ஒரு விவசாயி தனியே கிணறு வெட்டிக் கொண்டிருக்கிறார். இத்தனை களேபரங்களுக்கிடையில் அவருக்கு என்ன குறை என்று யாரும் பார்ப்பதில்லை. தற்கொலை செய்கிறேன் என்று கூறிய ஒரே காரணத்துக்காக நாட்டின் கவனமெல்லாம் நாதா மேல்தான் இருக்கிறது. அவருக்குள்ள கஷ்ட நஷ்டங்கள் எல்லாம் அத்தனை விவசாயிகளுக்கும் உண்டு என்பதை யாரும் சிந்திக்கிவில்லை. ஆனால் உள்ளூர் நிருபர் மட்டும் மனதில் நெருடலோடு இருக்கிறார். திடீரென்று அந்த வயதான விவசாயி தான் வெட்டிய குழியிலேயே இறந்து கிடக்கிறார். பட்டினியால் செத்து விட்டதாகக் கூறுகிறார்கள். மனம் கனத்து இருக்கிறான் நிருபன்.

இத்தனைக்கும் காரணம் பீப்லியில் இடைத்தேர்தல் நடைபெறப் போகிறது. அதனால் அரசியல்வாதி-ஊடகம் ஆகியவற்றின் கவனம் பெறுகிறது. அதுவும் இல்லாவிட்டால் இந்திய விவசாயிக்கு எந்த நாதியும் இல்லை.

நாதாவின் நிலையைக் கண்டு கருத்துக் கணிப்பு எடுப்பது, ஊர்வலம் போவது, பல்கலைக்கழக மாணவர்கள் கையில் மெழுகுவர்த்தியுடன் நாட்டைப் பற்றிக் கவலை கொண்டு உட்கார்ந்திருப்பது. பிறகு இரவில் பார்ட்டிக்குப் போவது என்று எல்லா அபத்தங்களையும் விமர்சிக்கும் படம் இது. இப்படி ஒரு படம் துணிச்சலுடன் எடுத்ததற்காகவே ஆமிர்கானுக்கு ஆஸ்கர் தர வேண்டும். அங்காடித் தெருவுக்கும், பீப்லி லைவ்வுக்கும் கடைசி நேரப் போட்டி. அதில் பீப்லி லைவ் ஆஸ்கர் விருதுக்கு அனுப்ப தேர்வு செய்யப்பட்டுள்ளது.

அங்காடித் தெருவுக்கு ஏன் ஆஸ்கர் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்பதை விளக்க வேண்டுமா?

நாம் இன்னும் அரிவாள், பஞ்ச் டயலாக், காதல் கத்திரிக்காய், குடும்பக் கதை இதைவிட்டு வெளியே வரவில்லையே. சமுதாயப் பிரச்னை பற்றி படம் எடுத்தாலும் காதல், குத்தாட்டம் என்று இல்லாமல் படம் எடுப்பதும் இல்லை.

*தமிழில் பீப்லி லைவ் போல படம் எப்போதும் வராது.*

*- ரகுநாதன்*

# தொட்டுப் பார்!

## திரை விமர்சனம்



பேரரசுவிடன் உதவியாளராக இருந்த அனுபவத்துடன் புதுமுக இயக்குனர் நந்து இயக்கியிருக்கும் படம் தான் தொட்டுப்பார். தோல் பாவை தியேட்டர்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கும் இப்படத்தில் கூத்துப்பட்டறையை சேர்ந்த விதார்த் நாயகனாகவும், லட்சணா நாயகியாகவும் அறிமுகமாகியிருக்கிறார்கள் ரமணா வில்லனாக நடித்திருக்கிறார். அழகம்பெருமாள், வி.எம்.சி.ஹனீபா, சிங்கமுத்து, கஞ்சா கருப்பு, மயில்சாமி என பலரும் இருக்கிறார்கள்.

அறியாமல் செய்யும் தவறுகள் பின்னாளில் ஒரு இளைஞனைத் தொட்டுப் பார்க்கும் போது நடக்கும் சம்பவங்கள்தான் தொட்டுப்பார் படத்தின் கதை. மகாராஜா கிராமத்து இளைஞன். தனது ரேஷன் கார்டு மூலம் குற்றவாளிகளுக்கு ஜாமின் போட்டுக் கொடுக்கிறான். இதன் மூலம் கிடைக்கும் பணத்தில் சந்தோஷமாக இருகிறான். முன்னே பின்னே தனக்கு அறிமுகமில்லாத ரவுடி ஒருவனை மகாராஜா போலீசில் இருந்து விடுவித்து விட போனவன் சும்மா போகாமல் அமைச்சரேயே போட்டுத் தள்ளிவிட்டுப் போகிறான். அவன் விடுவிக்கப்பட காரணமாக இருந்த மகாராஜாவை போலீஸ் துரத்த சென்னையில் அடைக்கலமாகிறான். அதைத் தொடர்ந்து அவன் சந்திக்கும் பிரச்சனைகள்தான் மீதி படம்.

ஹிரோ மகாராஜா கேரக்டரில் விதார்த் நடித்திருக்கிறார். கிராமத்து இளைஞனாகவே அச்சு அசலாக இருக்கிறார். கொடுத்த கேரக்டரை சரியாக பண்ணி விட்டுப்போகிறார். கதாநயாகி கனிமொழியாக வருகிறார் லக்க்ஷனா. இவர் ஏற்கனவே ஒன்றிரண்டு படங்களில் தலைகாட்டியவர். இந்தப் படத்தில் இவருக்கு இதற்கு முந்தையப் படங்களைப் போலவே சுமாரான கேரக்டர். படத்தில் மெயின் கேரக்டராக வருகிறார்கள் ரமணாவும் அனுஹாசனும்.

வில்லன் பாத்திரத்தில் அரவாணியாக வந்து மிரட்டியிருக்கிறார் ரமணா. அவரின் வித்தியாசமான இந்த முயற்சிக்கு ரசிகர்களிடம் நிச்சயம் கைத்தட்டல் கிடைக்கும். இன்னொருவர் அனுஹாசன். சென்டிமென்டின் மொத்த உருவமாக படத்தில் வாழும் அனுஹாசன் நம் நெஞ்சைத் தொடுகிறார். இவர் கோர்ட்டில் சொல்லும் அந்த வசனம் மனதை உலுக்குவதாக இருக்கும்.

சிங்கமுத்து, ஷகீலா ஓரிரு காட்சியில் மட்டும் வந்து போகிறார்கள். கவிதை எழுதுவதுபவராக வரும் மயில்சாமி என்ன எழுதுகிறார் என்னும் குட்டு உடையும் போது குபீர் சிரிப்பு. போலீஸ் சப் இன்ஸ்பெக்டராக வரும் ஹனீபா நேர்மையில்லாத போலீஸாராக வந்து இறந்து போகிறார்.

நீரவ் ஷாவின் உதவியாளர் சசிகுமார் இப்படத்தின் மூலம் ஒளிப்பதிவாளராக அறிமுகம் ஆகியிருக்கிறார். புதியவரென்பதாலோ என்னவோ காட்சிகளில் சிலஇடங்களில் குழப்பம் தெரிகிறது.

ஸ்ரீகாந்த்தேவா இசையமைத்திருக்கிறார் இரண்டுபாடல்கள் ரசிக்கிறரகம். அதிலும் ஓலை வெடி ஓலை வெடி பத்த வைச்சேன், பாடல் தாளம் போட வைக்கிறது பின்னணி இசையிலும் ஆங்காங்கே மிரட்டியிருக்கிறார்.

திரைக்கதையில் இன்னும் கொஞ்சம் விறுவிறுப்பும் அழுத்தமான காட்சிகளையும் சேர்த்திருந்தால் தொட்டுப்பார் மனதை மெல்லத் தொட்டுப் போகாமல் ஆழமாக தைத்திருக்கும்!

*எங்கும் சன் டீ.வியின் எந்திரன் காய்ச்சல் பிடித்திருக்கும் நிலையில் இப்படியான திரைப்படங்கள் வந்தால் அவை வருவதும் தெரியாது போவதும் இரசிகர்களுக்கே தெரியாமலிருக்கும். கடைசியில் தயாரிப்பாளர்கள் தலையில் தான் இடிவிழும்.*

*- சிவராஜன்*




NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- ✓ CRIME
- ✓ CONVEYANCING
- ✓ MATRIMONIAL
- ✓ IMMIGRATION
- ✓ TRAFFIC MATTERS
- ✓ LANDLORD & TENANTS
- ✓ POLICE STATION MATTERS
- ✓ EMPLOYMENT MATTERS
- ✓ WORK PERMITS

# Despicable Me

திரை விமர்சனம்



க்ரூ (Gru), அகில உலகின் வில்லாதி வில்லானாக, பிறர் கண்டு அஞ்சி நடுங்கும் பொல்லாதவனாக இருக்க விரும்புகிறான். அவனது இந்த விருப்பை நிறைவேற்ற வயது போன டாக்டர் நெஃபாரியோவின் (Dr. Nefario) கண்டுபிடிப்புக்கள் துணை நிற்கின்றன. ஆனால் க்ரூவின் லட்சிய பாதையில் குறுக்கே வருகிறான் வெக்டர். புதிய தலைமுறையின் இளம் பிரதிநிதியான வெக்டரின் ஜிகிடித்தனங்கள் க்ரூவை உலகின் மாபெரும் வில்லானகும் லட்சிய பாதையில் பின்னடைய செய்கின்றன. வெக்டரை போட்டியில் பின்னுக்கு தள்ள விரும்பும் க்ரூ, நிலவைத் திருடி விட திட்டம் தீட்டுகிறான். கில்லாடி வெக்டரை கவிழ்க்கும் திட்டத்தில் பயன்படுத்தும் நோக்கில் மூன்று அனாதை சிறுமிகளையும் க்ரூ தத்தெடுத்துக் கொள்கிறான்.

பிறர் மனதில் இடம்பிடிப்பதற்கு வில்லத்தனத்துடன் கூடிய அசரவைக்கும் சாகசங்களை விட பாசம் நிறைந்த அன்பு போதுமானது என்பதை நகைச்சுவையுடனும், நெகிழவைக்கும் தருணங்களுடனும் பார்வையாளர்களிடம் எடுத்து வருகிறது Despicable Me எனும் இந்த 3D அனிமேஷன் திரைப்படம்.

கண்களை அகல விரித்து வியக்க வைக்கும் அனிமேஷன் உத்திகளோ, அதிரடியான காட்சி அமைப்புக்களோ இன்றி காதல் கொண்ட அருவிபோல் நிதானமான வேகத்தில் நகரும் இத்திரைப்படத்தின் கதாபாத்திரங்கள் தங்கள் மென்மையால் ரசிகர்கள் மனதை வேகமாக வந்தடைகிறார்கள்.

சிறுவயது முதல் நிலவிற்கு செல்லும் ஆசையை தன் மனதில் இருத்தி வளரும் க்ரூ, அதற்காக நிகழ்த்தும் கண்டுபிடிப்புகளிற்கும், கனவுகளிற்கும் அவன் சொந்த தாயிடமிருந்துகூட ஊக்கம் கிடைப்பதில்லை. சிறுவயதில் அவனின் ஒவ்வொரு முயற்சிக்கும் கிடைப்பது ஏளனப் புன்னகையுடன் கூடிய க்ர்ர்ர்ர் எனும் உறுமல் மாத்திரமே. ஆனால் அவன் தன் கனவைக் கைவிடுவதாக இல்லை. உதாசீனங்கள் அவன்மீது ஏற்படுத்திய வடு அவனுடன் கூடவே வளர்ந்துவிடுகிறது. பிறர் கவனத்தை தன் பக்கமாக திருப்ப வேண்டும் எனும் ஏக்கத்தை மௌனச் செடியாக தன்னுள் வைத்திருக்கிறான் க்ரூ. இதனால் பிறர் தன்னைக் கண்டு அஞ்சும் அளவிற்கு அவன் தன்னை மெல்ல மெல்ல மாற்றிக் கொள்கிறான். அச்சம் மூலம் அவன்மீது பிறரின் கவனத்தை திருப்ப முனைகிறான் க்ரூ. ஆனால் அவன் மனதிலோ தீமை இல்லை. தன்னை ஒரு பொல்லாதவனாக காட்டி பிரபலமாக இருப்பதே அவன் நோக்கம். இந்தப் போலி பொல்லாதவன் பாத்திரத்திற்கு உருவம் தந்திருக்கும் க்ரூ ஒரு சிறப்பான படைப்பு.

பெங்குவின் போல் தோற்றம் தரும் க்ரூவும், அவனது நடையும், உடையும், வில்லத்தனங்களும் சிரிக்கவே வைக்கின்றன. ஜேம்ஸ்பாண்டிற்கு புதிய புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்கி தரும் Q போலவே க்ரூவிற்கு வாய்த்த அரிய பொக்கிஷம்தான் டாக்டர் நெஃபாரியோ. அவரின் கண்டுபிடிப்புக்கள் எல்லாம் பார்வையாளனை சிரிப்பு டைனமைட்டுகளாக கொளுத்துகின்றன. க்ரூவிற்கும், டாக்டர் நெஃபாரியோவிற்கும் அடிபொடிகளாக வரும் மஞ்சள் வண்ண மினியோன்கள் படத்தின் ஆரம்பம் முதல் இறுதி வணக்கம் வரை அடிக்கும் அபத்த லூட்டிகள் ரசிக்க வைக்கின்றன.

மிகவும் கூலான வாலிப வில்லனாக அறிமுகமாகும் வெக்டர் பாத்திரம் துரதிர்ஷ்டவசமாக அதிக ஈர்ப்பை ஏற்படுத்த தவறிவிடுகிறது. ஆனால் க்ரூவின் வாழ்வின் போக்கையே மாற்றி அமைக்கப் போகும் அனாதை சிறுமிகளில் அன்னியெஸ் எனும் சிறுமியின் பாத்திரப் படைப்பு அருமை. உடனே அள்ளிக் கொஞ்ச வேண்டும்போல் மென்மையான தேவதைக் குறும்புகளோடு உலாவரும் அன்னியெஸ் பல தருணங்களில் மனதை நெகிழ வைத்துவிடுகிறாள்.

அந்த மூன்று அனாதைச் சிறுமிகளிற்கும் க்ரூவிற்கும் இடையில் பிடிவாதமாக வேர்விட ஆரம்பிக்கும் உறவுதான் படத்தின் பலமான அம்சம். தத்தெடுக்கப்பட்ட சிறுமிகளால், அன்பு என்பது அரிதான ஒன்றாக இருக்கும் க்ரூவின் வாழ்க்கை மெதுவாக மாற்றம் பெற ஆரம்பிக்கிறது. அன்பையும், அரவணைப்பையும் வேண்டும் சிறுமிகளிற்கு அதனை தர மறுக்கும் க்ரூ, அவனையறியாமலே அவற்றை அச்சிறுமிகளிற்கு வழங்க ஆரம்பித்து விடுகிறான். படிப்படியாக ஒரு பொறுப்பான தந்தையாக அவன் மாற்றம் கொள்கிறான். சிறு வயதில் அவனிற்கு கிடைத்திருக்காத அன்பை அவனிடமிருந்து எதிர்பார்த்து அவனை சந்தேகத்துடன் பார்க்கும் மூன்று சிறுமிகளும் இயல்பாகவே அவனை நேசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். சிறுமி அன்னியெஸ், க்ரூ மீது காட்டும் அன்பு அசர வைக்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது. இந்த அழகான உறவின் மலர்ச்சி ரசிகனை மென்மையாக ஆனால் உறுதியான வகையில் இபாத்திரங்களுடனும், திரைப்படத்துடனும் பிணைத்துவிடுகிறது. ஆனால் தன் லட்சியக் கனவா இல்லை பாசமா எனும் கேள்வி க்ரூ முன் எழுகையில் அவன் எடுக்கும் முடிவு அவன் வாழ்வையே மாற்றி விடுகிறது.

வெக்டரின் மாளிகைக்குள் பொருட்களை சிறிதாக்கும் துப்பாக்கியை திருடப்போகும் காட்சிகள், நிலவைத் திருடியபின் நடக்கும் உச்சக்கட்டக் காட்சிகள் என்பன நல்ல விறுவிறுப்பை அளிக்கும் வகையில் உருவாக்கப் பட்டிருக்கின்றன. சிறுமிகளிற்கும், க்ரூவிற்கும் இடையில் வரும் புத்தகம் படிக்கும் காட்சிகள் மனதை அள்ளி எடுக்கின்றன. க்ரூவின் நடனம்கூட ரசிக்ககூடியதாகவே இருக்கிறது. க்ரூ நிலவைத் திருடியவன்தான் ஆனால் அவன் வாழ்வை பூரணமான ஒன்றாக மிளிர வைப்பது அன்பு மட்டுமே. Despicable Me, ஆர்பாட்டங்கள் அற்ற, தொடுவது தெரியாமல் உங்களைத் தொட்டுவிடும் ஒரு நுண் தென்றல்.

*- கனவுகளின் காதலன்*

# சினித்துளி

## இந்தியாவின் அவதார்-எந்திரன்



இந்தியாவின் அவதார் எந்திரன் என்றால் மிகையல்ல, என்று இயக்குநர் கே.பாலச்சந்தர் கூறியுள்ளார். ரஜினி நடித்து வெளியாகியுள்ள எந்திரன் படம் பார்த்தபின் அப்படத்தின் இயக்குநர் ஷங்கரைப் பாராட்டி இயக்குநர் கே. பாலச்சந்தர் கடிதம் எழுதியுள்ளார். எந்திரனை இந்தியாவின் அவதார் என்றும், சங்கரை இந்தியாவின் ஜேம்ஸ்கேமரூன் என்றும், சன் பிக்சர்ஸை இந்தியாவின் எம்.ஜி.எம் என்றும் கூறுவதில் மிகையில்லை, என்றே நினைக்கிறேன்.. என்று எழுதியுள்ளார் அந்தக் கடிதத்தில்.

ஐயா காமெடி கீமடி பண்ணேல்லத் தானே? நூறு படமெடுத்தால் மட்டும் போதாது. கொஞ்சம் யோசிங்க! அவதார் எங்க எந்திரன் எங்க ?

## ஆர்யாவுக்கு வில்லனாக மாதவன்!



தயாநிதி அழகிரி தயாரிக்கும் புதிய படம் 'வேட்டை'. இந்த படத்தில் ஆர்யா ஹீரோவாக நடிக்கிறார். பையா படத்தினைத் தொடர்ந்து லிங்குசாமி இந்த படத்தை இயக்குகிறார். தற்பொழுது இப்படத்தின் ஒரு கதாபாத்திரத்தில் மாதவன் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. முதலில் 'வேட்டை' படத்தில் மாதவன் நடிக்கவில்லை என்றே கூறப்பட்டது. ஆனால் தற்பொழுது இப்படத்தில் மாதவன் வில்லனாக நடிக்கவுள்ளதாக தெரிகிறது. இது மாதவன் வில்லனாக நடிக்கும் 2 வது படம்.

## 200 கோடியில் அடுத்த படம்!



நடிகர் கமலஹாசனின் 'மன்மதன் அம்பு' படத்தின் படப்பிடிப்பு முழுவதுமாக முடிந்து போஸ்ட் புரடெக்ஷன் வேலைகளும் முடியும் நிலையில் இருக்கிறது. இந்தப் படத்துக்கு கதை, திரைகதை, வசனம், பாடல்கள் என்று பட்டையைக் கிளப்பியிருக்கிறார் கமல், இந் நிலையில் 200 கோடியில் படமொன்றை இயக்கவிருக்கிறார் என்ற செய்தி கோடம்பாக்கத்தில் பரபரப்பாக பேசப்பட்டுவருகிறது.இந்தப் படம் மர்மயோகியாகவோ, மருதநாயகமாகவோ இருக்கலாம்.


தற்பொழுது படத்துக்கு ஸ்கிரிப்ட் எழுதிக்கொண்டிருக்கிறாராம். இந்தப் படத்தில் மலையாள சூப்பர் ஸ்டார் மோகன்லால், சூர்யா இருவரும் முக்கிய பாத்திரங்களில் நடிக்க இருக்கிறார்களாம்.

## எந்திரனுக்குப் போட்டி!



எந்திரனை விட சிறந்த சயின்ஸ் பிக்ஸன் படம் ஒன்றை மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவாக்க வேண்டும் என்ற திட்டத்தில் இருக்கிறார் ஷாருக்கான். அதற்கான முயற்சியில் இறங்கியிருக்கிறார் ஷாருக்கான் என்கிறார்கள். இதனால் மிகப்பெரிய தொழில்நுட்ப வல்லுனர்களை தன் இல்லத்திற்கு அழைத்து 'எந்திரனை' விட சிறந்ததாக தனது படத்தை உருவாக்க வேண்டும் என்பது பற்றி பகீரங்கமாக விவாதித்திருக்கிறார் ஷாருக்கான். படத்தின் பெயர் 'ரா.ஒன்'.

சூப்பர் ஹீரோ கதையான 'ரா.ஒன்' விளையாட்டினை மையப்படுத்தி உருவாகவுள்ளதாம் அந்தப்படம். மொத்தத்தில் எந்திரனை ஷாருக் எப்படி மிஞ்சப் போகிறார் என்று பார்ப்போம்.

A KEY TO WEIGHT LOSS & KEEP FIT
A surprisingly easy way to burn fat quickly without an diet or exercise

Contact : S.Haria
07861 672 963
காலை உணவின் முன் இரண்டு மாத்திரைகளை எடுக்கவும்.
இருபது நிமிடங்களின் பின் காலை உணவை உண்ணலாம்.
ஆனால் உங்களுக்குப் பசி எடுக்காது.
'கொலஸ்ரறோல்' நீரிழிவுப் பிரச்சனையா? தீர்விற்கு எம்மை அணுகவும்.
Another full supplement available to control your cholestrol and Diabetics

உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல்களா? காலத்தை வீணடிக்காமல் உடனே தொடர்புகொள்ளுங்கள்.
ஆண்கள், பெண்களுக்கான Health Problems & Sexual Problems பிரச்சினைகளுக்கு மூலிகை வைத்தியத்தில் மூலம் உடன் தீர்வு காண இன்றே அழையுங்கள்.

இன்றே எங்கள் சிறப்பான வைத்தியர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.
(தமிழ் பெண் வைத்திய நிபுணரிடமும் தொடர்புகொள்ளலாம்)
herbalAid
10 Park Avenue, Southall, Middx UB1 3AQ
Tel : 02088430330
Mobile : 07546651898
herbalaid@hotmail.co.uk

## உங்கள் உடனடித் தேவைக்கு கையில் பணம் இல்லை என்ற கவலையா?



நாங்கள் இருக்கும் போது நீங்கள் இப்படி தலையைப் பிய்க்க வேண்டிய அவசியமில்லை.

உங்களுக்கு கிடைக்கும்

- Benefit Cheques
- Inland Revenue
- Insurance Refund
- Wages
- Commissions
- Lottery Winning Cheques
- A/C payee

இவற்றை 4% - 6% வரையான கட்டணத்துடன் உடனே பணமாக்கிக் கொள்ள அழையுங்கள்.

**020 7243 1417**

## முகவர்கள் தேவை

பிரித்தானியாவின் எந்த மூலையில் நீங்கள் வர்த்தக நிறுவனம் வைத்திருந்தாலும் நீங்களும் முகவர் ஆகலாம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

**020 7243 1417**



**Cheque Line**

31, Queens Way, London, W2 4QJ.




Lee High Road,
London SE12 8RU
tel: 020 8852 5234

வீடுகள் வாங்க... விற்க... வாடகைக்கு பெற...

அழையுங்கள்..... **Raj: 020 8852 5234**

Bairstow eves
Countrywide

email: lee@bairstoweves.co.uk
www.bairstoweves.co.uk
www.rightmove.co.uk

OPEN 7 DAYS A WEEK

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்!!!

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
**Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
**சவுத்ஹோல் டிராவல்**
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

ATOL PROTECTED 5555